பக்கங்கள்: முப்பத்துஇரண்டு + II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (17.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 142



02 எழுந்தது சென்னை



03 போர்க் கொடி தூக்குகிறார் முரளி



22 யுத்தம் செய்



25 அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்



31 முதுகெலும்பு இல்லாதவரின் நரித்தனம்

### கசிந்தது ஐ.நா. அறிக்கை

# இறுதிப் போரில் மக்களின் பேரிடிப்புக்கு இலங்கை அரசே முக்கிய பொறுப்பாளி

## பாரதூரமான 5 குற்றச்சாட்டுகள் கொழும்பு மீது சுமத்தப்பட்டன

கொழும்பு, ஏப்ரல் 17

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் பாதிப்புக்களில் பெருமளவிலானவை அரச படையினரின் எறிகணை மழையினால் ஏற்பட்டவையே என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை.

அறிக்கையின் ஒரு பகுதி நேற்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் வெளியானது. ஐ.நாவினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதும், அறிக்கை வெளியானது குறித்து ஐ.நா. விசனம் அடைந்துள்ளது. அடுத்த வாரத்தில் முழு அறிக்கையும் வெளியிடப்படும் என்றும் அது தெரிவித்துள்ளது.

நிபுணர் குழு தனது அறிக்கையை கடந்த 12 ஆம் திகதி பான் கீ- மூனிடம் கையளித்தது. அது உடனடியாக இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த விவரங்கள் வருமாறு :-

இறுதிப் போர் குறித்து இலங்கை அரசு தற்போது கூறிவருவதற்கு மிகமிக வேறான பக்கத்தை நிபுணர் குழுவின் நம்பத் தகுந்த குற்றச்சாட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன. ''பொதுமகன் ஒருவருக்குக் கூட பாதிப்பு'' ஏற்படாத விதத்தில் ''மனிதாபிமான மீட்பு நடவடிக்கை''யை மேற்கொண்டதாக அரசு கூறுகின்றது.

ஆனால், அதற்கு மாறாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என்று நம்பத்தகுந்த அளவில் நிபுணர் குழு அவற்றைக் கண்டறிந்துள்ளது. அவை நிரூபிக்கப்பட்டால், இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் அனைத்துலக மனிதார்ந்த சட்டங்களையும் அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களையும் மீறியிருக்கின்றன என்பது வெளிச்சத்துக்கு வரும். அவற்றில் சில மனித குலத்துக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பாரதூரமான போர்க் குற்றங்களாகக் கொள்ளத்தக்கவை.

உண்மையில், போரின் போதும் சரி, அமைதியின் போதும் சரி, அனைத்துலகச் சட்டங்களால் தனிநபர் மதிப்பைப் பாதுகாப்பதற்கென வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் மீறுவதற்கு இந்தப் போர் வழிகாட்டி உள்ளது.

குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டத்துடன் தொடர்புடையதான, உண்மையென நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை நிபுணர் குழு கண்டறிந்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான (30 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து இராஜதந்திரிகளுக்கு பீரிஸ் விளக்கம்

கொழும்பு,ஏப்.17

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையைத் தற்போது விரிவாக - ஆழமாக - ஆராய்ந்து வருகிறோம். இந்த அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்து எதிர்வரும் வியாழக்கிழமை வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் விளக்கிக் கூறவிருக்கிறார்.

இந்தத் தகவல்களை வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். அன்றையதினம் சர்வதேச மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கும் விளக்கமளிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

# இலங்கை விடயங்கள் எவ்வாறு ஐ.நாவுக்கு?

## ஆராய்கிறது அரசு

கொழும்பு, ஏப்.17

இலங்கையில் நடந்த சம்பவங்கள் குறித்த ஆதாரங்கள் எவ்வாறு ஐ.நாவுக்குச் சென்றன என்பது குறித்து ஆராய்வதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியுமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் அறிக்கை ஆதாரம் அற்றது; அடிப்படையும் அற்றது.

அந்த அறிக்கையில் வெளியாகியுள்ள தகவல்கள் எவ்வாறு இங்கிருந்து ஐ.நாவுக்குச் சென்றன என்பது குறித்து ஆராய்கின்றோம் -என்றார் அவர். (ஐ)

# திருமலை நகர அபிவிருத்தி குறித்து கூட்டமைப்பினர் விரிவாக ஆராய்வு

## புதிய நிர்வாகம் நாளை பொறுப்பேற்பு

திருகோணமலை, ஏப்.17

திருகோணமலை நகரசபையின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; நகரத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பது குறித்து ஆராய்ந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், நகராட்சி மன்றத் தலைவர் கே.செல்வராசா மற்றும் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நகராட்சிமன்ற நிர்வாகத்தை நாளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கவிருக்கும் புதிய நிர்வாகம் எவ்வாறு பணிபுரிய வேண்டும் என்பது குறித்து சம்பந்தன் அறிவுரை வழங்கியுள்ளார்.

ஊழல், மோசடிகள் இன்றி மக்களின் மறுவாழ்வையும் அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டு செயற்படவேண்டும் என்றும் -

மக்களிடம் இருந்து வரி மூலம் பெறப்படும் நிதியைத் துஷ்பிரயோகம் இன்றி அவர் களின் முன்னேற்றத்துக்கே பயன்படுத்த வேண்டும் என்றும் - புதிய உறுப்பினர் களிடம் சம்பந்தன் தெரிவித்தார்.(ஒ-ஐ)

# ஆயுதப் புரட்சிக்கு தயாராகிறாராம் பொன்சேகா!

கொழும்பு, ஏப்.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான ஆயுதப் புரட்சிக்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தயாராகி வருகிறார் என பலமான சந்தேகம் தோன்றி உள்ளது என்று இணைத்தளச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32 ஆம் பக்கம் பார்க்க)

நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி யாழ்ப்பாணம்
021 222 0033 - 021 222 0044
Metro Engineering(Pvt)Ltd




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம்

உதயன்
17 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

# வீறுகொண்டெழுந்தது சென்னை

# வீழ்ந்தது பெங்களூர்




-டிலீப்-

பஞ்சாப்புடனான் தோல்வியால் துவண்டிருந்தது சென்னை. ஆஸியிலிருந்து வந்தார் ஹஸி. புரட்டி எடுத்தார் பந்துகளை. வெற்றியை எட்டிப் பிடித்தது சென்னை.

சென்னையில் நேற்று நடந்தது ஐ.பி.எல்லின் 14 ஆவது ஆட்டம். நாணயச் சுழற்சியில் வெற்றி சென்னைக்கு. துடுப்பெடுத்தாட தீர்மானம். ஹஸி - முரளி விஜய் இறங்கினர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக. வந்த வேகத்திலேயே விளாசினர் பந்துகளை. முரளி விஜய் முன்னின்று தாக்கல். பந்துகள் விரட்டப்பட்டது எல்லைக்கு. அதிகரித்தது ஓட்ட வேகம். ஹஸி அளவான அதிரடிகளுடன் ஆட்டம். 38 பந்துகளில் சென்னை எட்டியது 50 ஓட்டங்கள்.

அதிரடிகள் காட்டிய விஜயின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. முதலாவது விக்கெட் 51 ஓட்டங்களில் சரிந்தது. 21 பந்துகளில் விஜய் பெற்றுக் கொடுத்தார் 31 ஓட்டங்கள். இரண்டு சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அதிரடியின் சான்று. நுழைந்தார் ரெய்னா. இணைந்தார் ஹஸியுடன். தொடர்ந்தனர் அதிரடிகளை. சிறப்பான ஆட்டம். ஏறியது ஓட்டம். வீழ்த்தத் துடித்தது பெங்களூர். 45 ஓட்டங்கள் இணைப்பாய் பகிர்ந்த பின்னர் வீழ்ந்தார் ரெய்னா.

வந்தார் டோனி. சோபிக்கவில்லை அவரது ஆட்டம். 16 பந்துகளைச் சந்தித்தார். 22 ஓட்டங்கள் மட்டும் பெற்றுக் கொடுத்தார். சிறப்பாய் ஆடிய ஹஸி பெற்றார் அரைச்சதம். பின்வரிசை வீரர்கள் பங்களிப்பு குறைவாகவே கிடைத்தது அணிக்கு. ஓட்டங்களை வேகமாய்க் குவிக்க முயன்றதால் சரிக்கப்பட்டது விக்கெட்டுக்கள்.

இறுதியில் இருபது ஓவர்களில் பெறப்பட்டது 183 ஓட்டங்கள். இழக்கப்பட்டது ஐந்து விக்கெட்டுக்கள். வண்ட வேர்த், நினன் பந்து வீச்சில் சரித்தனர் இரண்டு விக்கெட்டுக்கள்.

பதிலாட்டம் தொடங்கியது பெங்களூர். சென்னை கொடுத்தது அதிர்ச்சி. அதிரடி நாயகன் டில்ஷான் வெளியேற்றப்பட்டார் 'டக்கில்'. வந்தார் அஷாட் பதான். வெளுத்தார் சென்னையின் பந்து வீச்சை. அனல் கக்கியது அவரது ஆட்டம். அடக்கியது சென்னை அவரது ஆட்டத்தை. 5 பந்துகளில் பெற்றார் 14 ஓட்டங்கள். 17 ஓட்டங்களில் இரண்டாவது சரிவு பெங்களூருக்கு. நிதானமாய் ஆடினார் அகர்வால். விட்டு வைக்கவில்லை சென்னை. 31 ஓட்டங்களில் வீழ்ந்தது மூன்றாவது விக்கெட்.

அசராது ஆட்டத்தை தொடர்ந்தனர் ஹோக்லி - டீ வில்லியர்ஸ். அடி வாங்கியது சென்னையின் பந்து வீச்சு. வேகமாய் ஓட்டத்தைக் குவித்தார் ஹோக்லி. 42 ஓட்டங்கள் பகிரப்பட்டது நான்காவது விக்கெட்டுக்காய். வீழ்த்தப்பட்டது ஹோக்லியின் விக்கெட். மறுமுனையில் தாக்குதல் தொடர்ந்து கொண்டிருந்தார் டீ வில்லியர்ஸ். பெங்களூரின் வெற்றி தங்கியது வில்லியர்ஸ்ஸின் கையில். 18 ஓவரில் பவுண்டரி, சிக்ஸர் அடுத்தடுத்து விளாசி கடந்தார் அரைச்சதம். வெற்றி மெல்ல சாய்ந்தது பெங்களூரின் கையில். அழைக்கப்பட்டார் மோர்கல். வீழ்த்தினார் வில்லியர்ஸ் விக்கெட்டை.

முடிவுக்கு வந்தது பெங்களூரின் ஆட்டம். ரன்டீவ், மோர்கல் வீழ்த்தினர் இரு விக்கெட்டுக்கள். 21 ஓட்டங்களால் பெற்றது சென்னை வெற்றி. ஹஸி ஆட்டநாயகனாய்த் தேர்வு.

## ஐ.பி.எல் பதினான்காவது ஆட்டம்

ஆட்டம்: சென்னை சூப்பர் கிங்ஸ் எதிர் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் நாணயச் சுழற்சி: சென்னை சூப்பர் கிங்ஸ்
முடிவு: 21 ஓட்டங்களால் சென்னை சூப்பர் கிங்ஸ் வெற்றி ஆட்டநாயகன்: மைக் ஹஸி

சென்னை சூப்பர் கிங்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மைக் ஹஸி | ஆட்டமிழப்பில்லை | 83 | 56 | 11 | 1 |
| முரளி விஜய் | c சகீர்கான் b நினன் | 31 | 21 | 03 | 2 |
| சுரேஸ் ரெய்னா | c அகர்வல் b நினன் | 29 | 18 | 03 | 1 |
| டோனி | c டீ வில்லியர்ஸ் b சகீர்கான் | 22 | 16 | 01 | 1 |
| அல்பின் மோர்கல் | c அகர்வல் b வன்டவேர்த் | 09 | 08 | 01 | 0 |
| பத்திரிநாத் | c நினன் b வன்டவேர்த் | 05 | 03 | 01 | 0 |
| அனிருத்தா சிறீகாந் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அஸ்வின் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஜகாத்தி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சவுத்தீ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரன்டீவ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, lb 2, b 1) | 04 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 04 | 33 | 1 | 0 |
| வெற்றோரி | 04 | 23 | 0 | 0 |
| வன்ட வேர்த் | 04 | 49 | 2 | 0 |
| டில்ஷான் | 02 | 21 | 0 | 0 |
| நினன் | 03 | 31 | 2 | 0 |
| ஹோக்லி | 03 | 23 | 0 | 0 |

TOTAL - 183/5 (20)
1-51 (முரளி விஜய்), 2-96 (ரெய்னா), 3-147 (டோனி), 4-176 (மோர்கல்), 5-183 (பத்திரிநாத்)

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அகர்வால் | c மோர்கல் b அஸ்வின் | 07 | 13 | 01 | 0 |
| டில்ஷான் | c அனிருத்தா b அல்பின் மோர்கல் | 00 | 01 | 00 | 0 |
| அஷாட் பதான் | b சவுத்தீ | 14 | 05 | 02 | 1 |
| விராட் ஹோக்லி | c அனிருத்தா b ஜகாத்தி | 35 | 28 | 04 | 1 |
| டீ வில்லியர்ஸ் | c அனிருத்தா b மோர்க்கல் | 64 | 44 | 05 | 2 |
| திவாரி | c டோனி b ரன்டீவ் | 14 | 13 | 00 | 0 |
| புஜாரா | c முரளி விஜய் b ரன்டீவ் | 02 | 04 | 00 | 0 |
| வன்ட வார்த் | ஆட்டமிழப்பில்லை | 14 | 10 | 01 | 1 |
| வெற்றோரி | ஆட்டமிழப்பில்லை | 02 | 02 | 00 | 0 |
| நினன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சகீர்கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 6, lb 4) | 10 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அல்பின் மோர்கல் | 04 | 34 | 2 | 0 |
| சவுத்தீ | 04 | 32 | 1 | 0 |
| அஸ்வின் | 04 | 22 | 1 | 0 |
| ரன்டீவ் | 04 | 24 | 2 | 0 |
| ஜகாத்தி | 03 | 36 | 1 | 0 |
| ரெய்னா | 01 | 10 | 0 | 0 |

TOTAL - 162/7(20)
1-1 (டில்ஷான்), 17 - (பதான்), 3-31 (அகர்வால்), 4-73 (ஹோக்லி), 5-112 (திவாரி), 6-127 (புஜாரா), 7-145 (டீவில்லியர்ஸ்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# பாய்ந்தது பஞ்சாப் கிங்ஸ் லெவன் பறித்தது டெக்கான் வெற்றியை




-அருண்மொழி-

கில்கிறிஸ் வென்றார் நாணயச் சுழற்சியில். சங்காவை பணித்தார் துடுப்பெடுத்தாட. சொஹால் - தவான் வந்தனர் களத்துக்கு. ஆட்டத்தை அதிரடியுடன் தொடக்க ஆர்வம். இருந்தும் பறிக்கப்பட்டது சொஹாலின் விக்கெட். 13 ஓட்டங்களில் இழந்தது முதலாவது விக்கெட்டை.

டெக்கானின் அணித்தலைவர் சங்கா களத்துக்கு வருகை. தவானுடன் இணைந்தார். அத்திவாரம் இட்டனர் பலமான இணைப்பாட்டத்துக்கு. மெதுவாய் அதிரடியாட்டத்தை கையிலெடுத்தது இணைப்பு. ஆரம்ப விக்கெட் சரிவிலிருந்து மீண்டது டெக்கான்.

சங்காவின் ஆட்டம் 35 ஓட்டங்களுடன் வந்தது முடிவுக்கு. இரண்டாவது விக்கெட்டுக்காய் 75 ஓட்டங்கள் பகிர்ந்தது இந்த ஜோடி. இணைப் பிரித்து வைத்தார் சாவ்லா. தொடர்ந்து இழக்கப்பட்டது தவானின் விக்கெட். 91 ஓட்டங்களில் சரிந்தது மூன்றாவது விக்கெட். தவான் 36 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 45 ஓட்டங்கள். துடுப்பாட்டத்தில் கலக்கும் வல்த்தடி வீழ்த்தினார் விக்கெட்.

டுமினி - சிப்லி இணைந்தனர். இறுதி ஆட்டத்தில் சிப்லியின் ஆட்டம் சிறப்பாய் அமைந்திருந்தது. கலக்குவார் நேற்றும் என்று எதிர்பார்த்திருந்தனர் டெக்கான் ரசிகர்கள். ஏமாற்றி வெளியேறினார் சிப்லி. அவரால் பெறப்பட்டது 14 ஓட்டங்கள் மாத்திரம். கோனி வந்த வேகத்தில் வெளியேற்றப்பட்டார் மக்லெரனால்.

கிறிஸ்ரெய்ன் தொடர் இழப்புக்களைத் துடைத்தெறிந்தார். அதிரடிகளில் முழங்கினார் கிறிஸ்ரெய்ன். மக்லெரனின் 18 ஆவது ஓவரில் வீழ்த்தப்பட்டது டெக்கானின் இரு விக்கெட் [illegible] அதே [illegible] வீழ்ந்தது இரு விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து. இருந்தும் கிறிஸ்ரெய்னின் முழக்கம் தொடர்ந்தது.

20 ஓவர்களில் பெறப்பட்டது 165 ஓட்டங்கள். இழக்கப்பட்டது எட்டு விக்கெட்டுக்கள். ஆட்டமிழக்கவில்லை கிறிஸ்ரெய்ன் இறுதி வரை. 14 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 30 ஓட்டங்கள். வல்தடியின் பந்து வீச்சில் வீழ்த்தப்பட்டது நான்கு விக்கெட்டுக்கள்.

பதிலுக்கு இலக்கை பாய்ந்து விரட்டியது பஞ்சாப். கில்கிறிஸ்ட் - வல்த்தடி போட்டுத்தள்ளினர் டெக்கானின் பந்து வீச்சை. ஆரம்பத்திலிருந்தே அசத்தலான ஆட்டம். அதிரடிகளால் நனைந்தது அரங்கு. திணறியது டெக்கான்.

சங்காவின் களத்தடுப்பு வியூகங்கள் பஞ்சாய் பறந்தது பஞ்சாப்பின் அதிரடியில். முதலாவது விக்கெட்டுக்காய் பிரிக்கப்படாத இணைப்பாய் 59 பந்துகளில் பெறப்பட்டது 100 ஓட்டங்கள். 30 பந்துகளில் கில்லி கடந்தார் அரைச்சதம். வல்தடியும் அடித்தார் அரைச்சதம். களைத்து விட்டார் கில்லி. வெளியேறினார் மிஷ்ரா. 61 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்து கில்கிறிஸ்டின் ஆட்டம். 136 ஓட்டங்கள் பெறப்பட்டது முதலாவது விக்கெட் இணைப்பாய். வல்தடியின் தாக்குதல் தொடர்ந்தது. வந்து இணைந்தார் நாயர்.

மிஷ்ரா மீண்டும் கலக்கல். வீழ்ந்தது வல்த்தடியின் விக்கெட். 47 பந்துகளில் பெற்றார் 75 ஓட்டங்கள். நாயருடன் இணைந்தார் டினேஸ் கார்த்திக். வெற்றிகரமாய் இறுதிக்கட்ட தாக்குதல் முடிவுக்கு வந்தது. மீதமிருந்தது 14 பந்துகள். பெற்றது வெற்றி எட்டு விக்கெட்டுக்களால். சகலதுறையிலும் டெக்கானை வீழ்த்திய வல்த்தடி ஆட்டநாயகன்.

## ஐ.பி.எல் பதினைந்தாவது ஆட்டம்

ஆட்டம்: டெக்கான் சார்ஜஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் நாணயச் சுழற்சி: கிங்ஸ் லெவன் பஞ்சாப்
முடிவு: எட்டு விக்கெட்டுக்களால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் வெற்றி ஆட்டநாயகன்: வல்த்தடி

டெக்கான் சார்ஜஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சொஹால் | c கார்த்திக் b ஹரிஸ் | 07 | 05 | 01 | 0 |
| தவான் | c சுனி சிங் b வல்தட்டி | 45 | 36 | 05 | 1 |
| சங்கக்கார | c மக்ரைன் b சாவ்லா | 35 | 28 | 05 | 0 |
| டுமினி | c & b மக்லரன் | 18 | 16 | 01 | 0 |
| சிப்லி | c மார்ஷ் b வல்தட்டி | 14 | 12 | 02 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | b வல்தட்டி | 30 | 14 | 02 | 2 |
| கோனி | b மக்லரன் | 00 | 01 | 00 | 0 |
| ரவி ரேஜா | ஆட்டமிழப்பில்லை | 10 | 06 | 01 | 0 |
| அமிர்மிர்ஷா | lbw b வல்தட்டி | 00 | 01 | 00 | 0 |
| ஸ்ரெய்ன் | ஆட்டமிழப்பில்லை | 01 | 02 | 00 | 0 |
| இசாந் சர்மா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, lb 3, nb 1) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பிரவீன் குமார் | 04 | 29 | 0 | 0 |
| ஹரிஸ் | 04 | 31 | 1 | 0 |
| மக்லரன் | 03 | 33 | 2 | 0 |
| மலிக் | 02 | 13 | 0 | 0 |
| நாயர் | 01 | 10 | 0 | 0 |
| சாவ்லா | 02 | 17 | 1 | 0 |
| வல்த்தடி | 04 | 29 | 4 | 0 |

TOTAL - 165/8 (20)
1-13 (சொஹால்), 2-88 (சங்கக்காற),3-91 (தவான்), 4-112 (சிப்லி),5-129 (டுமினி),6-137 (கோனி), 7-156 (கிறிஸ்ரெய்ன்), 8-156 (மிஷ்ரா)

கிங்ஸ் லெவன் பஞ்சாப்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | c ரவிரேஜா b மிஷ்ரா | 61 | 46 | 05 | 3 |
| வல்த்தடி | c சர்மா b மிஷ்ரா | 75 | 47 | 08 | 5 |
| நாயர் | ஆட்டமிழப்பில்லை | 13 | 10 | 02 | 0 |
| டினேஸ் கார்த்திக் | ஆட்டமிழப்பில்லை | 03 | 05 | 00 | 0 |
| மார்ஷ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சுனி சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மக்ரெலன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிரவீன் குமார் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹரிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சாவ்லா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மலிக் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 5, lb 7, nb 2) | 14 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெய்ன் | 03 | 24 | 0 | 0 |
| இசாந் சர்மா | 04 | 23 | 0 | 0 |
| கோனி | 02 | 35 | 0 | 0 |
| மிர்ஷா | 04 | 28 | 2 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | 2.4 | 28 | 0 | 0 |
| டுமினி | 02 | 21 | 0 | 0 |

TOTAL - 166/2(17.4)
1- 136 (கில்கிறிஸ்ட்), 2 - 151 (வல்த்தடி),

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சங்களை வாங்குகின்றது இந்திய அணி



டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் இருக்கும் இந்திய அணிக்கு, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ரூ. 78 லட்சம் பரிசு அறிவித்துள்ளது.

சர்வதேச தரவரிசைப் பட்டியலில் முன்னணியில் இருக்கும் அணிகளுக்கு, ஒவ்வொரு ஆண்டும், ஐ.சி.சி பரிசு வழங்கி வருகின்றது. தற்போது டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் 'நம்பர்-1' (128 புள்ளி) இடத்தில் இருந்து வருகின்றது. இதனால் இந்திய டெஸ்ட் அணிக்கு, இந்த ஆண்டு ரூ. 78 லட்சம் பரிசு கிடைக்கவுள்ளது. இரண்டாவது (117 புள்ளி) இடத்தில் உள்ள தென்னாபிரிக்க அணிக்கு, 33 ரூபா லட்சம் வழங்கப்படவுள்ளது.

இதேபோல, ஒருநாள் தரவரிசையில் இரண்டாவது (121 புள்ளி) இடத்திலுள்ள இந்திய அணிக்கு ரூ. 33 லட்சம் கிடைக்கும். முதலிடத்தில் (129 புள்ளி) இருக்கும் ஆஸ்திரேலியாவுக்கு 78 லட்சம் ரூபா கிடைக்கும். (15)

# போர்க்கொடி தூக்குகிறார் முரளி



இந்தியன் பிரிமியர் லீக்கில் விளையாடும் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை இடையிலேயே நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கெட் கோரியிருப்பதை இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் கண்டித்துள்ளார்.

இந்த வீரர்களை எதிர்வரும் மே 20 ஆம் திகதியே நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கெட் சபை கேட்டிருந்தது. எனினும் தற்போது உடனடியாக அவர்களை நாடு திரும்பக் கோருவது நியாயமானதல்ல என்றும் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் இந்த அறிவிப்பு, இலங்கை இந்திய நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் விளையாட்டுப் புரிந்துணர்வை பாதிக்கும் என்றும் முரளிதரன் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இந்திய கிரிக்கெட்டிடம் இருந்து இலங்கை கிரிக்கெட் பல அம்சங்களை இழக்க வேண்டி வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் இலங்கைக்கு 25 மில்லியன் டொலர்கள் கிடைக்க வேண்டியுள்ளது. இந்தியாவே இலங்கை வீரர்களுக்கு பணம் உழைக்கக் கூடிய வழியைக் கொண்டிருக்கிறது. அதாவது நிதி என்ற அடிப்படையில் இந்தியாவிலேயே இலங்கை தங்கியுள்ளது. எனவே இந்த விடயத்தை இலங்கை கிரிக்கெட் கவனமாக அணுக வேண்டும் என்றும் முரளிதரன் கோரியுள்ளார். (15)

# ஹர்பஜன் ஆரம்பிக்கிறார் கிரிக்கெட் அக்கடமி



விளையாட்டு அக்கடமியை ஆரம்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இது தொடர்பாக மாநில அரசிடம் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக்கில் தங்கம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்த அபினவ் பிந்த்ரா உள்ளிட்ட உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் பஞ்சாபில் உருவாகியுள்ளனர். சரியாகச் செயற்படும்போதுதான் திறமைகள் வெளிப்படும்.

இப்போது விளையாட்டு மிக முக்கியமான ஒன்று. இளைஞர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக அவர்களை தினந்தோறும் சந்தித்து வருகின்றேன். ஒரு வீரரிடம் திறமை இருப்பதை கண்டுவிட்டால், அதை வெளிக்கொண்டு வர, நம்பிக்கையுடன் அவரை அணுகவேண்டும். விளையாட்டு வீரர்களை உருவாக்குவது நம் கடமை. அது சமூகத்திற்கும், நாட்டுக்கும் நல்லது என்றார் ஹர்பஜன்.

இப்போது பஞ்சாப் மாநிலத்தில் விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கு இந்த ஆண்டு ரூ.100 கோடி விளையாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் 50 க்கும் மேற்பட்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

**விளையாட்டு வீரர்களுக்கும் பாரத ரத்னா விருது**

விளையாட்டு வீரர்களுக்கும் பாரத ரத்னா விருது வழங்கும் வகையில் அதன் விதிமுறையில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகத்திடம் வலியுறுத்தப்படும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மக்கான் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

பாரத ரத்னா விருது கலை, இலக்கியம், சமூக சேவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே விளையாட்டு வீரர்களுக்கும் இந்த விருதை வழங்க வேண்டும் என்று உள்துறை அமைச்சகத்திடம் விளையாட்டு அமைச்சகம் வலியுறுத்தும்.

இந்தியா ஒலிம்பிக்கிலும் மற்ற சர்வதேச விளையாட்டுகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்புகிறோம். எனவே பாரத ரத்னா விருதுக்கு விளையாட்டு வீரர்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த விஷயத்தை உள்துறை அமைச்சகத்திடம் எடுத்துச் செல்வோம். விளையாட்டு வீரர்களுக்காக பாரத ரத்னா விருது விதிமுறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்றார்.

நீச்சல் மற்றும் கால்பந்து விளையாட்டுகளுக்கு சிறப்பு பயிற்சி மையங்களை அறிவித்துள்ளது மத்திய அரசு. இதுகுறித்து அஜய் மக்கான் கூறியதாவது:

டில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் கால்பந்துக்கும், தல்கதோரா நீச்சல் வளாகத்தில் நீச்சலுக்கும் சிறப்புப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். இதை மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். (15)

## சச்சினுக்கு விதிக்கப்பட்டது அபராதம்



கொச்சி அணிக்கு எதிரான நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் குறிப்பிட்ட நேரத்தில் பந்தை வீசி முடிக்கவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு ஓவர் வீச வேண்டி இருந்தது. இதனால் மெதுவாக பந்து வீசியதற்காக மும்பை இந்தியன்ஸ் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அணித்தலைவர் டெண்டுல்காருக்கு ரூ.9.2 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (15)

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் அதிஷ்டசாலிகள் தெரிவு இன்று

'உதயன்' நடத்திய உலகக் கிண்ணக் கிரிக்கெட் கொண்டாட்டத்தின் அதிஷ்டசாலிகள் தெரிவு 'உதயன்' கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளர் இ.சிறீதரன் கலந்துகொள்ளவுள்ளார். மேலும் விளம்பர அனுசரணையாளர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றியாளரின் பெயர் விவரம் நாளைய உதயனில் வெளியிடப்படும். (15)

# எங்களின் களத்தடுப்பு மோசம்

**- சச்சின்**

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் கொச்சி ரஸ்கேர்ஸ் கேரளா அணி மும்பை இந்தியன்ஸ் அணியை அதிர்ச்சிகரமாக தோற்கடித்தது. முதலில் ஆடிய மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்கள் குவித்தது. அணித்தலைவர் டெண்டுல்கார் 66 பந்துகளில் 100 ஓட்டங்களும் (12 பவுண்டரிகள், 3 சிக்சர்கள்) ராயுடு 33 பந்துகளில் 3 பவுண்டரிகள், 4 சிக்சருடன் 53 ஓட்டங்களும் எடுத்தனர்.

கொச்சி அணி ஒரு ஓவர் எஞ்சி இருந்த நிலையில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 184 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடக்க வீரர் மக்கலம் 60 பந்துகளில் 81 ஓட்டங்களும் (10 பவுண்டரிகள், 2 சிக்சர்கள்) மற்றொரு தொடக்க வீரரும், அணித்தலைவருமான ஜெயவர்த்தன 36 பந்துகளில் 56 ஓட்டங்களும் (9 பவுண்டரிகள்) எடுத்தனர்.

கொச்சி ரஸ்கேர்ஸ் அணி முதல் வெற்றியை பெற்றது. மும்பை இந்தியன்ஸ் முதல் தோல்வியை சந்தித்தது. டெண்டுல்கார் சதம் அடித்தும் அந்த அணிக்கு பலன் இல்லை. இந்தத் தோல்வி குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவரான சச்சின் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இரு அணியிலும் துடுப்பாட்டம், பந்து வீச்சு சமபலமாக இருந்தது. ஆனால் எங்கள் அணியின் களத்தடுப்பை விட கொச்சி அணியின் களத்தடுப்பு சிறப்பாக இருந்தது. எங்கள் அணியின் மோசமான களத்தடுப்பினால் தோல்வி அடைந்தோம். சில பிடிகளுக்கான வாய்ப்புகளைத் தவற விட்டோம். நாங்கள் துடுப்பெடுத்தாடிய போது 160 முதல் 165 ஓட்டங்கள் வரை நல்ல 'ஸ்கோர்' என்று கருதினோம், ஆனால் ஆடுகளம் முழுவதும் துடுப்பாட்டத்தின் வசமானது. மக்கலம் அடித்த பந்தை தொடக்கத்திலேயே ரோகித் சர்மா பிடியெடுத்திருந்தால் வென்றிருக்க முடியும். மக்கலமின் விக்கெட்டை மலிங்க கைப்பற்றிய போதும் எங்களுக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் அப்போது எங்கள் களத்தடுப்பு மோசமாக இருந்தது. [illegible] களத்தடுப்பை



மட்டும்தான் சொல்ல முடியும். 19 ஆவது ஓவரை அலி முர்தஷாவுக்கு கொடுத்தது சரியானது தான். அதில் தவறு இல்லை. சதம் அடிப்பேன் என்று நான் நினைக்கவில்லை. சதம் அடித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. ஐதராபாத்தை சேர்ந்த இளம் வீரர் அம்பதி ராயுடுவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. அவர் 19 வயதுக்குட்பட்ட இந்திய அணியில் விளையாடுவதாக நான் தற்போது தான் கேள்விப்பட்டேன். சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விஸ்டன் விருதுக்கு என்னை தேர்வு செய்தது மகிழ்ச்சி அளிக்கின்றது. இவ்வாறு டெண்டுல்கார் கூறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சு...ன் சிவராசா

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.மாநகர சபை)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் சிவராசா நேற்று (16.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சர்மிளா (எழுதுநர், யாழ். மாநகர சபை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம்), கௌசல்யா (மேலதிக மாவட்டப் பதிவாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சசிரேகா (முகாமைத்துவ உதவியாளர், யாழ்.மாநகர சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரசேனா குலரத்தினா (ஆசிரியர், யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் கலைமாறன், கேதினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*173/3, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர் கிழக்கு.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## தங்கராசா நிரஞ்சன்

*(முதலாம் வருட முகாமைத்துவபீட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்)*



யாழ்ப்பாணம், தட்டாதெருவை வசிப்பிடமாகக் கொண்ட தங்கராசா நிரஞ்சன் நேற்று (16.04.2011) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தங்கராசா- ஜெகசோதி தம்பதியரின் அன்பு மகனும் நிரூபன் (3ஆம் வருட மருத்துவபீட மாணவன்) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.தங்கராசா,
ஸ்ரீ கண்ணன் நகைத்தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

NO-953, K.K.S. Road,
தட்டாதெரு, யாழ்ப்பாணம். (3242)

# சீரணியில் இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.17

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா.

காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள் காட்சி அளிப்பர். பிற்பகல் 2 மணிக்கு இரத அவரோகணம் இடம்பெறும்.

நாளை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் 16ஆம், 17 ஆம் பக்கங்களில்)

**SLEAS கருத்தரங்கு வசதிக்கு ஏற்ப இரு இடங்களில்**

* கிரகித்தல், விடயஆய்வு, உளச்சார்பு விடயங்கள் துறைசார் நிபுணர்களினால் 4 நாள்களில் ஆராயப் படும்
இவ்வாறம்
* திங்கள், செவ்வாய், புதன், வியாழன் காலை 9.00 தொடக்கம் 2.00 மணி வரை
* யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை எதிரே
* கிறிஸ்ரல் நெல்லியடி.

**உணவகமும் கூல்பாரும் வாடகைக்கு**

கண்டிவீதி. நாவற்குழி ஹனிமூன் விடுதி உணவகமும், கூல்பாரும் முற்பண வாடகை செலுத்தி நடத்தவிரும்பும் தகுதியானவர்கள் ஒரு வருட கால வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். 20.04.2011 இற்கு முன் மு.ப. 10 மணிக்கு நேரில் சந்திக்கவும்.

உரிமையாளர் சு.செல்வநாயகம்

**தேவை**

பெண் கணனி இயக்குநர் தேவை. முன் அநுபவம் உடையவர்கள் நேரில் வரவும்.

சிவரஞ்சனம் அச்சகம்
பலாலி வீதி, கோண்டாவில்.

ஏற்கனவே பதிந்த/புதிய மாணவர்களுக்கான அறிவித்தல்.

**CERTIFIED MEDICAL ASSISTANT**

பயிற்சி நெறி ஆரம்பம் : 01/05/2011 காலை 09.00
A pathway for Nursing/Medical Field
மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு04)
CMA US Curriculum

Lava Hospitals



After O/L

(O/L நான்கு பாடங்களில் சித்தியுடன் கற்கலாம்.
MBBS வைத்திய விரிவுரையாளர்களால்
பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன்
கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

உங்கள் வாழ்வு மேம்பட கற்பீர்

City & Guilds Qualified

பதிவு இறுதித்திகதி :21/04/2011

Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0776458253 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info

# மரண அறிவித்தல்

## திருமதி சோதிநாதன் கமலராணி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிநாதன் கமலராணி நேற்று (16.04.2011) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் பொலிஸ் அதிகாரி இராசையா - நாகேஸ்வரி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சோதிநாதனின் மனைவியும் சிவாஜினி, காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் சிவா, கௌசிகா ஆகியோரின் மாமியும் கீர்த்திவர்மன், புருசோத்தமன், சதுர்த்திகன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கோகுலராணி, அருணகிரி மற்றும் செல்வராணி, சுகுமாரன் (நெல்லியடி பொலிஸ் அதிகாரி), தனபாக்கியம், ஈஸ்வரகுமாரன், வடிவாம்பிகை, பராசக்தி, காங்கேசன் (யாழ்ப்பாணம் பெரியபுலம் ம.வி.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவக்குமாரின் (கண்ணா கிளினிக்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சின்னப்புதுக்குளத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகாந்தன் (மகன்), சிவாஜினி (மகள்).

# மரண அறிவித்தல்

## திருமதி கிருபானந்தன் சுமனேஸ்வரி



சுன்னாகம் மேற்கு, கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கில் வசித்து தற்போது லண்டனில் வசித்தவருமாகிய கிருபானந்தன் சுமனேஸ்வரி 11.04.2011 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கிருபானந்தனின் மனைவியும், சகானா, மகீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குலகுணேஸ்வரி, அருணேஸ்வரி, கமலேஸ்வரி, குமார் (லஷ்மி விலாஸ்), இந்திரகுமார், நந்தகுமார் (லண்டன்), சசீந்தினி (லண்டன்), ராஜ்குமார் (திருக்குமரன் இரும்பகம்), திருக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(17.04.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி 9.30 - 12.30 மணிக்கிடையில் Hgndon Trematorium(North Chapel), Holdrh Hill Road, London N.W. 7 INB, United Kingdom என்ற விலாசத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி, சுன்னாகம்.
தொ.பே.இல. - 0212241610

தகவல்:
**குமார்** (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொய்மையாளரைப் பாடாதே!

வடக்கில் நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்தில், கடைசி மாதங்களில் இடம் பெற்ற அகோரத்தை -

புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தனுக்குச் சென்றவேளை, வீதியின் இரு மருங்கிலும் குவிக்கப்பட்டிருந்த, அழிக்கப்பட்டும் செயலிழக்க வைக்கப்பட்டும் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கையில் இருந்தும்-

நிர்மூலமாக்கப்பட்ட கட்டடங்களில் இருந்தும் -

எவராலும் மதிப்பிட முடியும்; அவற்றினூடு போர் விளைவித்த நாசங்களை ஊகித்துக்கொள்ள முடியும்.

வடக்கின் போர் முடிந்து இரண்டு வருடங்களாகியும் பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் உரிய பாதுகாப்பற்ற, அச்ச உணர்வுடனேயே வாழ்கிறார்கள். அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் தானும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வடக்குக்கு விஜயம் செய்த சர்வமதக் குழு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

கடந்த மாதம் இறுதியில் வடக்கே விஜயம் செய்த பிரஸ்தாப சர்வ மதக்குழுவில், பௌத்த குருமார் பன்னிருவரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட ஆறு கத்தோலிக்கக் குருமாரும் இலங்கைத் திருச்சபையின் இரண்டு குருமாரும் மெதடிஸ்த திருச்சபையின் இரண்டு குருமாரும் இஸ்லாமிய மதக்குருக்கள் இருவரும் இந்துக் குருமார் இருவரும் கரித்தாஸ் (இலங்கை), செடாக் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.

அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் அதிகாரிகளும் வடக்கின், வன்னியின் நிலைமை குறித்து வெளியிடும் தோற்றங்களையும் கருத்துக்களையும் தொலைவில் நின்று கேட்பதோடு மட்டுமன்றி-

வடக்கின் நிலைமையை இங்கு வாழும் மக்களின் அவலங்களை, அவர்களின் துன்பியல்களை, பாதுகாப்பற்ற நிலையை, தமது உணர்வுகளை வெளிப்படுத்தத் தயங்கும் நிலையை மற்றவர்கள் கூறக்கேட்பதை விட

- நேரில் வந்து பார்த்தும், கேட்டும் அறியும் இது போன்ற முயற்சி -

புறத்தே தெரியாத, வெளிப்படுத்தப் படாத பல விடயங்களை, விவகாரங்களை, சமாச்சாரங்களை நேரில் கண்டும் கேட்டும் அறிவதற்குப் பெரிதும் உதவும்.

போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் கடந்து செல்லும் காலத்திலும், அதனால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்கு மக்கள் இன்னமும் வாழ்க்கையின் ஓரத்திலேயே காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. மீள்குடியமர்வு தொடக்கம் அன்றாட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வது வரையான அம்சங்களில், வாழ்க்கை அலகுகளில் வீழ்ந்து படுக்கும் அல்லது தலையைச் சற்று உயர்த்திப் பார்த்து உடனே கீழே சாய்க்கும் நிலைகளுமே தொடர்கின்றன.

அவர்களுக்கு உண்டான இத்துணை பென்னம்பெரிய பாதிப்புகளை, ரணங்களை இந்தளவு சிறிய இடைவெளியில் நீக்கிவிட, குணமாக்க முடியுமா? என்ற தர்க்க ரீதியான 'கோட்பாட்'டுடனேயே அரசின் செயற்பாடுகள் நடைபெறு கின்றன என்று எண்ணும் அளவுக்கே, பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகள் அதம வேகத்தில் நடைபெறுகின்றன.

அவை ஒருபுறமிருக்க -

ஒரு ஜனநாயக நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய கருத்துரிமை, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில், கூட்டிக் கழித்துப் பார்த்தால் நாற்பது அல்லது ஐம்பது சதவீதமாவது உண்டு. தாம் வெளிப்படுத்தும் கருத்துக்கள் அர சுக்குப் பாதகமானதாக இருந்தால் விளைவு என்னவாகும்? என்ற அச்சம் அப் பிரதேசங்களில் குறைவு என்றே ஓரளவில் கூறலாம்.

ஆனால் வடக்கில், 'இரவில் பார்த்து பேசு' என்ற பேச்சு வழக்கு மொழிக்கு ஏற்ப, தெரியாதவர்களுடன் மனந்திறந்து பேசமுடியாது. அது ஒரு நுனியில் இருந்து மறு நுனிவரை, முனைவரை செல்லும் போதும், சென்றடைந்த பின்னரும் தேவையற்ற சங்கடங் களுக்குத் தம்மை ஆளாக்குமோ என்ற ஒருவகை அச்சத்துடன் பேசும் நிலையே - கருத்து வெளியிட அஞ்சும், பின்னடிக்கும் போக்கே - வடக்கில் உண்டு. மெத்தப் படித்த சீமான்களில் மிகப்பலரும் அந்த வழியையே நாடுகிறார்கள்- தத்தம் நலன்களை நாடி!

உள்ளதை உள்ளவாறே கூறவேண்டும், உண்மைகள் வெளிவர வேண்டும் என்ற நோக்கத்துடன், மனிதாபிமானத்தை முன்னிறுத்தி, இப்பத்தியில் முதலில் குறிப்பிடப்பட்ட சர்வமதக்குழுவிடம் கருத்துக் கூறிய மதகுரு ஒருவர் மிக மோசமாக அவமதிக்கப்பட்ட வடக்கில் -

உண்மைகளை வெளிப்படுத்த, மக்களுக்கு உண்டான பாதிப்புகளை, உளவியல் தாக்கங்களை, வாழ்க்கையின் இடர்ப்பாடுகளை வெளிக்கொணர எவ்வாறு துணிச்சல் வரும்? 'பொல்லைக் கொடுத்து அடி வாங்கி' அங்கம் இழக்க எவர் தான் முன்வருவர்? என்ற மற்றொரு பக்கமும் உண்டு.

*நாட்டில் சமாதானம் ஏற்பட்டு விட்டதாக அரசு கூறுகிறது. எனினும், வடபகுதி மக்கள் அந்தச் சமாதானக் கனியைச் சுவைக்க முடியவில்லை. அதற்கான சூழல் இன்னும் இங்கு தோற்றுவிக்கப்படவில்லை. மக்கள் தொடர்ந்தும் அச்சத் துடனேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களால் சுதந்திரமாக எதையும் சொல் முடிவதில்லை* - என்று வடக்கு மக்களின் உண்மையான நிலைப்பாட்டை எடுத்துக் கூறிய மதிப்புக்குரிய வண. பிதா அருட்திரு. ஜெயக்குமார் அடிகளார் அவமதிக்கப்பட்டார்.

இத்தகைய ஒரு பின்புலத்தில், வடக்கின் இப்போதைய நிலையை, உண்மை நிலையை எடுத்துக்கூற இனி எவர் முன்வருவர்? அடிகளாருக்கு நிகழ்ந்த அவமதிப்பைப் பிரதிபலிப்பதாக, வடபகுதியின் உண்மையான நிலைமைகளை வெளிப்படையாக எடுத்துக்கூற எவரும் முன்வர மாட்டார்கள் என்றே எதிர்பார்க் கலாம்.

கடந்த வாரத்தில் யாழ்.நகரத்தில் நடைபெற்ற 'மனித மேம்பாட்டுக்கு சமயங்கள் கூறும் உண்மைகள்' என்ற கருத்தரங்களில் உரையாற்றிய மிகப் பலரும் இங்குள்ள உண்மையான நிலைமைகளை எடுத்துச்சொல்வதற்குத் தயக்கம் காட்டியமை புலப்பட்டதை, அச்ச உணர்வு குடிகொண்டிருந்ததை ஆர்வலர்களால் அவதானிக்க முடிந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், வடபகுதிக்கு அடுத்தடுத்து வந்து சென்ற இரண்டு சர்வமதக்குழுக்களில் ஒன்று இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பற்ற நிலையிலும் அச்ச உணர்வுடனுமே வாழ்கின்றார்கள். அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் தானும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை - என்று தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பது அரசின் காதுகளில் விழுமா?

இல்லை, இல்லை. அவர்கள் கூறுவது எல்லாம் தவறு. அங்குள்ள மக்கள் படிப்படியாக இயல்பு நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். மீள்குடியமர்வு உட்பட அவர்களுக்குரிய புனர்வாழ்வுத் திட்டங்கள் செவ்வனே நிறைவேற்றப்படு கின்றன. வடக்கில் வாழ்பவர்கள் என்றால் என்ன, அங்கு சென்று வருவோர் என் றால் என்ன, எதையும் எப்படியும் கூறட்டும் -

அரசாங்கம் வடக்கு மக்களையும் இந்த நாட்டின் ஏனைய பகுதி மக்களைப் போலவே சமமாகவும், அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கியுமே நிர்வகிக்கின்றோம். அகில இலங்கை ரீதியிலான அபிவிருத்தியிலும் வடக்குக்கும் போதியளவு பாகம் பிரித்து ஒதுக்கப்படுகின்றது - என்று அரச தரப்பு பதில் பிரசாரம் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

எப்படியோ, உண்மைகளும் யதார்தங்களும் மூடி மறைக்கப்பட முடியாதவை. மிரட்டுவதாலும் புனைந்துரைப்பதாலும் அவை அழிந்துபோகா. சிலரைச் சில காலத்துக்கு ஏமாற்றலாம்; பலரை எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. அந்தப் பலரில் நேர்மையானவர்களும் மக்கள் நலன்களை நாடும், அவற்றை வேண்டும் உண்மையாளர்களும் இருக்கவே செய்வர்.

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்பினும் தொண்டர் தருகிலா
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!

சுந்தரமூர்த்தி நாயனார்

## பருத்தித்துறை - யாழ்.பிரதான வீதியில்

# பயணிகள் சேவையில் இரு கதவு பஸ்களை ஈடுபடுத்தத் தனியாருக்கு அனுமதி மறுப்பு

வடமராட்சி,ஏப்.17

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இரட்டைக் கதவுகள் கொண்ட பெரிய பஸ்களைச் சேவையிலீடுபடுத்த அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது

இந்தப் பிரதான வீதி துரிதமாக அகலமாக்கப்பட்டு வரும் வேளையில் என்றுமில்லாதவாறு போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான மார்க்கத்தில் போதிய பஸ்கள் இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் பயணிகளுக்குத் திருப்திகரமான பஸ் சேவைகளை வழங்க முடியவில்லை.

இந்த நிலையில் தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தினால் நடுத்தர மினி பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இந்த மினிபஸ்களில் போதிய இடவசதி இன்மையால் பயணிகள் நின்ற நிலையில் நெருக்கடியாகப் பயணத்தை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

பயணிகளின் நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாகத் தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் ஏனைய மாவட்டங்களில் இடம் பெறுவது போல பெரிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் எனப் பயணிகள் தரப்பில் ஏற்கனவே கோரிக்கை விடப்பட்டிருந்தது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம், யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் என்பன இந்தப் பிரதான பாதையில் நடுத்தர மினிபஸ்களுக்குப் பதிலான ஒற்றைக்கதவு கொண்ட பெரிய பஸ்கள் மாத்திரம் எதிர்காலத்தில் புதிதாகச் சேவையில் ஈடுபடுத்தலாம். ஆனால் இரட்டைக் கதவுகள் கொண்ட பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தக்கூடாது எனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி 'ஏபி' தரத்தைக் கொண்டதாகும். ஆனால் ஏனைய மாவட்டங்களில் ஏபி,பி,சி தர வீதிகளில் இரட்டைக்கதவுகள் கொண்ட பெரிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-236)

# மயிலிட்டி சித்தி விநாயகர் ஆலயத்தை புனரமைப்புச் செய்ய படையினர் அனுமதி

வடமராட்சி,ஏப்.17

உயர்பாதுகாப்பு வலயமாகவுள்ள மயிலிட்டிப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று வர படையினர் அனுமதி வழங்கியுள்ளதையடுத்து மயிலிட்டித்துறை, பெரியநாட்டான், தேவன்துறை, மருதடி ஸ்ரீ வரத சித்திவிநாயகர் ஆலயத்தைப் புனரமைக்கவும் வழிபாடு, பூசைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெயர்ந்து வாழும் மயிலிட்டித்துறை மக்கள் அனைவரும் ஒன்றுகூடி தீர்மானங்களை மேற்கொள்ள வசதியாகப் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, வியாபாரிமூலையில் உள்ள மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பொதுக் கூட்டத்தில் அப்பகுதி மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆலயத்துக்குச் சென்று வரவும் புனரமைப்புச் செய்யவும் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளவும் உரிய ஆலோசனைகளை வழங்கிப் புதிய நிர்வாக சபை ஒன்றைத் தெரிவு செய்யுமாறும் ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-236)

# மாவை கலட்டியில் குடியமர்ந்த குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றிப் பெரும் அவலத்தில்

வலி.வடக்கு,ஏப்.17

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவை கலட்டி பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் எவையும் இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

மக்கள் குடியேற்றப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும் இந்த மக்களுடைய அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படாதநிலையில் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இடம் பெயர்ந்து அகதி முகாமில் வாடி வதங்கிய இந்த மக்களில் ஒரு பகுதியினர் தற்போது சொந்தக் காணிகளில் ஒரு பகுதி மக்களும் மற்றொரு பகுதியினர் அரச கலட்டுக் காணியிலும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்த மக்களுக்கு வேண்டிய குடி தண்ணீரைக் கூட பெற முடியாத நிலையில் இருப்பதுடன் வலி.வடக்கு பிரதேச சபையினால் நாளாந்தம் வழங்கப்படும் குடிதண்ணீரை நம்பியே தமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றார்கள்.

சுமார் 80 மேற்பட்ட குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீளக்குடியேற்றப்பட்டுள்ளதுடன் இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 260 இற்கும் மேற்பட்டவர்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றார்.

# மணியந்தோட்டத்தில் குடியமர்ந்தோருக்கு 'சோ ஆ' நிறுவனத்தின் உதவித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மணியந்தோட்டப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு 'சோஆ' நிறுவனம் பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கியுள்ளது.

தலா ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 அரை நிரந்தர வீடுகளையும் தலா 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 மலசலகூடங்களையும் 'சோஆ' நிறுவனம் அந்த மக்களுக்கு நிர்மாணித்து வழங்கியுள்ளது.

அதேபோல 3 லட்சம் ரூபா பெறுமதியில் அரை நிரந்தர பொது மண்டபம் ஒன்றையும் அது அமைத்துக் கொடுத்துள்ளது.

அத்துடன் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 94 வாழ்வாதாரத் திட்டங்களும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தென்னங்கன்றுகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவை கடந்த 13 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதாக 'சோஆ' நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் யே.யுட் வோல்ட்டன் தெரிவித்தார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் தலவரலாறு!...

997ஆம் ஆண்டில் இராஜஇராஜனின் படைகள் வடஇலங்கையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கைக்கும் சோழ நாட்டுக்குமான தொடர்புகள் மிக வேகமாக அதிகரித்து வந்தன. ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டுப் போர்வீரர்கள் இலங்கையில் காலூன்றியதால் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உணவு மற்றும் தளபாடங்களும் சோழநாட்டில் இருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இதனால் போர்வீரர்கள் தவிர்ந்த அவர்களின் உதவியாளர்களும் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். இந்நிலையில் இவர்களுடைய போர் வீரர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கடிதப் போக்குவரத்தும் தொடர்ந்திருந்தன. அவ்வாறான ஒரு நாளில் கோடிக்கரையின் ''கணக்கர்மடத்தில்'' இருந்து மூன்று படகுகள் வல்வெட்டித்துறையை நோக்கிப் புறப்பட்டன.

அப்படகுகள் புறப்படும் சமயத்தில் அங்குவந்த கறுத்த மூதாட்டி ஒருவர் தன்னையும் ஏற்றிச் செல்லுமாறு கூறிக்கொண்டே அப்படகுகளில் ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டார். படகோட்டிகளுக்கோ ஆச்சரியத்துடன் கோபமும் ஏற்பட தம்மை மீறிப்படகில் ஏறிய மூதாட்டியை இறங்குமாறு பணித்தார்கள். ஆனால் மூதாட்டியோ தான் இறங்கமாட்டேன் எனத் தொடர்ந்து பிடிவாதமாக படகிலேயே இருந்தார். அவரை இறக்கிவிட வழி தெரியாமல் படகோட்டிகளும் நீ யார்? எங்கே போகின்றாய்? என வினவினார்கள்! அதற்கு மூதாட்டியும் தனது பெயர் ''கயிலை மலைமாதரசி'' என்றும் தான் வல்வெட்டித்துறைக்கு போக வேண்டும்! எனக் கூறினார்! என்ன காரணத்துக்காகப் போகின்றாய்? என இவர்கள் மறுபடியும் கேட்ட கேள்விக்கு பதிலேதும் கூறாமல் சிரித்துவிட்டு கடலைப் பார்த்தவாறு இருந்தாராம்.

இறுதியாக படகோட்டிகள் மூதாட்டியையும் ஏற்றிக்கொண்டு வல்வெட்டித்துறையை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் அமைதியாக இருந்த கடலில் படகுகள் நடுக் கடலை அடைந்ததும் அலைகள் சீறிக்கொண்டு கொந்தளிக்க காற்றும் வேகமாக வீசிக்கொண்டதால் படகு கவிழ்ந்து விடாமல் இருக்க பாயைச் சுருக்கிய படகோட்டிகள் ஆபத்தில் இருந்து காப்பாற்றுமாறு கடல் தாயை கூவி அழைத்தார்கள். இவ்வாறு இவர்கள் கூவி அழைக்கவும் அதுவரை அமைதியாக இருந்த மூதாட்டியும் பொங்கிவந்த கடல் அலையில் கைவைத்து ''சீ சும்மா இரு'' என அதட்டினார்.



அவ்வளவில் பொங்கிய கடலும் அமைதியடையவே ஆச்சரியத்துடன் படகோட்டிகளும் வல்வெட்டித்துறையை நோக்கிப் படகைச் செலுத்திச் சென்றனர். வல்வெட்டித்துறையில் அக்காலத்தில் பிரசித்தமாயும் கடல் துறையாகவும் விளங்கிய இன்றைய ''கப்பல் கிழவன்'' கோயிலுக்கு அண்மையில் கரையேறிய படகுகளில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு முன்பாகவே கரையில் இறங்கிய மூதாட்டியும் அவர்களுக்கு ஆசி கூறிவிட்டு அங்கிருந்து தெற்கு நோக்கி சென்றுவிட்டார். படகுகளில் இருந்து பொருள்களை இறக்கிவிட்டு படகோட்டிகள் சென்ற பொழுது இன்று முத்துமாரியம்மன் கோயில் அமைந்திருக்கும் இடத்தில் நின்ற வேப்பமரத்தின்கீழ் அம்மூதாட்டி அமர்ந்திருக்கக் கண்டார்கள். அதன் பின் அந்த வேப்பமரத்தடியில் சில நாள்கள் காணப்பட்ட அந்த மூதாட்டியை பின்னர் யாருமே காணவில்லையாம். ஆனால் இது நடந்து சில நாள்களின் பின் இரவில் அந்த வேப்பமரத்தடியில் ஒளி ஒன்று தென்பட ஆரம்பித்ததாம். இவ்வாறு அந்த வெளிச்சத்தைப் பல தடவைகள் கண்ட அப்படகோட்டிகளும் ஏற்கனவே கடல்மீது தாம் கண்ட அதிசயத்தையும் நினைத்து தம்முடன் கோடிக்கரையில் இருந்து வந்த மூதாட்டி வேறுயாருமல்ல மாரியம்மனே! என உணர்ந்து அந்த வேப்பமரத்தடியில் ஒரு கொட்டில் அமைத்து வழிபட ஆரம்பித்தார்கள்.

காலம் செல்லச் செல்ல இடையில் பல மாற்றங்களுக்கு உள்ளாகிய முத்துமாரியம்மன் தேவஸ்தானம் இன்றைய உருவையடைந்தது.

## பிரதம குருவின் அருளாசியுரை



மதுரையில் மீனாட்சியாக, காஞ்சியில் காமாட்சியாக, காசியில் விசாலாட்சியாக அருளாட்சி செய்து கொண்டிருப்பது போல வல்வையம்பதியில் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் ''கர'' வருட இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

தமிழ்நாடு கோடிக்கரையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோணியில் கடல்வழியாக வந்து அருளாட்சி புரிபவள்தான் இந்த முத்துமாரி அம்மன் ஆவார். மகோற்சவம் என்பது ஐந்தொழில்களையும் குறிப்பதாகும். அதில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது.

அந்த அம்பிகையின் திருப்பாதங்களை கடந்த ஐம்பது வருடங்களாக பூசிப்பதற்கு எனக்கும் ஒரு வரத்தைத் தந்திருக்கின்றாள். இத்தகு பெருமைமிகு சக்தி பேரருள் வடிவத்தில் திருத்தேரில் பவனி வந்து அடியார்களுக்கு நல்லருள் செய்கின்றாள். அவளைப் பணிந்து எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் கிடைக்க எனது உள்ளார்ந்த நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

வண்ணரத தேரினில் அமர்ந்து
காணுகின்ற காட்சி அழகோ அழகு
வடம்பிடிக்கும் அடியார்கள்
குறைநீக்கி வரம் தருவாயே
அருள்வாயே மகமாரி பரமேஸ்வரியே

சுபமஸ்து

'சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு',
பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்',
'பிரதிஷ்டா சிரோமணி'
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
J.P (அகில இலங்கை)
குருபீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்,
பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

## மெய்யான ஒளி தருவதாகும்



அம்பாள் அடியார்களே!

வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் இன்று தேரேறி அருட்காட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் தேர்த்திருவிழா முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு இறைவனுடைய ஐந்து செயல்களையும் நமக்கு உணர்த்துவது திருவிழாக்களாகும். இவ்வாறாக தேர்த்திருவிழா அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞான ஒளியைத் தருவதாகும். மனித வாழ்க்கையை முழுமையடையச் செய்வது ஆலய வழிபாடு. ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் அனைத்தும் மனித நேயத்தோடு வாழ வழி வகுக்கின்றன. இதைனையே ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று நித்தமும் எம்பிராட்டி கோயில் புகுக என்றும் நம்சமயம் கூறுகின்றது.

இதனை உணர்த்தும் வகையில் வல்வையூர் பல ஆலயங்களைக் கொண்டு விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் எழுந்தருளி அருள் புரியும் ஸ்ரீ முத்துமாரியம்பாளை அனைவரும் வழிபாடு செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

கா.தருமகுலசிங்கம்,
தலைவர், தர்மகர்த்தா சபை,
ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறை.

## பிரதம குருவின் ஆசிச் செய்தி



வல்வை நகரின் கீர்த்திக்கும் பெருமைக்கும் சான்றாக இருப்பவை அம்மை அப்பன் ஆலயங்களாகும்.

கலை, கலாசார விழுமியங்களை இன்றும் பேணிப் பாதுகாக்கும் வல்வை நகரில் அப்பனுக்கு பங்குனி பூரணை நன்னாளில் சமுத்திரதீர்த்தப் பெருவிழாவும் முத்துமாரி தாய்க்கு சித்திராபூரணை நன்னாளில் சமுத்திரத் தீர்த்தப் பெருவிழாவும் அமையும் வண்ணம் பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன.

இன்றைய நன்னாளில் அம்பாள் அழகிய சித்திரத்தேரில் பவனி வரும் திருக்காட்சி சிறப்பான தொன்றாகும்.

''ஊர் கூடித்தேர் இழுப்போம் வாரீர்'' என்ற எண்ணக் கருவூலகத்தில் மக்கள் அனைவருமே இன்று அம்பிகையின் தேர்த்திருவிழாவில் கலந்து வேண்டிய வரங்களை பெற்று மகிழ்கிறார்கள்.

இன்றைய நன்னாளில் அம்பிகையை பிரார்த்திக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் வாழும் அனைத்து சைவப் பெருமக்களுக்கும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ அன்னை முத்துமாரி தாயைப் பணிந்து பிரார்த்தித்து எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''
சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
*இந்துமத குருபீடாதிபதி.*

**கிருஸ்ணா பான்ஸி ஹவுஸ்**
அன்பளிப்பு பொருள்கள், பாடசாலைப் பொருள் கள், பாதணிகள், நிறைகுட செற் வகைகள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம். நவீன சந்தை, வல்வெட்டித்துறை. கடை இலக்கம்17

**BLOOM தாய்சேய் பல்பொருள் அங்காடி**
Dialog, Hutch, Airtel, Mobital, Etisalate, Reload & Topup Card, A/c Bus, Seat Ajustable Bus, Semi, Luxsary Bus Booking தாய்மார், குழந்தைகளுக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள
K.K.S. Road, வல்வெட்டித்துறை (சந்தி)

**WELWISH Medical Centre**
குமரக் கோட்டம், ஆலடி,
வல்வெட்டித்துறை.

**துளசி மல்ரி பிளாசா**
**பல்பொருள் வியாபாரம்**
உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி
Proprietor : Mr.S.NATHAN.

**சீவரத்தினம் வெதுப்பகம்**
வல்வெட்டித்துறை.
T.P- 0776985188

**நிலா பல்பொருள் வாணிபம்**
உதயசூரியன் வீதி, மதவடி, V.V.T
T.P-0772238550

**நிரு ஸ்ரோர்ஸ்**
**பலசரக்கு வியாபாரம்**
அம்மன் வீதி, வல்வெட்டித்துறை.

றெடிமெற் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
**சிறிமுருகா புடைவையகம்**
18, நவீன சந்தை, வல்வெட்டித்துறை.
T.P- 0778364825

**கிருஜா ஸ்ரோர்ஸ்**
197, பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.

அலங்காரத் தேர் மீது ஏறி வலம் வரும் அன்னை வல்வை முத்து மாரியம்மன் அனைவருக்கும் அவல வாழ்க்கை நீங்கி அமைதி திரும்ப அருளவேண்டும்.
**சிவகாமி இரும்பகம்**
கட்டடப் பொருள்கள், பெயின்ட் வகைகள், மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்.
யாழ்.வீதி, வல்வெட்டித்துறை. T.P- 0779382357

வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு DHL ஊடான குறைந்த கட்டணத்தில் மிகதுரிதமான பொதிகள் அனுப்பும் சேவை மற்றும் வல்வை - கொழும்பு, வல்வை - திருமலை ஆகிய இடங்களுக்கு சொகுசு, அரைச் சொகுசு பஸ் ஆசன பதிவுச் சேவை. நாடவேண்டிய இடம்:
**கீரன் புத்தகசாலை,** இல.1, 05, நவீன சந்தை, வல்வெட்டித்துறை T.P - 0773441590
(அ/577700)

**போலியை நம்பாதீர்**
இலங்கையில் முதன் முதலாக நீலசோப்பை அறிமுகப்படுத்திய மில்க்வைற் என்ற பெயரினைப் போன்ற போலி வெள்ளைக் கட்டிச் சவர்க்காரங்கள் போலி உற்பத்தி விநியோகத்தர்களால் விற்கப்படுகின்றன.
பாவனையாளர்கள், வர்த்தகர்கள் அவதானமாக இருங்கள்.
**மில்க்வைற் தொழிலகம்,**
**527, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(39-20-25)

## சாவகச்சேரி - புத்தூர் வீதிக்கு காப்பெற்

சாவகச்சேரி, ஏப்.17

சாவகச்சேரி - புத்தூர் வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது. ஏ-9 வீதியில் மீசாலை - புத்தூர் வரையிலான வீதி காப்பெற் வீதியாக சீன அரசின் நிதியில் இருந்து புனரமைக்கப்படவுள்ளது.

அதற்கான முதற்கட்ட வேலையாக வீதியின் மையப் பகுதியில் இருந்து இருபக்கமும் 7 மீற்றர் வரையான பகுதிகள் அகலப் படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான அறிவுறுத்தல்களும் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

வீதிகள் அகலப் படுத்தப்படும் போது அங்கு காணப்படும் பயன்தரு மரங்கள் அழிக்கப்படுவதால் ... விக்கின்றனர்.

இந்நிலையில் சரசாலை, மீசாலை உள்ளிட்ட பகுதிகளில் வீதியோரமாகவுள்ள வேலிகளை அகற்றுவதில் வீட்டு உரிமையாளர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

(ம-131)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.... பலஸ்தீனமே.... நீயுமா...?

ஞாயிறு காரம்

பிரபல ஆங்கில நாடகாசிரியர் சேக்ஷ்பியரின் படைப்புக்கள் தமிழ் மக்களிடையே ஒரு காலத்தில் மிகவும் செல்வாக்குச் செலுத்தி வந்தவை. அவரின் நாடகங்கள் பல பாடசாலைகளாலும் நாடக மன்றங்களாலும் ஆங்கிலத்திலும் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டும் மேடையேற்றப்பட்டன. இலங்கையில் தமிழ்ப் படங்களின் தயாரிப்பு ஆரம்பமான காலகட்டத்தில் அவரின் 'மக்பெத்' நாடகம் சினிமாப் படமாகத் தயாரிக்கப்பட்டிருந்ததை நினைவு கூரலாம்.

அவரது 'யூலியஸ் சீசர்' நாடகம் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு படைப்பாகும். அதில் யூலியஸ்சீசரைக் குற்றம் சாட்டும் வகையில் புரூட்டஸ் மேற்கொள்ளும் உரையும் அதேபாணியில் ஆரம்பித்து மார்க் அன்ரனி புரூட்டோஸின் வாதங்களை முறியடிக்கும் விதமும் சேக்ஷ்பியரின் ஒப்பற்ற ஆற்றலின் சாட்சியங்களாகும்.

ஆனால் நடைபெற்ற ஒரு விருந்தின்போது சகல பிரதானிகளும் ஒவ்வொருவராக யூலியஸ் சீசரைக் கத்தியால் குத்த கடைசியாக அவரின் நம்பிக்கையான நண்பன் எனக் கருதப்பட்ட புரூட்டோவும் அவரின் வயிற்றில் கத்தியைப் பாய்ச்சுகிறான். அப்போது அவர் சொன்ன கடைசி வார்த்தைகள் ''ஓ... புரூட்டோஸ்... யூ... ரூ...''

''ஓ... புரூட்டோஸ்... நீயுமா?'' என்பதுதான் அந்த வார்த்தைகள். சேக்ஷ்பியரின் திறமையையும் கவித்துவத்தையும் வெளிப்படுத்தும் எத்தனையோ வசனங்கள் இருந்தபோதும், இந்த வார்த்தைகள் ஏனையவற்றையும் விட ஜனரஞ்சமாகவும் அமரத்துவம் பெற்றவையாகவும் விளங்கி வருகின்றன.

நம்பியிருப்பவர்கள் துரோகம் செய்யும்போது எவருக்குமே நினைவுக்கு வருவது இந்த ''ஓ... புரூட்டோஸ்... நீயுமா?'' என்ற வார்த்தைகள்.

இப்போது அதே வார்த்தைகளை இலங்கை வாழ் தமிழ் மக்களும் பாலஸ்தீன அரசைப் பார்த்துக் கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டனர்.

ஆம்! இப்போது பலஸ்தீனத்தைப் பார்த்துக் கேட்கிறோம் ''ஓ... பாலஸ்தீனமே... நீயுமா?''

பாலஸ்தீன மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்குமிடையே நீண்டகால ஒரு நெருக்கமான உறவு உண்டு. பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் வெறியாட்டம் நடத்தும் போதெல்லாம் கண்டனக் குரல் எழுப்பி பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் தமிழ் மக்கள். 1974 காலப் பகுதியில் இஸ்ரேல் பெரும் ஆக்கிரமிப்புப் போரை மேற்கொண்டு பலஸ்தீன மக்களை ஆயிரக்கணக்கில் விரட்டியடித்தபோது பெரும் ஆர்ப்பாட்டங்களையும் பொதுக்கூட்டங்களையும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்தித் தமிழ் மக்கள் பலஸ்தீனத்திற்காகக் குரல் கொடுத்தனர்.

அதுமட்டுமின்றி தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்தில் பல போராளிகள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் இராணுவப் பயிற்சி பெற்றதையும் நாம் மறந்துவிட முடியாது. கொழும்பில் அமெரிக்கத் தூதரக வளாகத்தில் இஸ்ரேல் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டபோது அதற்கெதிராக யாழ்ப்பாணத்தில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டமையும் அதன் காரணமாகப் பலர் கைது செய்யப்பட்டமையும் வரலாற்றில் மறைக்கப்பட முடியாதவை.

இலங்கைத் தமிழ் மக்களும் பலஸ்தீன மக்களும் ஒரேவிதமான அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்தவர்கள் என்ற வகையில் எங்கள் இரு தரப்பினரின் கரங்களும் நெருக்கமாகவே பிணைக்கப்பட்டிருந்தன. உறவுகள் நெருக்கமாகவே நிலவி வந்தன.

ஆனால் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா. செயலருக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தபோது பாலஸ்தீன அரசு வெளியிட்ட கருத்து ''ஓ... பலஸ்தீனமே... நீயுமா?'' எனக் கேட்க வைத்து விட்டது.

கடந்த 3 தசாப்தங்களாக நிலவி வந்த புலிப்பயங்கரவாதத்தை இலங்கை அரசு ஒழித்து ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாக பொருளாதார அபிவிருத்தியை முன்கொண்டு செல்வதாகவும் போலியான குற்றச் சாட்டுக்களை முன்வைத்துச் சர்வதேசம் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்தவேண்டும் எனவும் பலஸ்தீன அரசால் விடுவிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏராளமான உலகை வியக்க வைக்கும் அர்ப்பணிப்புக்களோடும் பேரிழப்புக்களோடும் முன்சென்ற தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக பலஸ்தீன அரசு இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைக் குரலில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளமை ஒரு புனிதமான விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் ஓர் இனத்தின் உரிமைகளை உதாசீனம் செய்யும் வகையிலும் தமிழ் மக்களின் மனங்களைப் படுமோசமான முறையில் புண்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

இன்று பலஸ்தீனத்தின் ஆட்சியில் அமர்ந்திருக்கும் பலஸ்தீன விடுதலை அமைப்பு ஒரு காலத்தில் கொடிய பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. ஆனால் பலஸ்தீன மக்கள் அதைப் பொருட்படுத்தாது அளவற்ற தியாகங்களுடன் தங்கள் போராட்டங்களைத் தொடர்ந்தனர். இந்தப் போராட்ட வலிமையே பாலஸ்தீனத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தது.

இந்தப் போராட்ட வலிமையே பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே பேச்சுக்களை ஆரம்பிக்க வழிகோலியது என்பதையும் ஒஸ்லோ உடன்பாடு எட்டப்பட ஒரு வாய்ப்பை உருவாக்கியது என்பதையும் மறுத்துவிட முடியாது.

இந்த உடன்படிக்கையை கமாஸ் இயக்கம் ஏற்றுக்கொள்ள மறுத்துப் போராட்டத்தைத் தொடர்வதும் பலஸ்தீனத்தின் ஐ.நா. பிரதிநிதியாக இருந்தவரும் கவிஞரும் முன்னணிப் போராளிகளில் ஒருவருமான முகமது நார்ஷ்விக் மண்ணைவிட்டு வெளியேறியமையும் வேறு விடயங்கள். ஆனால் இன்றுவரை மேற்குக்கரையில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதையோ காஸாப் பகுதி மீது விமானத் தாக்குதல் நடத்தப்படுவதையோ தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஆனால் வருடக்கணக்கில் பேச்சுக்கள் தொடர்வதும் நிறுத்தப் படுவதும் பின் தொடர்வதும் என ஒரு போலி நாடகம் அரங்கேற்றப்படும் அதே வேளையில் பலஸ்தீன மக்கள் கொல்லப்படுவதும் நிலம் பறிபோவதும் இடம் பெற்றே வருகின்றன.

முனைப்புடன் ஏராளமான உயிர்த் தியாகங்களுடன் முன் சென்ற பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை தீர்த்துப் போக வைத்ததில் அமெரிக்காவுக்கு உள்ள பங்கைப் போன்று இன்றைய பலஸ்தீன அரசுக்கும் உண்டு.

**சந்திரசேகர ஆசாத்**

ஒரு காலத்தில் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்ட பலஸ்தீன விடுதலை அமைப்பு இன்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனக் குறிப்பிட்டது ஒரு நகைப்புக்கிடமான சிறுபிள்ளைத்தனம் என்பது மட்டுமல்ல பலஸ்தீன விடுதலை இயக்கம் தன்னிலை தாழ்ந்து அடக்குமுறையாளர்களின் நிலைப்பாட்டை எடுத்துவிட்டது என்பதன் வெளிப்பாடுமாகும்.

பலஸ்தீன அரசின் அறிக்கையில் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதைச் சர்வதேசம் நிறுத்த வேண்டும் எனக் கண்டிப்பான தொனியில் கேட்கப்பட்டுள்ளது. நிச்சயமாக எந்தவோர் உள்நாட்டு விவகாரங்களிலும் எவரொருவர் தலையிட்டாலும் அது அப்பட்டமான அத்துமீறல் என்பதை எவரும் மறுத்தவிடமுடியாது. ஆனால் ஒரு நாட்டின் உள் விவகாரம் என்பது எது என்பது தொடர்பான வரையறை எது என்பதுதான் இங்கு குழப்பங்களை ஏற்படுத்துகிறது. ஒரு நாடு தனது மக்களைக் கொன்றொழிப்பதற்கும் மனித உரிமை மீறல்களைத் தொடர்வதற்குமான ஒரு நிலை எழும்போது அதை உள்நாட்டு விவகாரகமாக மட்டுப்படுத்திவிட முடியுமா?

அப்படியானால் ஹிட்லர் 60 லட்சம் யூதர்களைக் கொன்று தள்ளியமையையும் இடி அமீன் தனது மக்களை அழித்தமையையும் உள்நாட்டு விவகாரமாகக் கொள்ள முடியுமா? அப்படியானால் ஏன் மிலோசிவிர்வும் ரெய்லரும் போர்க்குற்ற நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டனர்.

இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு காலத்தில் உள்நாட்டுப் பிரச்சினையாகவே அமைந்திருந்தது. ஆனால் 1983 ஆம் ஆண்டின் பின் இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டது. இதன் காரணமாகவே 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் இடம்பெற்றது. 2002 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்றபோது நோர்வே, இணைத் தலைமை நாடுகள் எனச் சர்வதேசமயப்பட்டே இந்தச் சமாதான முயற்சிகள் இடம்பெற்றன. இந்தக் காலத்தில் பல சர்வதேச நாடுகள் புலிகளைப் பயங் கரவாதிகள் எனப் பிரகடனம் செய்திருந்தன என்பதை மறுத்துவிட முடியாது.

2000 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே இடம்பெற்ற போரின் போது விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் இலங்கை அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல உதவிகளை வழங்கின. எனவே விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே இடம்பெற்ற போர் சர்வதேச மயப்படுத்தப்பட்டே இடம்பெற்றது. எனவே விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு உதவி புரிந்த சர்வதேசம் அதில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மீதும் மனித உரிமை மீறல்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டுள்ளது.

அதை உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது எனக்கூறி உண்மைகளைத் திரிபுபடுத்த எவருக்கும் உரிமையில்லை. அதிலும் இன்னும் ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் பலஸ்தீன மக்களின் அரசியல் பிரதிநிதியான ஓர் அரசு இப்படிக் கூறுவது ஒரு படுமோசமான யதார்த்தத்திலிருந்து மாறுபடும் ஒரு நடவடிக்கையாகும்.

இங்கு ஒரு பலஸ்தீனக் கவிஞனின் கவிதை வரியை நினைவூட்டுவது பொருத்தமாயிருக்கும்.

''இப்போது எங்களின் குருதி சிந்தும்
காலம் முடிந்து விட்டதாம்?
ஐக்கிய நாடுகளின் கூடாரச்
சேலைகளின் கீழ்
இன்றும் சிந்தப்படும் கண்ணீர்
நிற்காதவரை
பாலைவனமாகிப் போய்விட்ட
எனது தாய் மண்ணில்
கள் மலரும் வரை
குருதியும் கண்ணீரும் ஓடிக்
கொண்டேயிருக்கும்.
நாம் மீண்டும் கேட்கிறோம் ''ஓ...
பாலஸ்தீனமே!... நீயுமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

பெண்கள் அழகு நிலையத்துக்கு, அழகுக் கலைப் பயிற்சி பெற்ற பெண்தேவை.

தொடர்பு: 0776277332

**வீடு விற்பனைக்கு**

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: எஸ்.எஸ். நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே: 0776146434

## கல்விமாணி மாணவருக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.17

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்ட நெறி மூன்றாம் வருட மாணவர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு சகல மூன்றாம் வருட மாணவர்களையும் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ம)

**காணி விற்பனைக்கு**

சின்னமலை ஏற்றம் தொண்டமானாறில் 03 அறை வீட்டுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:

0777309261, 0773793366

**காணி விற்பனைக்கு**

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் சட்டப்படி பிரிவிடல் செய்யப்பட்ட தனிவழிப் பாதையுடனும் 6 பரப்புக் காணியும், நெல்லியான், மருதங்கேணியிலும் காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0772197195

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் வைத்தியர் குடும்பத்துக்கு வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 0777730224

**காணி/ வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ELECO Constructions எம்மிடம் காணிகளை (1,1½,2 பரப்புகள்) உங்கள் தேவைக்கு ஏற்ப கொள்வனவு செய்யவும், வீட்டை கட்டிக் கொள்வதற்கும் தொடர்பு கொள்ளவும். (மிகக் குறைந்த நாள்களில் வங்கிக் கடன், BOQ என்பன செய்து தரப்படும்). தற்போது கோண்டாவிலில் எமது கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்புகளுக்கு: 0770391295

**தேவை** யாழ். நகரப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்துக்கு A/L படித்த பெண் எழுதுவினைஞர் தேவை. தொடர்பு: 0779459149

# விற்பனை பிரதிநிதிகள்



விவசாய உபகரண வியாபார விருத்திக்கு

70 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட DIMO நிறுவனம் இலங்கையில் வெற்றி மேல் வெற்றி பெற்று பயணிக்கும் பொறியியல் நிறுவனமாகும், மாபெரும் கீர்த்தி பெற்ற வர்த்தக நாமங்களான Mercedes Benz, TATA, Komatsu, Mahindra, Bomag, CLAAS போன்றவற்றுடன் நீண்ட காலமாக இணைந்து விற்பனைச் சந்தையில் முதலிடத்தைப் பெற்றுவந்துள்ளோம்.

DIMOவினால் இறக்குமதி செய்து விநியோகிக்கப்படும் Mahindra டிரக்டர்கள் மற்றும் CLAAS அறுவடைக்கான இயந்திரங்கள் இலங்கையின் விவசாய உபகரண விற்பனைச் சந்தையில் அதிகூடிய சந்தைப் பெறுமதியைப் பெற்றுள்ளது.

நீங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் வசிப்பவராயின், சிறந்த ஆளுமையுடைய, திறமையான, முற்போக்கான, தனித்துவமான இயல்பு உடையவராயின் உங்களுக்கு எமது நிறுவனத்துடன் இணைய ஓர் சிறந்த சந்தர்ப்பம்.

தகைமைகள்

- 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கணிதம், ஆங்கிலம் உட்பட சாதாரண தரத்தில் சித்தி மற்றும் உயர் தரத்தில் 2 பாடங்களில் சித்தி.
- CIM/SLIM (பூர்த்தி செய்த / செய்யப்படாத) மேலதிக தகைமையாகும்.
- ஆகக்குறைந்தது ஒரு வருட கால அனுபவம், விவசாய உபகரணங்களைப் பற்றிய சாதாரண தொழில்நுட்ப அறிவு மற்றும் தொடர்பாடல் திறன்.
- மும்மொழித் திறன் மேலதிக தகைமையாகும்.
- மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.

பொறுப்புகள்

விவசாய உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை உங்களுக்கு உரித்தான பிரதேசத்தின் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.

DIMO குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கு கிடைக்கும் விஷேடமான வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வதுடன் சிறிய சலுகைக் கட்டணங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

உறவினர் அல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் உங்கள் சுய விவரத் தரவுகளை இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 7 தினங்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியை குறிப்பிடுக.

Mahindra TRACTORS

CLAAS

dimo TECHNOLOGY உன்னத எதிர்பார்ப்பு

General Manager - Human Resources
DIESEL & MOTOR ENGINEERING PLC
65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
www.dimolanka.com

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 26.09.1947

ஆண்டவன் அடியில்: 28.04.2010

திதி - சித்திரைப் பௌர்ணமி

அமரர்

## இராசையா செல்வநாயகம்

அன்புடன் எம்மை
அரவணைத்த தெய்வமே!
கண்ணிமைக்கும் பொழுதில்
கலங்கி எமைக் கதறவிட்டு
எங்குதான் சென்றீரோ?
ஆண்டொன்று ஆனதப்பா
ஆறவில்லை எம் துயரம்
உம் ஆத்ம சாந்திக்காய்
என்றென்றும் பிரார்த்திப்போம்



கரந்தன், நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

## ஆன் செபஸ்தியான் டிலக்சனா

அன்னை மடியில் 24★12★1993

ஆண்டவன் அடியில் 17★04★2008

என் அன்பு மகளே! என் குலம் விளங்க வந்த குல விளக்கே!
ஒரு மகளாய்ப் பிறந்து என் குலம் விளங்க வைப்பாய்
என்று நான் பார்த்திருக்க
இரக்கமற்ற காலனவன் உன்னை
இடை நடுவில் கவர்ந்து சென்றுவிட்டான்
எமக்கு எல்லாம் வழியாய் இருந்து என் கடைசிக்காலம் வரை
எனை வழிநடத்துவாய் என்று நான் நினைத்திருக்க
கணப்பொழுதில் எமை எல்லாம் தவிக்க விட்டு சென்றாயோ?
உனை கற்பித்தவர்கள் உன் திறமைகளைக் கூறும்போது
உனைப்பற்றிக் கற்பனைக் கோட்டையே கட்டிவைத்தேனம்மா
அதையெல்லாம் காலைப் பொழுதில் வந்து தவிடு
பொடியாக்கிவிட்டான் அரக்கனவன்
ஆசையாய் வளர்த்த என் மகளின் நினைவுகள் எனை வாட்டும் போது
தனிமையில் நான் அழுவதை நீ அறிவாயோ என் மகளே.

நி.மு: 6 ஆம் வட்டாரம், மயிலிட்டித்துறை.
த.மு: எரிஞ்ச அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை. (3219)(38)



ஆன் செபஸ்தியான் டிலக்சனா

**தவறிவிட்டது** பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியுடைய சிற்றம்பலம் அரவிந்த் என்பவரின் தேசிய அ.அ. (893460039V), வாகன பதிவு ஆவணம், பல்கலைக்கழக அ.அ, ATM Cards 3 என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணம் ஐந்து சந்தி, சிவன் பண்ணை வீதி பகுதிகளுக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொ.பேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 0212223825, 0774955531

**கார்விற்பனைக்கு**

நல்ல நிலையில் பராமரிக்கப்பட்ட Volkswagon GOLF (12xxxx) AC, Alloy Wheel என்பவற்றுடனான Car விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0715360894

# COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe., Nuendo,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

**DMI COMPUTER EDUCATION**

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி. Tel. : 021-226 2470
சாவகச்சேரி. Tel. :021-227 0243

**காணி விற்பனைக்கு**

நவாலி வடக்கு மானிப்பாயில் 13½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: எஸ்.ராசன்

தொ.பே: 0776450291

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRAHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 20.04.2011 விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

★ பிள்ளையார் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் NO-27 பிரதான வீதி, நெல்லியடி.

T.P.NO. 2222867, 0776090926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரத்தில் தோற்றாத முன்பள்ளி ஆசிரியருக்கு விசேட பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.17

பத்து வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களில் ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றாமல் உள்ளவர்களுக்கு விசேட பரீட்சை நடத்தி அவர்கள் தொடர்ந்து முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.செல்வராஜா தலைமையிலான குழுவினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரிடம் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடமாகாணத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள், ஒன்றியம் மூலம் கல்வி அமைச்சிடம் பாரப்படுத்தப்பட்டது. கல்வி அமைச்சின் செயற்பாடுகளை முன்னெடுக்க நியமிக்கப்பட்ட உயர்மட்ட நிர்வாகக் குழுவில் தனியே கல்விப் பணிப்பாளர்கள், செயலாளர்கள் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதில் பொதுப் பிரதிநிதி நடுவர் உள்வாங்கப்படவேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முற்கொடுப்பனவுகள் வழங்குவதில் பாரபட்சம் இருக்கக்கூடாது. முன்பள்ளி ஆசிரியர்களில் 400 பேருக்கு மட்டும் அண்மையில் முற்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை வரவேற்கிறோம். ஆனால் இந்தத் தெரிவு எதனடிப்படையில் இடம்பெற்றது என்பது தெரியாது. ஏனைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் முற்கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவேண்டும்.

45 வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் உட்பட அனைவரும் 01.01.2011இல் இருந்து யாப்பினுள் உள்ளடக்கப்படவேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களில் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கு ஒரு வருட காலப்பகுதியே வழங்கப்பட்டுள்ளது. இதனை இரண்டு வருடங்களாக அதிகரிக்க வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிக் கற்கைநெறியை மேற்கொள்வதற்காக 3 வருட காலப்பகுதி வழங்கப்பட்டுள்ளது. இது நான்கு வருடங்களாக அதிகரிக்கப்படவேண்டும்.

இதுவரை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றாதிருந்து தற்போது தோற்றவிரும்புவர்களுக்கும் பரீட்சைக் காலம் வரை உதவு தொகைப்பணம் வழங்கப்படவேண்டும். இவ்வாறு அந்த மகஜரில் உள்ளது. (த-4)

# விபத்தில் குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபரை சிவில் உடையில் டரக்வண்டியில் வந்த ஒருவர் பின்புறமாக மோதியதனால் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் காயத்துக்குள்ளானார்.

காயங்களுக்குள்ளானவர் பின்னர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டார். டரக் வண்டியைச் செலுத்தியவரை நெல்லியடி பொலிசார் கைதுசெய்தனர்.

இச்சம்பவம் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தில் கெருடாவில் தெற்கு தொல்புரத்தை சேர்ந்த வி.நந்தகோபால் (வயது-49) என்பவரே காயமடைந்தார். (த-4)

# கலையரங்கு திறந்து வைப்பு

கொழும்புத்துறை,ஏப்.17

கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட கலையரங்கத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை மாலை நிலையத் தலைவர் க.நடராசா தலைமையில் நடைபெற்றது.

கொழும்புத்துறை விநாயகர் ஆலயத்திலிருந்து சிலம்பாட்ட அணி வகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலையரங்கைத் திறந்துவைத்தார்.

கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையக் கலையரங்கு எனப் பெயரிடப்பட்ட இந்த அரங்கத் திறப்பு விழாவில் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, உதவி மேயர் து.இளங்கோ, முன்னாள் மாநகர சபை உறுப்பினர் தம்பு கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பரிசளிப்பும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-135)

## வினைகள் தீர்க்கும்....



*அமைதி பொங்கட்டும்: நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலில் நேற்று இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது சுவாமி தேருக்கு ஆரோகணித்து எழுந்தருளி வீதியுலா வருகிறார்.* (த-7)

# கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் அழகியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.17

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் அழகியல் கண்காட்சி நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் காலை 9.30 மணிமுதல் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (313)

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 2 குடும்பங்களுக்கு சைக்கிள்கள்

தென்மராட்சி,ஏப்.17

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

பளை அரசர்கேணி, இயக்கச்சி முருகானந்தா நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களுக்கே இந்தச் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தந்தையைத் தடுப்பு முகாமில் பிரிந்து வாழும் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஆறு மாத காலத்திற்கு பால்மா வழங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் செயலாளர் த.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார். (த-207)

# மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி யாழ். இந்துவில் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

மிதிவெடி செயற்பாட்டு விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டுக் கண்காட்சி மற்றும் கலை, விளையாட்டு நிகழ்வுகள் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 20ஆம், 21 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வட பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது, பிராந்திய மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்களும், இராணுவ பொறியியல் படைப்பிரிவு ஹலோ ரஸ்ட், டனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனங்களின் கண்ணிவெடி அகற்றுதலுக்கான செயன்முறை விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கண்ணிவெடி அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரப் பொறிகளின் வகைகள் காட்சிப் படுத்தப்படவுள்ளதுடன் மிதிவெடி விழிப்புணர்வு நிறுவனங்களின் பல்வேறு காட்சிப்படுத்தல்களும் இடம்பெறவுள்ளன. (த-14)

# விபத்துக்களில் சிக்கி மூன்று பேர் படுகாயம்

பளை,ஏப்.17

உழவு இயந்திரச் சில்லு ஏறியதில் குடும்பஸ்தர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை புதுவருட தினத்தன்று பளையில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் ஆகியவை நேருக்கு நேர் மோதிய போது மோட்டார் சைக்கிளோட்டி சில்லுக்குள் அகப்பட்டு காயமடைந்தார்.

பளை, தர்மக்கேணியைச் சேர்ந்த நல்லையா சுந்தரலிங்கம் (வயது 56) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை -

மட்டுவில் பகுதியில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட மற்றொரு விபத்து மட்டுவிலில் இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டிக்கு கால் முறிந்தது.

மட்டுவில் மத்தியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை உமா மகேஸ்வரன் (வயது 40) என்பவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மீசாலை மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் மீசா லையைச் சேர்ந்த எஸ்.பார்த்தீபன் (வயது-15) என்னும் மாணவன் காயமடைந்து சாவகச் சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த-207)

# தற்செயல் நிவாரணத்துக்கு காசோலைகள் வந்தன

நவாலி, ஏப்.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்தவர்களுக்கு அதற்கான கொடுப்பனவுக் காசோலைகள் சமூக சேவைகள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பெறுவோர் விவரம் வருமாறு:

மனோகரன் லீலா (நவாலி வீதி, ஆனைக்கோட்டை), து. நடராசா (சண்டிலிப்பாய் வடக்கு), கு.குகப்பிரியை (கல்வளை), க.அருள்ரூபனா வடிவேல் (காக்கைதீவு).

இவர்களை உடன் பிரதேச செயலகத்திற்கு வந்து காசோலையைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருத்தவராசா [illegible] ளார். (த-100)

# நவாலியில் குடிசன மதிப்பீடு

நவாலி, ஆனைக்கோட்டை கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் தற்போது குடிசன மதிப்பீட்டுப் பணிகள் மிகதுரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இப்பிரிவுகளின் கிராம சேவையாளர்கள் தி.நித்தியானந்தன், ஓ.நிசாந்தன் ஆகியோர் தமது உதவியாளர்களுடன் வீடு வீடாகச் சென்று காலை முதல் மாலைவரை குடியிருப்பாளர்களின் விவரங்களை பதிவு செய்து இலக்கமிட்டு சிறிய லேபில் ஒன் [illegible] (த-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

# 30 வருட தையல் சேவையில் தளராது பணியாற்றும் பெண்மணி

இன்றைய காலத்தில் குடும்பப் பொறுப்பைத் தலைமைத்துவமாகக் கொண்ட பெண்களும் அவர்களின் பொறுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

இத்தகைய பெண்கள் மற்றையவர்களைவிடத் தொழில் வாய்ப்புக்களை அதிகமாகத் தேட வேண் டிய கட்டாயம் உள்ளது.

முன்னைய காலத்தில் ''மனையாள்'' வீட்டில் இருக்க வேண்டியவள் என்பது மரபு ரீதியான ஒன்று. ஆனால் தற்போது தலைமைப் பொறுப்பைத் தாங்கும் இவர்கள் வீட்டுக்குரிய கடமைகளை முடித்துவிட்டு ஏனைய நேரங்களை ஒதுக்கித் தொழில்களை மேற்கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் தையல் தொழிலினை மேற்கொண்டுவரும் திருமதி எஸ்.சுசிலா தான் செய்யும் தொழில்பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் கூறுகின்றார். ''நான் கடந்த 30 வருடங்களாகத் தையல் கலையைத் தேர்ந்தெடுத்து தொழில்செய்து வருகின்றேன்.

ஆரம்பத்தில் இந்தத் தொழிலை நான் தேர்ந்தெடுப்பதற்கு மூலகாரணம் எனது தாயார் தான். நாங்கள் பரம்பரையாகவே தையல் தொழிலினை ஆர்வத்துடன் செய்துவருகின்றோம். நான் சிறியவளாக இருக்கும் போதே ஆர்வத்துடன் எனது தாயார் ஒவ்வொரு ஆடைகளையும் தைக்கும் போதும் துணிகளை வெட்டும் போதும் அவதானிப்புடன் அதனை உற்றி நோக்கி வந்தேன்.

எனது பாடசாலைக்காலம் முடிவடைந்ததும் எனது தாயாருடன் இணைந்து துணிகளை அளவுக்கேற்ப முறையில் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் பழகிக் கொண்டேன். எங்களுடை குடும்பம் நடுத்தரக் குடும்பம் என்பதால் இதன் மூலம் கிடைத்த வருமானம் எனது குடும்பத்தாருக்குப் பெரிதும் நன்மை தரக் கூடியதாக இருந்தது.

காலஞ்செல்லச் செல்ல எனது திறமைகளால் அதிகளவு வாடிக்கையாளர்கள் என்னிடம் தங்களது ஆடைகளைத் தைப்பதற்காகத் தேடி வந்தார்கள். இவர்களின் எண்ணிக்கை அதி கரிக்க அதிகரிக்க எமது வீட்டில் வைத்துத் தைப்பதற்கு இடவசதிகள் பற்றாக் குறையாக காணப்பட்டது. இதனால் கடந்த மூன்று வருடங்க ளுக்கு முன்னர் வீட்டுடன் சேர்த்து ஒரு சிறிய தையல் கடையை அமைத்துக் கொண்டேன்.

தற்போது என்னிடம் வாடிக்கையாளர்களாக இருப்பவர்களில் அதிகமானோர் ஆசிரியர்கள் மற்றும் அரச தொழில்களை மேற்கொள்ளும் பெண்களே.

பெண்கள் சார்ந்த சகல ஆடைகளையும் என்னால் தைக்க முடியும். ரெடிமெட் ஆடைகளை விட நாமாகத் தைக்கும் ஆடைகள் நீண்டகாலம் பாவனைக்கு உகந்ததாக இருக்கின்றன என வடிக்கையாளர்கள் பலர் என்னிடம் கூறுவார்கள். தற்போது என்னிடம் உதவியாளர்களாக இரண்டு பெண்கள் வேலை பார்க்கின்றார்கள்'' என்று பெருமையாகக் கூறியுள்ளார்.


-சோபியா

வீட்டில் இருந்தவாரே வீட்டுக்குரிய வேலைகளையும் செய்து அதிகளவு வருமானத்தினையும் சுய உழைப்பினால் பெறக் கூடிய இந்தத் தையற் கலை பெண்களுக்கு எப்பொழுதும் கைகொடுக்கும். தையல் கலை மூலம் ஏனையோரும் பயன் அடைவதை விடத் தையல் தெரிந்த பெண்கள் தமக்குத் தேவையான ஆடைகளையும் விருப்பத் திற்கு ஏற்றவாறு தைக்க முடியும்.

இந்தத் தையல் கலையானது முக்கியமாகக் குடும் பங்களின் தலைமைப் பொறுப்பைப் கொண்ட பெண்களின் வாழ்வுக்கு எப்பொழுதும் கைகொடுப்பதுடன் தமது குடும்பப் பொறுப்புக்களின் தேவைகளை நிறைவேற்ற இன்னொருவரை நம்பி வாழ வேண்டிய தேவையும் இல்லை.

தற்போது சாதரணமாக ஒரு சாறிபிளவுஸ் தைப்பதற்கு 200 ரூபாவுக்கு மேல் தையல் கூலி பெறப்படுகின்றது. ஆனால் இதனைத் தைப்பதற்கு சராசரி 45 நிமிடம் மட்டுமே தேவைப்படுகின்றது.

சாதரணமாக வெளியிடங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு எட்டும் மணித்தியாலங்கள் வேலை செய்தால் குறைந்தது 200 ரூபாதான் கிடைக்கின்றது. ஆனால் தையல்தொழில் செய்பவருக்கு குறைந்தது ஒரு நாளைக்கு 1000 ரூபா வருமானமாகக் கிடைக்கின்றது. எனவே பெண்கள் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. நாள்தோறும் இன்னொருவரின் ஏவலுக்கு வேலை செய்யும் பெண்கள், தான் சுயமாக செய்யக்கூடிய இலகுவான தையற் கலையைத் தேர்ந்தெடுப்பதற்கு நாட்டம் கொள்வது இல்லை.

இதனை உணர்ந்த பெண்கள் சிலர் தமது முயற்சிகளினாலும் திறமைகளினாலும் இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்து சிறந்த தொழில் முயற்சியாளர்களாக மாற்றம் பெற்று வருகின்றனர்.

இந்த வகையில் இனங்காணப்பட்ட பெண்தான் இவர். தனது வீட்டிற்கு அருகிலுள்ளவர்களை வாடிக்கையாளர்களையே இவர் அதிகமாக கொண்டிருப்பதுடன் அருகிலுள்ள பாடசாலை நிகழ்வுகளுக்கும் ஆடைகளைத் தைத்து வழங்குகிறார்.

தனது முயற்சியின் பயனால் தனக்குள்ள திறமைகளை வெளிக்காட்டித் தற்போது 2 பெண்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியுள்ளார். இன்னும் பல பெண்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கிப் பல வடிவங்களில் ஆடைகளை தைத்து சந்தைப்படுத்த வேண்டும் என்பது தான் இவருடைய நோக்கமாக உள்ளது.



## மனம்...

உன் குரலை முதலில்
கேட்ட போது
உன்னைப் பார்க்க வேண்டும்
என்ற ஆவல் இல்லை
என் உணர்வைப் புரிந்த போது
என் உறவாய் வந்தாய்
இன்று என் உயிராய்
உனை நினைக்கும் போது
என்னை விட்டுத் தூர விலகிடுவாயோ
எனத் தவிக்கிறேன்

## சிறந்த குடும்ப வாழ்க்கைக்கு அத்திபாரம் பெண்களின் செயற்பாடே



குடும்பங்களின் ஒளிமயமான சந்தோசமான வாழ்வுக்குப் பெண்கள் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் குத்துவிளக்குப் போன்றவர்கள். இதில் தாய், மகள், மனைவி இந்த மூன்று உறவுகளும் ஒரு பெண்ணின் தரத்தினையே உயர்த்திக் காட்டுகின்றது என்றால் அது முற்றிலும் உண்மை.

ஒரு பெண் தாய் என்ற அந்தஸ்தைப் பொறுப்பேற்கும்போது அவளது கடமைகள் அதிகமாகத்தான் இருக்கின்றன. அதிலும் முக்கியமாகப் பிள்ளைகளின் தேவைகளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு தாயிடமே இருக்கின்றன. அது மட்டுமன்றி இவர்களை மனைவி என்னும் ஸ்தானத்தில் பார்க்கும் போது கணவனின் கடமைகளையும் தேவைகளையும் நிறைவேற்றி அவருடன் இணைந்து குடும்பப் பொறுப்புக்களில் ஒரு பகுதியைத் தானும் பகிர்ந்து கொண்டு ஒரு சுமைதாங்கியாக வாழ்ந்து வருகின்றாள். இதற்குக் காரணம் திருமணத்தின் போது இவர்கள் இரு வரும் எடுத்துக் கொள்ளும் வாக்குறுதிகளே. அதாவது: ''இன்பத்திலும் துன்பத்திலும் உனக்குத் துணையாகவும், ஆறுதலாகவும் எப்போதும் நான் இருப்பேன்'' என்பதே. அதனால் பெண்கள் தமது வாழ்க்கையைத் தியாகமாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

இவ்வாறு பெண்கள் தாய் மனைவி மகள் என்ற நிலையில் இருக்கும் போது தமக்கான விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைத்து விட்டு குடும்பத்தில் உள்ளவர்களின் கடமைகளில் இருந்து சற்றும் விலகாமல் வாழ்ந்து வருகின்றனர். இதுவே பெண்களுக்குப் பெருமை சேர்க்கின்றது.

அது மட்டுமன்றி பெண்கள் வீட்டில் குலவிளக்கு, குத்துவிளக்கு என்பார்கள் நம் பெரியோர்கள். அதற்குக் காரணம் தன் மூலம் தன்னைச் சார்ந்திருப்போர் பயன் பெறக்கூடிய வகையில் கடமைகளை நிறைவேற்றிப் பொறுப்புணர்வுடன் செயற்படுவதே. எனவே பெண்களின் பெருமையினை உணரும் குடும்பத்தில் பெண்களின் எப்போதும் சந்தோசம் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பெண்களின் சிறப்பினையும் மதிப்பினையும் ஒவ்வொருவரும் உணரும் போது பெண்களுக்கான ஒடுக்கு முறைகள் குறைந்து குடும்பங்களின் மேன்மை உயரும். எனவே நாம் அனைவரும் இதனை பெண்களுக்கு அடங்குதல் என்று தவறாகப் புரிந்து கொள்ளாமல் அவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

-சஞ்சி, யாழ்ப்பாணம்.

## தேவையற்று அதிகம் பயம் கொள்பவர்கள் வாழ்க்கைப் பயணத்தைக் குறைக்கிறார்கள்

சந்தோசம், பொறாமை, துக்கம், பயம் இவை எல்லாம் மனிதனுக்கு ஏற்படும் உணர்வுகள் தான். இதிலும் பெண்கள் தமது வாழ்க்கையில் அதிகமாகக் கொண்டது பயத்தை மட்டுமே.

பொதுவாக சிறிய விடயத்துக்குக் கூட அர்த்தமே இல்லாமல் பயப்படும் பெண்கள் தமது வாழ்க்கையில் எவற்றுக்கெல்லாம் பயம் கொள் வார்கள் என நினைத்துப் பார்க்கவே முடிவில்லை. இவ்வாறு பயம் கொள் பவர்கள் தமது வாழ்க்கையின் அரைப் பகுதியை வீணடித்து விடுகின்றனர்.

அதுமட்டுமன்றி இவர்களின் பயம் சில சமயங்களில் உயிராபத்தையும் ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வாறு பயம் ஏற்படும் சமயத்தில் உடலில் பல பாகங்களுக்கு மூளை கட்டளைகளைப் பிறப்பிப்பதால் நுரையீரல் அதிக ஒட்சிசனைப் பெறுகிறது. இதனால் எமது உடலில் உள்ள இதயத்துக்கும், மூளைக்கும், உடலுக்கும் தேவையான இரத்தத்தைப் பங்கீடு செய்வதுடன் வேகமாகச் சிந்தித்துச் செயற்பட முடியாமல் ஒவ்வொருவரும் தவிப்பதையும் எம்மால் காணமுடிவதுடன் உணரவும் முடிகின்றது.

பயம் என்றால் என்ன? எதற்காகப் பயம் கொள்ள வேண்டும்? என்பதை நாம் சிந்தித்தே ஆக வேண்டும்.

பயம் என்பது ஒரு மாயைத் தோற்றம் என்று அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். இது எம்மை ஆள்கொள்ள வரும் மாயை என்பதை ஒவ்வொரு வரும் உணர்ந்து மனத்திடத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றுக்கெல்லாம் காரணம் எமது மனச் சிந்தனையே.

எனவே பயம் என்ற பெயரில் எமது வாழ்க்கைப் பாதையைத் திசை திருப்ப வரும் சக்திகளை எதிர்த்து பரந்த கடலில் ஓடும் கப்பலைத் திசைதிருப்புவது போல் எம்மைக் கட்டுப்படுத்தி எமது மனதில் உள்ள நல்ல விடயங்களை நோக்கி வாழ்க்கைப் பயணத்தை சீரான முறையில் செலுத்துவதே சிறப்பானது

-கஜப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் கல்வியும் விளையாட்டும் சிறக்க பெற்றோர்களின் ஒத்தாசை அவசியம்

## கற்சிலைமடு பாடசாலை அதிபர் கூறுகிறார்

முல்லைத்தீவு, ஏப்.17

இளஞ்சிறார்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்குவதற்குப் பெற்றோர்களின் ஒத்தாசை அவசியமானது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா.

பண்டாரவன்னி, சிவநாத், பரந்தாமன் ஆகிய மூன்று முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வு கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் நடைபெற்றபோதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகள் ஒட்டுசுட்டான் சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிகளின் தலைவர் கருணாகரனின் தலைமையில் நடைபெற்றன.

இதில் தொடர்ந்து உரையாற்றிய பாடசாலை அதிபர், இளஞ்சிறார்கள் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்குவதற்கு முன்பள்ளி ஆசிரியர்களும் பாடசாலை அசிரியர்களும் உதவத் தயாராகவிருப்பதாகக் கூறினார்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற சிறார்களுக்கு சேவாலங்கா நிறுவன இணைப்பாளர் செல்வி கமல சாந்தினி, இணைப்பாளர் நொனால்ட், வெளிக்கள உத்தியோகத்தர் விஜிதன், கற்சிலைமடு அ.த.க.பாடசாலை உபஅதிபர் திருமதி சிவனேசன், முன்பள்ளி ஆசிரியைகள், ஊடகவியலாளர் இ.தனபாலசிங்கம் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

பரிசில்கள் அனைத்தையும் சேவாலங்கா நிறுவனம் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க-500)

# உதவி மருத்துவர் இல்லாததால் ஒட்டுசுட்டானில் நோயாளர் அவதி

முல்லைத்தீவு, ஏப்.17

ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகத்துக்கு உதவி வைத்தியர் நியமிக்கப்படாததால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்த வைத்திய சாலையில் கடமையாற்றுகின்ற வைத்தியர் காலை 8 மணி முதல் ந.ப. 12 மணிவரையிலும் பின்னர் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையிலும் 9 மணித்தியாலங்கள் சேவை புரிகிறார். இவற்றுக்கு மேலாக வாரத்தில் இரு நாள்கள் மட்டும் இரவில் தங்குகிறார். ஏனைய நாள்களிலும் விடுமுறை நாள்களிலும் வைத்தியர் இருப்பதில்லை. இதனால் இரவு நேரங்களில் அவசர நோயாளர்கள் சிகிச்சை பெற முடிவதில்லை.

இதற்கு இங்கிருந்து வேறு இடத்துக்கு 12 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். இந்த நிலையில் இது தொடர்பாக வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது தான் 9 மணித்தியாலம் சேவை புரிவதாகவும் இதற்கு மேலாக இரண்டு நாள்கள் இரவு தங்குவதாகவும் கூறினார். அத்துடன் தமக்கு இன்னொரு வைத்தியர் உதவியாக இருந்தால் இரவு வேளைகளில் அவசர சிகிச்சைகளையும் மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

அதிகமான மக்கள் சிகிச்சை பெறும் இந்த வைத்தியசாலைக்கு உதவி மருத்துவர் ஒருவரை நியமிக்க ஆவன செய்து உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-500)

# அவல நிலையில் விளையாட்டு மைதானம்

மன்னார், ஏப்.17

மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் மன்னார் நகர சபையின் கண்காணிப்பில் அமைக்கப்பட்டுள்ள பொது விளையாட்டு மைதானம் சீரற்ற முறையில் காணப்படுவதால் காலையில் உடற்பயிற்சி எடுக்க முடியாமலும் மாலையில் விளையாட முடியாமலும் உள்ளதாக வீரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை பெய்தால் மைதானம் முழுவதும் நீர்தேங்கி நிற்கின்றது. மலசலகூடம் உரியமுறையில் பராமரிக்கப்படுவதில்லை. குடிதண்ணீர்ப் பிரச்சினையும் உள்ளது. எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மைதானத்தினை புனரமைத்துத் தருமாறு விளையாட்டு வீரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## புதிய எழுச்சி...



கம்பீரமான தோற்றம்: வவுனியா செட்டிகுளம் பூசனிப்பிட்டிக் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட லூர்துமாதா ஆலயம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. (6)

# நிரந்தரக் காணியில்லாத கண்டாவளை மக்கள் பாதிப்பில்

கிளிநொச்சி, ஏப்.17

கிளிநொச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள ஊரியான் கிராமத்தில் 45 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரமாகக் காணி இல்லாததால் வாழ்வாதார உதவிகளைப் பெறமுடியாத நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்துள்ள இவர்கள் தமக்கென நிரந்தரமாகக் காணி இல்லாததால் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் பல உதவித் திட்டங்களால் பயனடைய முடியாத நிலையில் உள்ளனர்.

குறிப்பாக மீள்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் வீட்டுத் திட்டங்களை இவர்கள் பெறமுடியாது பெரும் அவலங்களுக்கு மத்தியில் தற்காலிக கொட்டில்களில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு கண்டாவளையில் அல்லது வேறொரு இடத்திலாவது காணியை வழங்கி இவர்களின் அவலத்தைப் போக்க வேண்டுமெனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-6)

# மன்னார் பிரதான வீதிகளில் இராணுவக் காவலரண்கள் அகற்றல்

மன்னார் மாவட்டத்தின் சில முக்கிய வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தின் காவலரண்கள் சில, அகற்றப்பட்டு வருவதோடு அவற்றைத் தற்போது கிராமங்களுக்குள் அமைக்கும் நடவடிக்கையினை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் வலயக் கல்வி திணைக்களத்துக்குச் சற்று தொலைவில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தின் இரண்டு காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளன. யுத்தம் இடம்பெற்று வந்த காலப்பகுதியில் அமைக்கப்பட்ட மேற்படி காவலரண்கள் யுத்தம் முடிந்த நிலையிலும் தொடர்ந்தும் அகற்றப்படாமல் அங்கு இருந்தன.

பின் சிறுசிறு சோதனைகள் அவ்விடத்தில் இடம்பெற்று வந்தபோதும் காலம் செல்லச் செல்ல சோதனைக் கெடுபிடிகள் முற்றாகக் குறைவடைந்தன. மன்னார் அருகில் உள்ள மதுபான சாலைக்கு மது அருந்தவரும் மதுப்பிரியர்களின் அட்டகாசத்தினை இங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் கட்டுப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் இராணுவம் பெரு வீதிகளில் உள்ள காவலரண்களை அகற்றிக் கிராமங்களுக்குள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைவாக மன்னார் பள்ளிமுனைக் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர் காவலரணை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் ஊர் மக்களின் எதிர்ப்பையடுத்து காவலரண் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-601)

# இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய பொங்கல் இன்று

கிளிநொச்சி, ஏப்.17

கிளிநொச்சி, இரணைமடு அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவிலின் ஆண்டுப் பொங்கற் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்புடன் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையின் தவமுதல்வர் யோகர் சுவாமிகள் அம்பாளுடைய தீர்த்தமான இரணைமடுக்குள நீரைப் பயன்படுத்தும் மக்களுக்கு ''அம்பாளுக்கு ஆயிரம் பானை வைத்துப் பொங்குங்கள்'' என்று அருள்வாக்கில் தெரிவித்தார். இதைத் தேவவாக்காக எடுத்த கிளிநொச்சி வாழ் மக்கள் ஆண்டு தோறும் சித்திரைப் பூரணையின் போது மாலை வேளையில் அம்பாளுக்குப் பொங்கி சுகங்கண்டனர்.

1961 ஆம் ஆண்டு அம்பாளின் திருக்குட முழுக்குக்குப் பின் தொடர்ந்து பொங்கலைச் சிறப்பாகச் செய்துவருகின்றனர். பங்குனி மாதத்தில் ஊர் தோறும் உலாப்போகும்போது அடியார்களால் பொங்கல் மக்களுக்கு நினைவூட்டப்படுகின்றது. இதனால் ஆண்டுக்கு ஆண்டு பொங்கற் பானைகள் கூடின. இது ஆதியில் ஒரு மரத்தடியில் நடந்து வந்த பொங்கலின் தொடர்பு என்பதை மக்கள் அறிவர்.

இரணைமடுக்கு[illegible] ஊராகப் பாய்வதா[illegible] வளமும் பெறும் மக்கள் தேவைகளுக்காகப் பயிர்வளம் செழிக்க வேண்டும், பால்வளம் பெருக வேண்டும் போன்ற பல்வேறு தேவைகளுக்காக நேர்த்திகளை வைத்துப் பொங்கலை நிறைவு செய்கின்றனர். இதே போன்று கும்பதீர்த்தம் எடுக்கும் பெண்கள் எண்ணிய திருமணம் நடக்க வேண்டும், மகப்பேறு சுகமாக நிகழவேண்டும், தீராத நோய் தீரவேண்டும், வறுமை ஒழிய வேண்டும், பிள்ளைகளின் கல்வி மேம்பாடு அடைய வேண்டும் என்று பல்வேறு நேர்த்திகளை வைத்துக் கும்பதீர்த்தம் எடுக்கின்றனர். இவர்களின் தொகை [illegible] வருகின்றது. பொங்கல் பொங்குவோர் தங்கள் கழனியில் விளையும் நெல்லை தங்கள் கைகளாலே குற்றிச் சுத்தம் செய்த அரிசியை பலர் வெண்பொங்கலாகவே பொங்குவார்கள். சிலர் சர்க்கரைப் பொங்கல் பொங்குவர். எல்லாப் பொங்கலும் மணம் பரப்பி மகிழ்வூட்டும். மக்களும் மன நிறைவு பெறுவர்.

ஊரடங்குச்சட்ட நடைமுறை, இடப்பெயர்வுகள் போன்றவற்றால் மூன்று குடும்பங்கள் வந்துப்பானை பொங்குகின்ற நிலைமை உருவானது. பொங்கல்களுக்கும் கும்பதீர்[illegible]ம் எடுப்பதற்கும் இரணைம[illegible]க் குளநீரே பயன்படுகின்றது.

இந்த நிகழ்வு பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களுடனேயே நடைபெற்று வருகின்றது. இம்முறை மூத்த சிவாச்சாரியார்களின் அறிவுறுத்தலின்படியும் ஆய்வாளர்களின் ஆலோசனைப்படியும் பொங்கல் நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இராணுவத் தளபதியின் உத்தரவு, உதவிகள் கிடைக்கப்பெற்றுப் பொங்கல் நடைபெறவுள்ளது.

வழமைபோல் மாவட்டத்தின் பல இடங்களில் இருந்தும் பிறமாவட்டங்களில் இருந்தும் பேருந்து சேவை நடைபெறவுள்ளது. அடியார்களின் நலன் கருதி அன்னதானம் வழங்கப்படவுள்ளது. காவடிகள் எடுக்க நேர்த்தி உள்ளவர்கள் காவடி எடுத்துவர அனுமதி பெறப்பட்டுள்ளது. தேர் ஓட்டத்துடன் திருவிழா நடைபெறும். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை நிலையத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# பௌர்ணமி தின பூசைகள்

வடமராட்சி, ஏப்.17

பருத்தித்துறை கற்கோவளம் ஸ்ரீ கும்பிமுத்துமாரி அம்மன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை சித்திராபௌர்ணமி தினத்தை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

அன்றைய தினம் இரவு நிகழ்வாக வே. நந்தகோபாலின் நெறியாள்கையில் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நடைபெறவுள்ளது. (ம-236)

## வீடு விற்பனைக்கு

17/A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளியில் வீட்டுடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777369065, 2345603

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு

தற்போது வன்னி மாவட்டத்தில் இருந்து வலிகாமம் கல்வி வலயத்துக்கு மாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் கேட்டுள்ளார். (த-319)

## துணுக்காய் தொழில் முயற்சி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவு தொழில் முயற்சியாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப்பொதுச் சபைக்கான வருடாந்தக் கூட்டம் நாளை 18.04.2011 திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் சங்கத்தின் தலைவர் திரு.க.கோவிந்தராசா அவர்களின் தலைமையில் துணுக்காய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், தொழிற்துறைத் திணைக்கழக மாவட்ட அலுவலகர், துணுக்காய் பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பங்குபற்றி துணுக்காய் பிரதேச கைத்தொழில், சிறுகைத்தொழில் சம்பந்தமான உதவி பற்றி ஆராயவுள்ளதால் இச் சங்கத்தின் சகல பொதுச் சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
க.கோவிந்தராசா (தலைவர்).

(20,25,42) (சி/577686)



## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### சிரித்துவாழ்க செல்வமே

### ஸ்ரீஜனனி ஸ்ரீபிருந்திரன்

பெற்றோர் எம் மனமினிக்கும் ஜனனிக்
குட்டிமகள் இன்றுனக்கு இரண்டு வயதென்று
வாழ்த்திடுவோம். உற்றமகள் அருமைமிகு
அன்புச் செல்வமுனக்கு அற்புதமாயின்று
பிறந்தநாள் கொண்டாட்டம். குன்றாத அழகுடன்
நீ குணம், கல்வி, செல்வமெல்லாம் நன்றாகப்
பெற்றிடுவாய் நல்லுறவும் நண்பர்களும்
ஒன்றாகி இந்நாளில் ஒளிதரவே வாழ்த்துகின்றோம்
எப்போதும் நிறைவுடனே எழில் பெற்றுறவே
வாழ்த்துகின்றோம்.

HAPPY BIRTHDAY

2nd Birthday

Birthday at
தியாகி அறக் கொடை நிதியமண்டபம்,
இல.527, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெற்றோர்.

## இறுவட்டு வெளியீடு

திருமறைக் கலாமன்றததின் 'தவக்கால இசைத் தருக்கள்' என்னும் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு கலைத்தூது மண்டபத்தில் இசைத்தென்றல் ம.யேசுதாசன் தலைமையில் நடைபெற்றது. மன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் மங்கல விளக்கேற்றினார். முதற்பிரதியை யாழ். பல்கலைக் கழகப் பேராசியர் அருட்திரு ஞா.பிலேந்திரன் அடிகளிடமிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ. சிறில் பெற்றுக் கொண்டார். (ஜ-135)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் பிரபல்யமான ஸ்தாபனத்துக்கு,

* போதிகள் பக்கிங் செய்பவர்கள் (ஆண்,பெண்)
* விற்பனைப் பிரதி நிதிகள் (ஆண்)
* Van - Delivery Boys
* காசு வசூலிப்பாளர்கள் (ஆண்)
* Bill போடுபவர்கள் (ஆண்,பெண்) தேவை.

எதிர்பார்ப்பு

* விண்ணப்பதாரி தங்கள் கைப்பட எழுதிய தங்களைப் பற்றிய முழுவிவரம் அடங்கிய கோவையைக் கொண்டு வர வேண்டும்.
* கிராம சேவகரின் சிபார்சுக் கடிதம் தேவை. முக்கியமாக "காசு வசூலிப்பாளர்கள், கிராம சேவகரின் கடிதத்துடன் யாழ். நகரில் உள்ள பிரபல வர்த்தகர்கள் இருவரிடம் இருந்து கட்டாயமாகச் சிபார்சுக் கடிதம் கொண்டு வர வேண்டும்.
* முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

*விண்ணப்பதாரி பி.ப. ஒரு மணியிலிருந்து 3 மணிக்குள் நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.*

தொடர்பு: சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2567

(20,25,42)

## அறிவித்தல்

1) 33 (13/1), பலாலி வீதியில் அமைந்துள்ள நிலப் பரப்பு 03 குளி 06 இல் அடங்கிய காணியும் வீட்டிலும் முதுசப் பங்கு பங்குதாரர்களாகிய எமக்குரியது. இதனை முழுமையாகக் கொள்வனவு செய்வதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நாம் பொறுப்பாளியாக மாட்டோம்.

02) 42, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள நிலப் பரப்பு 01 குளி 09 இல் பங்குதாரர்களாகிய எமக்கும் பங்கு உள்ளது. இதனை முழுமையாகக் கொள்வனவு செய்வதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் விளைவுகளுக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

3) 192, தேவிபுரம் குடியேற்றத்திட்டம் 10 ஏக்கர். இவற் றிலும் எமக்குரிய பங்குகள் உள்ளடங்கியுள்ளன. இவற்றை கொள்வனவு செய்யவோ வேறு வகையில் மாற்றீடு செய்வதனாலோ ஏற்படும் பாதிப்புக்களுக்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

இல.33,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பொ.பரமானந்தம்.

(3111) (20,25,42)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 21.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

| | |
|---|---|
| ★ சட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| ★ முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |

கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

## பிரத்தியேக வகுப்பு

கணிதம்

தரம் - 6 தொடக்கம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு தனியாகவோ, குழுவாகவோ வீடு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0775024633

## வீசா சேவை

UK, USA, POLAND, INDIA போன்ற நாடுகளுக்கு Student Visa வில் செல்வதற்கான புதிய அனுமதிகள் மற்றும் எல்லா நாடுகளுக்குமான Visa விற்கான ஆலோசனை, Financial Sponsor Ship என்பன.

தொடர்பு:
021 4910959, 0779218444

## STUDY & WORK IN UK

யாழ். மாணவர்களின் நம்பிக்கையை வென்ற நாம் உங்களின் O/L தகைமையுடன் UK யில் வேலைவாய்ப்புடன் கூடிய கல்வியினைப் பெற்றுத் தருகின்றோம்.

* IELTSஅவசியமில்லைO/L போதுமானது.
* 100% வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம்
* 'A' Grade கல்லூரி அனுமதிகள்
* மொத்தச் செலவு 8 லட்சம் மட்டுமே (College fee, Sponcer, P.fee)
* கல்லூரிக் கட்டணத்தை பகுதி பகுதியாகச் செலுத்தும் வசதி
* குடும்பமாகச் செல்வதற்குரிய ஏற்பாடும் மிகக் குறைந்த செலவில் செய்து தரப்படும் ***(9 லட்சம் மட்டுமே)***

AIR TICKET
முற்றிலும் இலவசம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு விசேட சலுகைகள் மிகக் குறைந்த கட்டணங்கள்

"முயற்சி திருவினையாக்கும்"

தொடர்புகளுக்கு:
யாழ். மாணவர்களின் நம்பிக்கைத் தோழன்
Sana
0776277767,0750403340

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
உள்நாட்டில், வெளிநாட்டில் உயர்கல்வி பெற, தொழில் வாய்ப்புப் பெற உகந்த கல்வி.

**By: Mr.B.Ruban** (A/L Eng.Teacher & BBA)
More Details: 0779785749
JTI/ 45, Clock Tower Road, Jaffna.

## 3 ஆவது பிரிவு ஆரம்பம்

### கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி

*சர்வதேச தரத்திலான டிப்ளோமா பாடத்திட்டம்*
படித்து விட்டு சுயதொழில் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்காக

கையடக்கத் தொலைபேசி திருத்துவதில் நீங்களும் ஒரு வல்லுநராகலாம்!

*உங்கள் எதிர்காலத்துக்கு*
மாதம் 50,000 முதல் 100,000 இற்கும் மேல் வருமானம் பெறும்
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

★ ஆரம்பம் முதல் சரளமாகக் கற்பித்தல்
★ கையடக்கத் தொலைபேசி 1000 இற்கும் மேற்பட்ட நுணுக்கங்கள்
★ தனிப்பட்ட கண்காணிப்பு

வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும்

முதல் பதிவு செய்யும் 10மாணவர்களுக்கு விசேட விலைக்கட்டணம் ~~8000~~ 6500 ஏப்ரல் 30 வரை இச்சலுகை.

ஏப்ரல் 22ம் திகதி காலை 9மணி முதல் 22,23,24,25 ஆகிய நாள்களில்

பதிவுகளுக்கு முந்துங்கள்
ELITE Computer and Business College
[illegible]
0750445070, 0774589889

ஸ்ரீ ராம ஜெயம்

## கொழும்பு-தெஹிவளை
## அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்

### 10ஆவது வருடாபிஷேக இலட்சார்ச்சனை விழா
### விஞ்ஞாபனம்- 2011

18.04.2011 திங்கட்கிழமை தொடக்கம்
28.04.2011 வியாழக்கிழமை வரை.



நிகழும் கர வருஷம் சித்திரை மாதம் 5 ஆம் நாள் 18.04.2011 திங்கட்கிழமை சித்திரா பௌர்ணமியை அடுத்துவரும் பிரதமை திதி அன்று 10 ஆம் வருடத்துக்கான இலட்சார்ச்சனை பூஜைகள் ஆரம்பித்து, தொடர்ந்து 10 தினங்கள் காலையும், மாலையும் விசேட சமயாச்சாரியர்களின் மந்திர உச்சாடனத்துடனும் விசேட தூபதீப ஆராதனைகள் நடைபெற்று 28.04.2011 வியாழக்கிழமை சதய நட்சத்திரமும் ஏகாதசி திதியும் கூடிவரும் சுபதினத்தில் 108 வலம்புரிச் சங்குகளினால் விசேட கலச சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. இதன் நிமித்தம் இலட்சார்ச்சனை தினங்களில் விஷேட பூஜைகளுடன் இரவு 7.00 மணிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் உள்வீதி வலம் வருவார். இலட்சார்ச்சனை, பூஜைகள் முறபகல் 10.00 மணிக்கும், மாலை நேர பூஜைகள் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.

*இலட்சார்ச்சனையில் பங்குகொள்ள விரும்பும் பக்தர்கள் முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் தங்கள் பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.*

(46,21,23)

பால், தயிர், இளநீர், பழங்கள், நெய், துளசி இலை, மற்றும் தாமரைப்பூக்கள் போன்றவை பதினொருநாள் பூஜைகளுக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்
3/11,ஸ்ரீ போதிருக்காராம வீதி,
களுபோவில, தெஹிவளை.
தொ.பே.இல:- 2726444, 2721013.

ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள்
Web- www.anjaneyar.com.
E-mail: anjatemp@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த தர்மமும் தர்ம யுத்தமும்





இலக்கியக் காட்சி – 81

மாயமானின் பின்னே சென்ற இராமனும் தம்பியும் திரும்பி வந்து பஞ்சவடியில் சீதையைக் காணாது வருந்தித் தேடிச்செல்கின்றனர். சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனோடு போராடிக் குற்றுயிராகக் கிடந்த சடாயு என்ற கழுகரசன், இலங்கேசனான இராவணன், சீதையைக் கொண்டு தெற்கு நோக்கிச் சென்றதான கதையைக் கூறி உயிர் விடுகிறது.

தொடர்ந்து இராம, லக்குவர் சீதையைத் தேடச் சென்றபொழுது ருசியசிருங்க மலையில் அனுமானதும் சுக்கிரீவனதும் நட்புக் கிடைக்கிறது.

சுக்கிரீவனுடைய மனைவியையும் அவனது இராச்சியத்தையும் அபகரித்துக் கொண்டு அவனைக் கொல்லப் போராடிய அவனது அண்ணன் வாலியிடமிருந்து தன்னைக் காப்பாற்ற மந்திரியான அனுமனோடு ஓடி வந்து அம்மலையில் ஒளித்திருந்தான் சுக்கிரீவன்.

*''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதாம்*
*நட்பாங் கிழமை தரும்''*

என்ற வள்ளுவர் வாய்மை மொழிக்கிணங்க, சீதையைப் பிரிந்து நின்ற இராமனுக்கும், மனைவியைப் பிரிந்த சுக்கிரீவனுக்கும் ஒத்த உணர்வினால் நட்பு ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கு உறுதி எடுத்துக் கொள்கின்றனர்.

**சரணடைதலும் அடையாளமும்**

இராமவதாரம் எடுத்த நாராயணனுக்குத் தான் யார் என்பது தெரியும். ஆனால் இராமனுக்குத் தான் நாராயணன்தான் என்பது தெரியாது. தன்னை ஒரு சத்திரியனாகவே எண்ணி எல்லாச் செயல்களையும் செய்கிறான். அந்தவகையில்தான், வனவாச காலத்தில் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் தொல்லை கொடுத்த அரக்கரை அழித்தான். இப்பொழுது தன்னைச் சரணடைந்த சுக்கிரீவனுக்கு உதவி செய்கிறான். வாலி இருக்கும் இடத்துக்குப் போய் இராமன் தூரத்தில் நின்று கொண்டு சுக்கிரீவனை வாலியோடு போர் செய்யும் படி ஏவுகின்றான்.

ஒத்த பலசாலிகளான வாலியும் சுக்கிரீவனும் மலையொடு மலை மோதுவதுபோலப் போர் புரிந்து, சுக்கிரீவனை வாலி கொல்லக்கூடிய நிலைவந்தபொழுது சுக்கிரீவன் தப்பி ஓடிப்போய் இராமனிடம் சரண் புகுந்து விடுகிறான்.

அப்பொழுது இராமன் சொல்கிறான் ''அண்ணன் தம்பி நீவிர் இருவரும் ஒரே தோற்றம் உடையவர்கள். அதனால் நான் உம்மை அடையாளங்காண இயலவில்லை. எனது அம்பு உம்மீது தைத்தால் சரணடைந்தவனைக் கொன்ற பழி எனக்கு வந்து சேருமே. அதனால் சரணடைந்தமைக்கு அடையாளமாக இக்காட்டியிலுள்ள கொடிப்பூவைக் கட்டிக்கொண்டு செல்லுக'' எனக் கூறி மறுபடியும் போர் செய்ய அனுப்புகிறான் இராமன்.

*''மலைந்தபோது இணைந்து இரவி சேய், ஐயன்மாடு அணுகி*
*உலைந்த சிந்தையோடு உணங்கினன் வணங்கிட உள்ளம்*
*குலைந்திடேல், உமை வேற்றுமை தெரிந்திலம்; கொடிப்பூ*
*மிலைந்து செல்க; என விடுத்தனன்; எதிர்த்தனன் மீட்டும்''*

போர் முகத்தில் சரணடைந்தவர்களைக் காப்பாற்ற வேண்டும். அது யுத்ததர்மம். அதே நேரம் சரணடைந்தவர்கள் தம்மைச் சரண்டைந்தவர்களாகக் காட்டிக் கொள்வது மிகவும் அவசியம். அதனால் இந்தக் காலத்தில் வெள்ளைக்கொடி தாங்கிச் செல்வது போல அந்தக்காலத்தில் கொடிப்பூவைக் கட்டிக் கொண்டு சுக்கிரீவன் மீண்டும் போருக்குப் போகிறான்.

இனி, தனது தம்பி என்றும் பாராது அவனது மனைவியை அபகரித்ததுமன்றி அவனுக்குரிய இராச்சியத்தையும் பறித்த வாலியைத் தண்டித்துச் சுக்கிரீவனுக்கு நீதி வழங்க வேண்டும் என்பதால் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு தர்ம யுத்தம் செய்கிறான் இராமன். நேரே நின்று வாலியை எதிர்த்தால் அவன் ஆற்றாதபோது சரணடைந்துவிட்டால் வாலி தண்டனையிலிருந்து தப்பிவிடலாம் என்பதால் மறைந்து நின்று அம்பை விடுகிறான் இராமன்.

பாரதக் கதையிலே நடைபெற்ற யுத்தம் தீயவர்களை அழிப்பதற்காகவே செய்த ''தர்மயுத்தம்'' என்பதை நாம் உணர முடிகிறது. துரியோதனன் முதலியோர் பாண்டவர்களுக்குச் செய்த தீமைகள் கணக்கிலடங்கா. கொடைக்குக் கர்ணன் என்று பெயர்பெற்ற குந்தியின் மைந்தன் தீமையாளருக்குத் துணைபோனதால், அவன் பெற்ற வலிமைகளையெல்லாம் மீளப்பெற்று, அவன் செய்த புண்ணியத்தையும் வாங்கிவிட்டு, அவனைக் கொன்றார்கள் ''தர்மயுத்தம்'' என்பதனால். மற்றும் அனைத்து ஆயுதங்களையும் இழந்து அரச முடியையும் இழந்து நின்ற இராவணனை, ''இன்று போய், போர்க்கு நாளை வா'' என விட்டானே அதுவும் யுத்ததர்மம்'' ஆகிறது.

*''ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த*
*பூளைஆயின கண்டனை; 'இன்று போய்ப் போர்க்கு*
*நாளை வா' என நல்கினன்-நாகு இளங் கமுகின்*
*வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''*

அப்பொழுது இராவணன், கைலை மலையைப் பெயர்த்த உடல் வலிமையையும் யானையோடு போர் செய்த வீரத்தையும் தவ வலிமையையும் போர்க்களத்திலே காட்ட முடியாதவனாகி நாணத்தினால் நிலத்தைக் காலால் கீறிக்குனிந்து நின்று இராமன் மேலும் சொல்லுவதைக் கேட்கின்றான்.

அந்தத் தருணத்திலும் ''சீதையைச் சிறை நீக்கி விட்டு, உன் குலத்தவரையும் தேவர்களையும் காத்து நின் தம்பியுடன் பகை நீக்கி நல்ல முறையில் வாழ்வாய் என்றால் இதுவரை நடந்தவற்றையெல்லாம் பொறுத்து உன்னை உயிர்பிழைக்க விட்டுவிடுகிறேன். அல்லையாயின் ''நில் ஐயா'' நேர் நின்று யுத்தஞ்செய்து இறந்துபோ; இனிமேல் பிழைக்க மாட்டாய்'' என்கிறான் இராமன்.

ஆனாலும் மண்டோதரி பின்னர் வருந்துவது போல மனச்சிறையில் இருக்கும் சீதையை விடுவிக்க அவனால் முடியவில்லை; தனது அரண்மனைக்குச் சென்று, ஆயுதங்களோடு மறுபடியும் போர்புரிய ஆயத்தமாக வருகிறான்.

*''வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்*
*எள்ளிருக்கும் இடம் இன்றி உயிர் இருக்கும் இடம் நாடி இழைத்தவாறோ?*
*கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை மனச் சிறையில் கரந்த காதல்*
*உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி?''*

நா.நல்லதம்பி, மட்டுவில்

விடாக்கண்டனாகத் தன் பிழையை உணர்ந்து திருந்த விரும்பாமல் ஆணவ முனைப்பினால் போர் புரியவரும் இராவணனைத் தர்மத்தின் வழி நின்று தர்மயுத்தம் செய்து கொலை செய்கின்றான் இராமன்.

ஆக, இராம காப்பியத்திலே நிராயுத பாணியாக நிற்பவனோடும் சரணம் என்று தன்னை அடையாளப்படுத்தி நிற்பவனோடும் போர் முகத்தில் யுத்த தர்மம் பின்பற்றப்படுவதையும், தனது தீய செயலை விட மறுத்து போருக்கு வருபவனை தர்ம யுத்தம் செய்து கொன்று தர்மம் நிலைநாட்டப்படுவதனையும் காண் போமாக.

# அறிந்தும் அறியாமலும்

வீட்டின் வாசலின் வெளியே மோட்டார் சைக்கிளின் சத்தத்தைக் கேட்ட பிரிந்தன் அவசர அவசரமாக வெளியே வந்தான். அங்கு விமலும் மற்றும் ஐந்து நண்பர்களையும் நிற்கக் கண்ட பிரிந்தன், தனது மோட்டார் சைக்கிளையும் கிளப்பிக் கொண்டு தமது வழமையான இடத்துக்கு அவர்களோடு சென்றான்.

அந்த வீதியால் செல்லும் பெண்களுடன்பகிடி, சேட்டை விடுவதும் கோஸ்டி மோதலில் ஈடுபடுதலும் அவர்களின் பொழுதுபோக்காக இருந்து வந்தது. இந்தக் குழுவை இயக்கும் தலைவனாக இருந்தான் பிரிந்தன்.

அன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் பெண்கள் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தனர். அந்தப் பெண்களுடன் தமது திருவிளையாடலை இவர்கள் காட்டினார்கள். அதில் ஒரு பெண் தனது காலில் உள்ள செருப்பைக் கழற்றிப் பிரிந்தனின் முகத்தில் அறைந்துவிட்டு ''உன்னுடன் அக்கா, தங்கை கூடப் பிறக்கவில்லையா? நீயும் ஒரு மனுசனா'' என்று கேட்டாள் . அது பிரிந்தனுக்குச் செவிடன் காதில் சங்கு ஊதியது போல இருந்தது.

ஏனென்றால், அவன் வீட்டில் ஒருவன். அவன் ஒருவன் இருக்கின்றான் என்ற நினைப்பே இல்லை வீட்டினருக்கு.

பிரிந்தனின் அப்பா ஓர் அரச அதிகாரியாகக் கடமையாற்றுகிறார். அவர் தனது வேலைக்குக் காலை சென்றால், வேலையை முடித்துவிட்டு மாலை வீட்டுக்கு வருவார். வந்ததும் அவர் தனது பொழுதுபோக்கைத் தொலைக்காட்சித் தொடரில் போக்குவார். அவனது அம்மா தனது தங்கையின் முதல் பிரசவத்துக்கு என்று லண்டன் சென்று ஒரு வருடம் ஆகியும் வந்தபாடில்லை. மற் றும் பாட்டி, தாத்தா, அத்தை, மாமா, குழந்தைகள் இருந்தும் அவர்கள் தினசரி தமது பொழுதுபோக்கைத் தொலைக்காட்சி நாடகத் தொடரில் செலவழித்தனர். இதனால் பிரிந்தனின் நிலைமை கவனிப்பாரற்றுக் கிடந்தது.

அவன் காலை 8 மணியளவில் கிளம்பித் தான் வேலை செய்யும் கம்பனிக்குச் செல்வான். பின் மாலை 5 மணிக்குப் பிறகு நண்பர்களுடன் சேர்ந்து வீதியால் செல்வோரோடு சண்டைகள் புரிவதும் மற்றும் மற்றவர்களின் சொற்படி ஆள்களைக் கடத்துதல் போன்ற செயல்களோடும் அவனது பொழுது போய்விடும். அவனது வீட்டினர் எல்லோரும் உறவுக்காரக் குடும்பத்தினரின் திருமண வீட்டுக்குச் சென்றிருந்தனர். அரைநாள் லீவு போட்டு விட்டு வீட்டுக்கு வந்த பிரிந்தன், வெளியே செல்ல மனமில்லாமல் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு வெளியே வந்த பிரிந்தன், ஒரு குடும்பம் வெளியே நிற்பதைக் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் என்ன என்று கேட்க முன்னரே, அந்தக் குடும்பத் தலைவரே தங்களை அறிமுகப்படுத்தத் தொடங்கினார். ''நாங்கள் செங்கதிர் என்னும் ஊரில் இருந்து இந்த ஊருக்குக் குடியிருக்க வந்துள்ளோம். நேற்றுத்தான் உங்களுடைய வீட்டுக்கு எதிர் வீட்டில் தான் நாங்கள் குடியிருக்க வந்துள்ளோம். உங்கள் குடும்பத்தினருடன் உரையாட வந்துள்ளோம். இவள் என்னுடைய மனைவி பாக்கியம். இவள் என்னுடைய கடைசி மகள் ஆர்த்தி. மகன் ஆகாஸ் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைபார்க்கின்றார். மற்றைய மகள் அபர்ணா இங்கு தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கின்றாள்'' என்று தனது சிறிய குடும்பத்தினரை அறிமுகப்படுத்தினார் அந்த எதிர்வீட்டுக்காரர்.

அந்தக் குடும்பத்தினர் வந்து ஆறுமாதங்கள் ஆகியும் அபர்ணாவைச் சந்திக்கும் வாய்ப்பு பிரிந்தனுக்கு மிகக் குறைவாகவே இருந்தது. காரணம் அவள் பிரிந்தன் காலையில் வேலைக்குப் போவதற்கு முன் வேலைக்குச் சென்று விடுவாள். பின்னர் அவள் வீடு வரும்போது அவன் நண்பர்களுடன் ஊர் சுற்றப் போய்விடுவான். இதனால் அபர்ணாவைப் பிரிந்தனுக்கு அவ்வளவு தெரியாது.

ந.துளசி,
கைதடி கிழக்கு, கைதடி, கல்விநகர்.

பங்குனித் திங்கள் அன்று அருகில் உள்ள அம்மன் கோயிலுக்கு இளம்பெண்கள் எல்லோரும் சென்று வருவதைக் கண்ட பிரிந்தன் குழுவினர், அங்கு சென்று தமது பகிடிவதைகளைக் காட்டிக் கொண்டு இருந்த சமயம் அபர்ணாவும் அவளது தங்கை ஆர்த்தியும் கோயிலுக்கு வருவதைக் கண்ட விமல், ''மச்சான் அங்க பாரடா நம்ம ஊருக்குப் புதுசா ஒருத்தி வாறாளடா'' என்று கத்தினான்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
17 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

## முருக தத்துவம்

முருகா....
நீயொரு புதுமை
உன்னுள்
உறைந்திருக்கும்
தத்துவங்கள்
எல்லோர்க்கும் புரியாது
அங்கங்களும்....
ஆயுதங்களும்...
ஆறு முகமதுவும்
அருகிருக்கும் வள்ளி
தெய்வானைக் காட்சியும்
ஆழம்மிகு அர்த்தம்
பொதிந்தவை

வெற்றுக் கண்களுக்கு
விளங்கா தத்துவம் நீ

வேலின்... வாளின்
விளக்கம் அறியாதோர்
ஆண்டவனுக்கேன்
ஆயுதம் என்பார்

வலமிருக்கும் இடமிருக்கும்
வள்ளி தெய்வானையின்
உள்ளிருக்கும் உண்மையை
உற்றுப் பாராதோர்
உனக்கேன்
இருமனைவி என்பார்

மயிலும்... சேவலும்
மகா தத்துவங்களின் குறியீடு
மாயை அறிவுள்ளோர்க்கு
அதுவெறும் ஓவியக்கோடு

பன்னிரு கைகள்
சொல்லிடும் சேதி
திண்ணிய ஓர்
புத்தகம் அல்லவா?

ஓ... முருகா!
உன் வடிவத்துள்
ஒப்பற்ற உண்மை கண்டேன்
ஒருபோதும் உன்னையினி
ஓர் கற்பனை
என்று சொல்லேன்

சூரனுடன் நீசெய்த
வீரியப் போர்
நானும் செய்கிறேன்
ஆணவம் என்ற
அகன்ற சூரன்
ஆட்டுகிறான் என்னை
அறிவு எனும்
கூரிய... நேரிய...
வேலெடுத்து
வீழ்த்துகிறேன் அவனை
சூரன் மயிலாகி...
சேவலாகி
உன் காலடியில்
ஆணவம் பொடியாகி
என் காலடியில்

முருகா... இருவரி குறளினை
புரியா பலர் திரியும் பூமியிது
எப்படி எல்லோர்க்கும்
உன் உண்மை புரியுமோ?

கோ. புரட்சி

## சோர்ந்திடுவோர்க்கு ஒரு சொல்



வாழ்க்கை எனும் நந்தவனத்தில்
பூத்திட்ட மலர்கள் நாம்
முயற்சி எனும் உணவை
தினமும் புசித்திடுபவர்
சரிவுகள் வந்தால்
சோர்ந்திட வேண்டாம்
நிமிர்ந்திட அறிவுச்
சூரியனைத் தேடிடு

ஏழ்மையைக் கண்டு
ஏங்கிட வேண்டாம்
ஏழை இலிங்கனின்
ஏற்றத்தைப் பார்
வயலில் களையெடுக்கும்
யுவதியை தேர்ந்திடு
நெற்பயிரை வளர்த்திடும்
விடலையின் குடும்பத்தைப் பார்
நெல்லின் குடலையைப் பார்

ஆடுகள் வளர்த்திட
பற்றைக்குள் செழித்து
வளர்ந்திட்ட கொடிகளை
கொக்கைத் தடியால்
வளைத்து இழுத்திடும்
இளம் பெண்ணை நோக்கு

பசும்புல் பசும்தழை தந்து
பசுவின் பால் எடுக்க
பளிச்சிடும் செம்புடன்
தந்தை பின்னே செல்லும்
சிறுவரை ஓர்ந்திடு

கடற்கரையெல்லாம்
கரைத்து அழித்த
ஆதிரையின் பின்னரும்
சிறுப்பலகை கொண்டு
விரைந்து வலித்து செல்லும்
கட்டுமர இளவலை ஓர்ந்திடு

மக்களும் மாநிலமும்
சுபிட்சமாய் வாழ்ந்திட
திருவாதிரையன்று
சிவபூசை செய்யும்
ஐயரை அறிந்திடு

உதயம் உன்
உள்ளங்கையில்தான்
மதியம் உன் உள்ளத்தில்தான்

தாவரங்களில் பதியம் வைத்து
கற்பித்த பாதிரியாரை
நன்கு புரிந்துகொள்

தொங்கும் கருப்பணி
முட்டிகளைச் சுற்றி
தேனிகள் பறக்க
காவு தடியை ஏந்திச் செல்லும்
அந்த மனிதன்
எமக்களிக்கும்
நம்பிக்கை பார்

ஆ.முல்லை திவ்யன்
பொலிகண்டி.

## என் நெஞ்சில் நீ



புன்னகை
காண்பதோ பஞ்சம்
உன்னிடத்தில்
என் இதயமோ! தஞ்சம்
உன் மனமோ
குழந்தை
நெஞ்சம்-அது
என்றும் நான்
துயிலும் மஞ்சம்

திரு
நெடுந்தீவு.

## பூலோக எமன்கள்



மன்னார் முள்ளிக்குளம் தொடங்கி
முழங்காவில் முட்கொம்பன்
முரசுமோட்டை என நீண்ட
எம் வழியின் பயணம்
முல்லைத்தீவின்
முள்ளி வாய்க்கால் வரை சென்று
வட்டுவாகலுடன் எட்டியது
முடிவின் தூரத்தை
காத்திருந்தது எமக்கு
புதுவாழ்வு அல்ல-
புனர்வாழ்வு எனும் பெயரில்
வதை வாழ்வும், சிறைவாழ்வும்
குற்றுயிராகவும், வெற்றுடலாகவும்
வீதி எங்கும் எம் உறவினர்களை
விதைத்து விட்டு வெறும் கையுடனும்
வெள்ளைக் கொடியுடனும்
வந்தவர்க்கு வழங்கப்பட்டது
விதியின் இறுதித் தீர்ப்பு
எமதூதன் அனுப்பிய
எறிகணைக்கு தப்பிய எமக்கு
எமனே நேரில் வந்து
தீர்ப்பு எழுதினான்
நீ தமிழனாகப் பிறந்ததால்
இனித் தாண்டவே முடியாது
தாண்டிக் குளத்தை என்று
தடுக்கப்பட்டுத் தரம் பிரிக்கப்பட்டு
தனிமையாக்கப்பட்டனர் பலர்
அதன்பின்னர் ஆளுவை எல்லாம்
அந்த எமனுக்கே தெரியாது
மேலோகத்து
எமனிடம் இருந்து
தப்பினாலும் - இந்த...
பூலோகத்து எமதூதர்களிடம்
இருந்து நீ தப்ப முடியாது
தமிழன் என்பதால்!

முகமாலை
வண.செ.நாகம்.

## கிழிந்த கடதாசியாய்...



வீட்டு மூலைக்குள்
விதி விலக்காய்
சில கிழிந்த கடதாசிகள்
அவற்றை ஒன்றாக்கி
ஒவ்வொன்றாகப் படித்தேன்
அவை அன்றொருநாள்
நீ எழுதிய ஐ லவ் யூ எனும்
அன்பான வார்த்தை
இன்று கிழிந்த கடதாசியாய்...

ம.யூரி.

## முகவரி



உன்
முகம் காண
நாள்களாகக்
காத்திருந்தேன்...!
கடைசியில்
காற்றலையில்-என்
காதோரம்
வந்த செய்தி!
நீ
முகவரி அற்று
நீண்ட காலமாய்
காணாமல்
போய்விட்டாயென்று....!

து.திலக்
யாழ்ப்பாணம்.

## கண்ணீர்க் கணங்கள்

நெருப்பில்
வேகின்றது வறுமை உணர்வுகள்
கூடவே வடிகட்டி எடுக்கப்படுகிறது
வம்சச் சாம்பாரில் ஏழையின் கண்ணீர்

பணம்
மனத்தை மணமுடித்து
சவக்குழிகளுக்கு அலங்காரம்
செய்கிறது

ஒப்பாரி இராகத்தில்
சந்தோசத்தைக் காணத் துடித்து
தமிழனின் தலைவிதி
மாறிப்போனது

முதலாளித்துவம்
பிரபஞ்சத்தை விலைக்குப்பேசி
அடிக்குமுன்னதாக ஜனிக்க முயலுகிறது

பொம்மை
கலாசாரத்தில் பெண்ணியம்
அடிபணிந்து வெளியூருக்கு
விற்பனையாகிறது

இருந்தும்
தொடரும் தவிப்புக்களில்
அழுது புலம்புகிறது
மனித மனங்கள்

ஜே.எஸ்.ராஜ்,
யாழ்ப்பாணபல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## அறிஞர்கள் கூறிய பொன் மொழிகள்

மிக அற்புதமான விடயங்களில் மனதை ஈடுபடுத்தி இருப்பவர்கள் பெரிய சாதனைகளைச் செய்ய முடியாமல் போய் விடுவார்கள்.

- ப்ராங்காய் டக்டலா ரோச்

சோதனை மிகுந்த காலங்களில் நாம் முயற்சி செய்யாமல் இருப்பதுதான் நம்முடைய தவறு

- டெனிஸ் வெஸ்ட்லி ரெமி

நூறு வலிமை பொருந்திய கரங்களைக் காட்டிலும் ஓர் அறிவுள்ள தலை சிறந்தது

- தாமஸ் புல்லர்

எவ்வித முயற்சியும் எடுக்காமல் இருப்பவர்களுக்குக் கடவுளும் உதவுவதில்லை

- ஸோபாக்ளிஸ் பிளக்மென்ட்

விதி துன்பம் தருவதாக அமைந்திருந்தால் அறிவுள்ளவன் துன்பம், புயலுக்கு எதிர்நீச்சல் போட்டு மகிழ்ச்சியை அடைய முடியும்

- ரூசோ

பெண்ணின் வாழ்க்கை முழுவதும் அன்பின் வரலாறு ஆகும்.

- வாஷிங்டன் இர்விங்

வாழ்க்கையில் குறிக்கோள் இருப்பதே ஒரு பெரிய அதிஷ்டம் ஆகும்.

- ராபர்வாயிஸ் டீலன்

**ச.கௌசிகா,**
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.


## ரோஜா மலர்

ரோஜா மலரின்
அழகைக் கண்டு
அதையும் அணைத்துப்
பறிக்கச் சென்று- என்
கையில் முள்ளுக்
குத்தியது அன்று....

அதைப் பார்த்த அம்மா
எனக்குக் கண்டிப்புடன்
சொல்லியதொன்று
அழகென்றால் அங்கு
ஆபத்தும் இருக்குமென்று....

உணர்ந்து கொண்டேன்
நானும் அதனை
எதற்கும் அவசரப்பட்டால்
அழகும் ஆபத்தில்
மாட்டிவிடும் மென்று....

**வசந்தன் நிருபா**
தரம்-4 'ஏ',
வசாவிளான் மத்திய மகா
வித்தியாலயம், உரும்பிராய்.



## தமிழுக்கு ஆங்கிலம் (11)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

'ஞ' வரிசையில்
ஞாபகம் - Memory
ஞாயிறு- Sunday, Sun
ஞாலம்- World
ஞானம்- Wisdom
ஞானி- Saint,Wiseman

'ட' வரிசையில்
டம்பம்- Show
டப்பி- Little box

'த' வரிசையில்
தடி: Stick
தகடு: Sheet
தகர்: Smash
தண்ணீர்: Water
தகவல்: Information
தகனம்: Cremation
தகுதி: Fitness,Qualification
தக்காளி: Tomato
தங்கை: Younger Sister
தசை: Flesh
தச்சன்: Carpenter
தடவு: Stroke
தடு: Stop
தடை: Obstacle
தட்டம்: Tray
தண்டனை: Punishment
தத்துவம்: Philosophy
தந்திரம்: Tricks
தம்பி:Younger brother
தயிர்: Curd
தரகர்: Broker
தரிசனம்: Appearance
தருணம்: Occasion
தரை: Floor
தர்க்கம்: Dispute
தலை: Head
தலைவன்: Leader
தவணை: Term
தவளை: Frog
தவறு: Mistake
தளபாடம்: Furniture
தள்ளு: Push
தறி: Loom
தனிமை: Loneliness
தப்பு:Escape, Mistake
தங்கு: Stay

'தா' வரிசையில்
தாகம்: Thirsty
தா: Give
தாக்கு: Attack
தாங்கு: Hold up,Endure
தாடி: Beard
தாண்டு: Leapover
தாமதி: Delay
தாமரை: Lotus
தாம்பாளம்: Large Tray
தாழ்ப்பம்: Depth
தானம்: Giving alms
தானியம்: Grain

'தி' வரிசையில்
திகைப்பு: Perplexity
திசை: Direction
திட்டம்: Plan
தியாகம்: Sacrifice
தியானித்தல்: Meditation
திருடு: Steal
திருட்டு: Theft
திருத்தம்: Correction
திருகு: Twist
திருப்தி: Contentment
திற: Open
திறப்பு: Key
திறமை: Ability

'தீ' வரிசையில்
தீ: Fire
தீமை: evil
தீனி: Meal
தீங்கு: Causing Evil
தீர்த்தம்: Holy Water
தீர்: Solve
தீர்ப்பு: Judgement
தீட்டு: Sharpen,Uncleanness
தீர்வு:-Solution
தீபம்: Lamp
தீர்மானம்:Decision
தீவு: Island
தீவிரம்: Haste

**தொகுப்பு:ரம்யன்**

## விடை தெரியுமா? 103

1.2011 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கோப்பையை வென்ற நாடு எது?
2.சவூதி அரேபியாவின் தலைநகர் எது?
3.இறைச்சியில் உள்ள புரதம் எது?
4.யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள பெண் யார்?
5.நாட்டில் அபிவிருத்திக் கடன்களை வழங்குவதில் முன்னணி வகிக்கும் வங்கி எது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 23.04.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 101

1.மடகஸ்கார் தீவு
2.ஜஸ்டின் இபுலின்
3.மெசஞ்சர்
4.இஸ்ரேல்
5.ஒட்டகம்

### வெற்றி பெற்றவர் விவரம்

1.இ.தனுகரன்,
தரம்-9 'சி',
யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி.
2.சி.நவநீதா, தரம்-10 'ஏ',
யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி.
3.சி.நிரோஜன், தரம்-6,
யா/நெல்லியடி ம.ம.வி, கரவெட்டி.


**உங்களுக்கும் பரிசில்கள்**

## மாணவத் தாரகை



தேவசேனா விஜயகுமார்,
தரம்-9,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

ச.சர்வாணி, தரம்-4'பி',
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.





கு.கரிகரன்.
தரம்-2,
யா/சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீரணி நாகபூஷணி அ

## சீரணி, சண

# ஆலய இரதோற்சவ

### தேவஸ்தான குருவின் ஆசியுரை



அம்பிகையின் ஆலயங்களிலே தலைசிறந்த திருக்கோவிலாக மிளிர்வது சீரணி நாகபூசணி அம்மன் ஆலயம். எத்தனையோ அடியவர்களின் குறைதீர்த்த பெருமாட்டியாக விளங்கும் தாயின் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. அம்பிகையின் அடியவர்கள் நாலாபுறமும் இருந்து அம்பிகையின் திருக்கோலத்தை காண்பதற்கு காலையிலேயே கூடி விடுவர். அத்தனை பெருமை வாய்ந்தது அம்பிகையின் தேர்த்திருவிழா. ஐங்கரனுக்கு முதலில் தேர் அடுத்து ஆறுமுகன் வலம் வர அடுத்து அம்பிகையின் தேர் வலம் வர ஆலயமே அடியவர் கூட்டத்தால் நிறைந்து ஈழத்தின் தேவலோகமோ என்ற அளவிற்கு தெய்வீகப் பொலிவு ஆலயத்திலே நிறைந்திருக்கும். இன்றைய நன்நாளில் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள் சீரும் சிறப்பும் நிறைந்து வாழ அம்பிகையைப் பிரார்த்தனை செய்கிறேன்.

**பிரம்மஸ்ரீ.கு.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(தேவஸ்தான குரு)

### சீரணி நாகம்மாள் அருள்பவனி



சீரணியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் புகழ்மிக்க அம்பாள் திருத்தலத்தின் மகோற்சவம் சிறப்பானது. இதில் அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞான ஒளியை ஏற்றுவிக்கும் நாளான இரதோற்சவ நாளில் மக்களின் துன்பங்கள், துயரங்கள்; சுமைகள் நீக்கி அனைவரும் அம்பாளின் அருள் பவனியில் அருளாசி பெற்று இன்புற்று வளம் பெற்று ஒற்றுமையுடன் சாந்தியும் சமாதானமுமாக மனம் நிறைந்து வாழ அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.எ.அன்ரன் யோகநாயகம்**
*பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.*

### வண்ணத் தேரேறி வலம் வரும் சீரணித்தாய்



அல்லல்கள் போக்கிடவே
அன்னையவள் தேர் ஏறி
நல்லவர் வாழ்வு பெற
நயமுடனே வலம் வருவாள்
சிங்காரத் தேரேறி
திருவீதி வலம் வந்திடும்
சீரணித்தாய் நாகபூசணியின்
சிரம் போற்றி அருள் பெறுவோம்.

**இ.சிறிதரன்**
*(தலைவர்) இந்து இளைஞர் மன்றம்*

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் நிறைந்த, சீரணி அம்பாள் திருத்தேர் விழாக்குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். அற்புதம் நிறைந்த அம்பாள் தேர் ஏறி வரும் திருநாள் மகத்தானது. அடியார் திருக்கூட்டம் ஆடியும் பாடியும், அழுதும், அரோகரா ஓசை எழுப்பியும் ஆனந்த மயமாக தேர்நாளில் வணங்கும் காட்சி இவ்வாலயத்தின் சிறப்பம்சம் எனலாம். இயற்கை அழகு மிக்க சண்டிலிப்பாய் கிராமத்தில் ஏழைகளின் வாழ்வை உயாத்தி வைக்கும் தாயாக விளங்கும் சீரணி நாகபூஷணியின் கருணை வர்ணிக்க முடியாதது. மழலை வரம் முதல் தீரா நோய் தீர்க்கும் தேவியாக அம்பாள் விளங்குவதால் பல மக்களும் பக்தியோடு நாடிவரும் புனிததலம். இத்திருத்தலத்தின் தேர்விழா பொலிவு கண்டு இன்புற வாழ்த்தி, அடியார்கள் அனைவரும் நிறைவாக வாழ அம்பாளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.


**ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*

### பிரதேசசபை செயலாளரின் வாழ்த்துரை



இலங்கைத்தீவின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரத்தில் இயற்கை எழில் கொழிக்கும் சண்டிலிப்பாய் சீரணிப்பதியினிலே நிதமும் வற்றாது கருணை மழை பொழியும் அன்னை நாகபூஷணியின் இரதோற்சவம் காணக்கிடைத்தது அரும் பெரும் பேறாகும். விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய பரிவார மூர்த்திகளோடு அன்னை நாகபூஷணி அழகிய சித்திரத் தேரினிலே சித்திரா பௌர்ணமி நன்னாளில் வலம் வருவது மிகவும் அற்புதமானது. அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றாக திகழும் நயினாதீவு நாகபூஷணி அம்பாளுக்கு இணையாக சீரணிப்பதியினிலே வீற்றிருந்து தன்னை நாடி வரும் அடியார்களுக்கு வேண்டும் வரங்களை எல்லாம் வாரி வழங்கும் தாயாக சீரணி நாகபூஷணி அம்பாள் விளங்குகிறாள். இன்றைய நன்நாளில் எல்லோருடைய வாழ்விலும் சாந்தியும், சமாதானமும் சுபீட்சமும் திகழ பிரார்த்தித்து ஆசிகூறி அமைகிறேன்.

**திருமதி.புஸ்பமலர் சிவலிங்கம் (செயலாளர்)**
*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை*
*மானிப்பாய்.*



### ஆலய

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில்
சேர்ந்த மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய
வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு.
பிள்ளை, அன்னப்பிள்ளை, நன்னிப்பிள்ளை, மயி
ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷ
ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தா
தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமை
செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்
வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பன




சுந்தர்சன்
பிரதான வீதி, மானிப்பாய்

ஐங்கரன் மோட்டோர்ஸ்



சியாட் ரயர், Fevicol தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள். ஆட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, வாட்டர்பம் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்.
சந்தை முன்பாக, மானிப்பாய்.



லீலா வெதுப்பகம் சுவையகம்
சீரணி, சண்டிலிப்பாய்

அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி.

கஜமுகன் ஸ்ரோர்ஸ்
S.S தொலைத்தொடர்பகம் & பான்சி
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

சக்தி எலக்ரிக்கல்ஸ்
கைத்தொலைபேசி விற்பனையகம்
சந்தைச் சதுக்கம், சங்கானை.

ஆசைப்பிள்ளை அன் சன்
நகை மாடம்
இல.10 பஸ் நிலையம், சங்கானை.

இரதோற்சவம் சிற

நியூ சண்முகானந்தா ரெக்ஸ்
23, (58) பெரிய கடை,
யாழ்ப்பாணம்


கணபதி ஹாட்வெயர்ஸ்
தொட்டிலடி, சங்கானை.

COMPUTER WORLD &
PRINTERS
7ம் கட்டை, சண்டிலிப்பாய்.

தரம் 6 முதல் O/L வரை யாழ்
எடிஷன்
யாழ்ப்பாணம், நல்லூர், கொக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்பாள் தேவஸ்தானம்
# ண்டிலிப்பாய்
# வ சிறப்பிதழ் - 2011









### மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி - அம்பிகையின் அருள் பெருகட்டும்........

அண்டமெல்லாம் பரவி வியாபித்து நிற்கும் அகிலாண்ட நாயகியாம் நாகபூசணி அம்பிகைக்கு இன்று தேர்த்திருவிழா. மஹோற்சவ காலத்தில் சம்காரத் தொழிலைக் குறிக்கின்ற தேர்த்திருவிழாவில் அன்னையானவள் சர்வாலங்கார பூரணியாக தேர்வலம் வருகின்ற காட்சி அற்புதமானது.

இப் பூவுலகிலே பிறந்த நாம் பல்வேறு வகையான துன்பங்களுக்கு ஆளாகின்ற போது எம்மைக்காத்து ரட்சிப்பவள் சீரணி நாகபூசணி அம்பாள். அப்படிப்பட்ட அன்னை சித்திராப் பௌர்ணமியில் தேரேறி வருகின்ற தெய்வீகக் காட்சியை காண ஆயிரம் கண் போதாது. அடியவர்கள் எல்லாம் அன்னையின் பேரழகிலே லயித்த வண்ணம் தம்மை மறந்து சிரம் மேல் கைகூப்பி தாயே, தாயே என்று பிரார்த்தனை செய்து தேரோடும் வீதியிலே சிங்கார நாயகியாம் நாகபூசணி அம்பிகையினுடைய திருத்தேரோடு வலம்வருகின்ற போது நம்முடைய தீவினைகள் எல்லாம் ஓடிவிடும். அம்பிகையின் தேர்த்திருவிழா சிறப்பாக அமைய ஆசிகூறி அமைகிறேன்.

**சிவாகம கிரியா தத்துவ நிதி**
**சிவஸ்ரீ .இராம.பாலச்சந்திரக் குருக்கள்**
(ஆதீனகுரு - ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் கோவில், இளவாலை)

### அறங்காவலர் சபையின் வாழ்த்துச் செய்தி

அம்பிகை வழிபாடு பற்றி ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்ற பிரகாரம் ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சக்திபீடங்களில் ஒன்றாகிய இலங்கைத்தீவின் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் கிராமத்தில் சீரணி என்றும் திருத்தலத்தில் என்றும் பரிபூரணமாய் கோயில் கொண்டு விளங்கும் சர்வலோகநாயகி ஆன நாகபூசணி அம்பாள் தன்னை நாடி வரும் அடியார்களுக்கு திருவருள் புரிகிறாள்.

வருடாந்த மகோற்சவத்தில் தேர்த்திருவிழாவான இன்று சோதிவடிவில் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்ற தாய்க்கு சித்திரா பௌர்ணமியில் காவலர்களாக விநாயகரும் முருகப்பெருமானும் முன் தேர்களில் பவனி வர பின்னே அம்பிகை சித்திரத்தேரில் ஏறி பவனிவரும் காட்சியைக் கண்டு எம் உள்ளங்கள் மலர்ந்து அன்புப் பெருவெள்ளத்தில் நீந்துகின்றோம். சோதியாய் விளங்கி அருள்புரியும் எம் தாய்க்கு எம் உள்ளங்களை காணிக்கையாக அர்ப்பணிக்கின்றோம்.

### ஆதீனகர்த்தாவின் ஆசிச்செய்தி

வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கரியோய் நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்

சோதியாய் வீற்றிருக்கும் சீரணித்தாயே! புவனமெல்லாம் காப்பவளே
ஈரேழு உலகத்தையும் உன் கண் சிமிட்டில் காண்கின்றோம்

அதைப் பார்த்து மக்களோ மகிழ்கின்றனர். உன் பார்வையே ஒரு விளக்கம்மா. மக்களின் பார்வையோ துன்பமம்மா. துயர் தீரும் இன்பத்தை அளிப்பவளே உன் பாதம் நாங்கள் சரணடைந்தோம் அம்மா. ஈரேழு உலக மக்களுக்கும் அருள்புரிந்து சௌபாக்கியம் அளித்து இன்று தேரேறி வருகிறாள். அம்மா உன் பார்வையை மக்கள் பார்ப்பதற்கு கோடி கண்கள் வேண்டும். அதைப் பார்ப்பதற்கு கோடி மக்கள் திரண்டு வருகிறார்கள். அதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லோருக்கும் சௌபாக்கியம் கிடைக்க நாகபூசணி அம்மையைப் பிரார்த்திக்கின்றேன்.

**தம்பையா பரஞ்சோதி**
**(ஆதீன கர்த்தா)**
*சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்*





### ரலாறு

மைந்துள்ள பதியில் வாழ் இன்புற்ற வேளாளகுலத்தைச் மன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து ர் ஜனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப் ாகனம், பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் ம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை இம்முறைப்படி இன சன மக்கள் எல்லோரும் சேர்ந்து னர்பரிபாலித்து வருகின்றனர்.

## புற வாழ்த்துவோர்

MANIYAM IMPEX
இல.75 (121A),
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

அம்பாள்
பல்பொருள் வாணிபம்
சீரணி, சண்டிலிப்பாய்.

கந்தசாமி அன் சன்ஸ்
சந்தைச் சதுக்கம், சங்கானை.

ரின் நம்பர் 01 கல்வி நிறுவனம்
அக்கடமி
, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய்.

எலைட் சோடா, பிஸ்கட் வகைகள்
கலாபா இன்டஸ்றீஸ்
வல்லை வீதி, சங்கானை

பாக்கியரட்ணம் ஹாட்வெயர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

தரன் ரேடர்ஸ்
130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாகபூஷணி A-Z பலஸ்
சீரணி, சண்டிலிப்பாய்.

ரஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்
யாழ்.வீதி, மருதடி விநாயகர் கோவிலடி, மானிப்பாய்.

நாகபூசனி அரிசி ஆலை
சீரணிச் சந்தி,சண்டிலிப்பாய்

ஐடியல் அக்கடமி
தரம் 3 முதல் A/L வரை திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் குழுவுடன்
தலைமையகம் : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.
கிளை 1 : இடைப்பிட்டி, காரைநகர்
கிளை 2 : நீராவியடி, யாழ்ப்பாணம், கிளை 3 : மானிப்பாய்

YASO TEX
பிரதான வீதி, நெல்லியடி.

YASO FANCY
சந்தைச் சதுக்கம்,பண்டத்தரிப்பு

உதயன்
கட்டடப் பொருள் வாணிபம்
பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாண்டின் ஐம்புலன் இழந்த நினைவலைகள்



மலர்வு:
07.04.1944

உதிர்வு:
14.04.2006

**உயர்திரு. சிவக்கொழுந்து இராஜதுரை**
திதி:18.04.2011

"என் உயிரில் கலந்த உறவே
என்னுயிர் தங்கள் உயிருடன்
சங்கமிக்கும் நன்னாள் வரை
உந்தன் நிஜமான நினைவுகள்
வாழும், வளரும்..."
எப்போதும் இனியானை என் மனத்தே
வைத்தேனே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் தங்கள்
ஆருயிர் மனைவி
ஸ்ரீமதி துவேஸ்வரி
இராஜதுரை
M.A.M.Phil
[ஆசிரிய ஆலோசகர்].

குப்பிளான்,
ஏழாலை.

(39-21-23)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1983இல் பிறந்த, பூச நட்சத்திரமும், 60 கிரகபாவமும், 8இல் செவ்வாயும், சூரியனுமுடைய மணமகளுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 0774393045, 021 2221979.
(3116) (38)

## கடை வாடகைக்கு

பண்டத்தரிப்புச் சந்திக்கு அண்மையாக 40 அடி நீளமான கடை வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0213212574.
(3175) (38)

# STUDY IN UK, CANADA , USA CYPRUS, POLAND & SINGAPORE



- **UK** → தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் IELTS இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியை தொடரலாம்.
- **USA** → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.
- **CANADA** → IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் 2வது வருடத்திலிருந்து PR கிடைக்கும்.
- **POLAND** → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.
- **SINGAPORE** → பதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். கல்லூரி அனுமதி உத்தரவாதம்.
- **CYPRUS** → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

100% Legal & Genuine process

**Next Intake: May.'11**

எமது பிரதிநிதி இன்று முதல் செவ்வாய் வரை யாழ்ப்பாணத்தில் இருப்பார் நீங்கள் அவரை சந்திக்க வேண்டுமானால் முன்கூட்டியே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுமதிபெற்று சந்திக்கலாம்.

For further Info:
அல்சரா - 0778339943, பஸ்னா - 0778 438403
E-mail: read.int@gmail.com

**READ International**
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வெறுமையே எஞ்சியிருக்கும் வாழ்வில் ஈர விழிகளில் இருந்து சொரியும் கண்ணீர் மழை

## செல்வி இந்துஜா விஜயகுமார்



மகளே! இந்துஜா!
உன் மழலை மொழி கேட்டு
3 ஆண்டுகள் கடந்தாலும்
அர்த்தமற்ற வாழ்வில் நாம் ஒன்றி
உன் நீங்காத நினைவுடன்
நடைப் பிணங்களாய் அலைகின்றோம்
உன் இறப்புக்குக் காரணமானவர்
நிம்மதியாய் தொழில் நடத்திட
நாம் செத்துப் பிழைக்கின்றோம்
பாசத்தின் உறைவிடமே!
எப்போ எம் மடியில் மீண்டும்
பிறந்து தவழ்வாய்.

**அம்மா, அப்பா.**
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.

அன்னையின் மடியில்: 27.06.2003
பிரமத்தின் கூடத்தில்: 17.04.2008

(3038) (38-20-25)

# ஒரு மணிவயிற்றில் உருவான முத்துக்களின் நீங்கா நினைவலைகள்

## 30ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## 28ஆம் ஆண்டு நினைவு


கடந்த 20.03.2011 இறையடி சேர்ந்த தில்லையம்பலம் அரியரத்தினம் அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு இல்லம் (வத்திராயன் தெற்கு) வந்து ஆறுதல் கூறியோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (18.04.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம். மேலும் எமது ஞாபக சக்திக்கு அப்பாற்பட்டநிலையில் யாரையும் நாம் அழைக்கத்தவறி இருப்பின் அதனைப் பெருமனதுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்.**
வத்திராயன் தெற்கு, தாழையடி.



### தில்லையம்பலம் அரியரத்தினம் (டென்மார்க்)

அன்னை அணைப்பில்: 04.10.1959 இறைவன் அழைப்பில்: 20.03.2011



### தில்லையம்பலம் நந்தகுமார்

அன்னை அணைப்பில்: 06.03.1964
இறைவன் அழைப்பில்: 15.04.1983

(36-21-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பனை வளஞ்சார் அபிவிருத்திக்கு வழிபிறக்குமா?

11



பூலோகக் கற்பகதரு எனச் சிறப்பிக்கப்படும் பனை மரத்தின் ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்துப் பயன்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களையும் தவறவிடக்கூடாது.

பனை மரத்தின் வளர்ச்சிப் படிநிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் அதிலிருந்து பெறக்கூடிய வளங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

இவற்றின் மூலம் முழு நாடுமே அபிவிருத்தி காணும். வளர்ச்சியடைந்துவரும் தற்போதைய காலகட்டத்தில் இயற்கை வளமான பனை வளத்தை உரிய முறையில் பயன்படுத்தாது விடுவது சரியாகுமா?

இந்தச் சமாசத்தினூடாகத் தரத்தைப் பேணவும் உற்பத்தியாகும் பொருள்களினை தூய்மையானதாக வாங்கி பயன்படுத்தவும் முடியும். இங்கே சட்டரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள பனை அபிவிருத்தி அதிகாரசபை எடுத்திருக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. இதனைச் சிறப்பாக அமுல்படுத்த பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

பனை வெல்லத்திலுள்ள இனிப்புத்தன்மை குறைவு என்பதனாலும் வேறு பல மருத்துவக் குணங்களுக்காகவும் இதனைச் சுதேச மருத்துவத்தில் குறிப்பிட்ட தேவைக்காகப் பயன்படுத்துகின்றார்கள். அதேவேளையில் கரும்புச் சீனியிலுள்ள இனிப்பினளவு அதிகமாக இருப்பதனால் கரும்பு சீனியை விட பனை வெல் லத்தைப் பயன்படுத்துவது நல்லது என்றும் குறிப்பாக மதுமேகம் அல்லது நீரிழிவு நோய் பற்றிய அச்சமுடையவர்களுக்கு பனை வெல்லம் சிறந்தது எனவும் தெரியப்பட்டுள்ளது. எப்படிப் பார்த்தாலும் பனை வெல்லத்தை நாமனைவரும் பயன்படுத்த முன்வரும் போது அதற்கான கேள்வியும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டல்லவா?

பனை வெல்லம் தயாரிக்கும் போது முற்றிலும் தூய்மையானதாகத் தயாரித்தல் மட்டுமே வெல்லம் கசிவதிலிருந்து தவிர்க்கலாம். ஆனால் அவ்வாறாக தூய்மையானதாகத் தயாரிக்க முடியாதிருப்பதுவும் பனை வெல்லம் கசிவதற்கான காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது.

இது பற்றிய மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த ஆய்வுகள் தூய்மையான பனை வெல்லத்தைப் பெற வழிகாட்டுவனவாகவும் அவற்றை நீண்ட நாள் சேமித்து வைக்க வழிபிறக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பனம் பழத்திலிருந்து பெறப்படும் பனங்களியினைக் கொண்டு புதிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகளுக்கு முன்னுரிமை கொடுப்பது நல்லது. பனை விதையை எந்த வகையிலும் பாதிக்காது பனங்களி பிரித்தெடுக்கப் படுவதனால் இதன் மூலம் சிறந்த பனங்களியை தேவையான அளவுக்கு பெறமுடிந்தது.

பனங்களி, நுங்கு, பூரான், கிழங்கு என அனைத்தையுமே பெறக்கூடிய நிலையில் இவற்றிலிருந்து சிறந்த சுவையான, தரமான உணவு வகைகளை உலகத்தின் நியமங்களுகேற்ப தயாரிக்கவும் எம்மவர் களின் தேவை தவிர்ந்து மேலதிகமானவற்றை உலக சந்தைக்கு கொண்டு செல்லவும் வழிசெய்தல் வேண்டும்.



*(வளரும்)*

பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தலைப்பொடுகு, தலை அவியலுக்கு மிகவும் சிறந்தது எலுமிச்சை, அரப்பு

**எலுமிச்சை**
**வேறு பெயர்: தேசிக்காய்**
**தாவரவியற் பெயர்:** Citrus acida
(சிற்றஸ் அசிடா)
**குடும்பம்:** Rutaceae (ருற்றேசியே)
**சிங்களப் பெயர் : தெஹி**
**சமஸ்கிருதப் பெயர்: ஜம்பீரபல**
**ஆங்கிலப் பெயர்:** Lime

எலுமிச்சையில் செடி எலுமிச்சைக் கொடி, எலுமிச்சை என்ற பேதங்களுண்டு. வாழைப்பழத்துக்கு அடுத்தபடியாக வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியதாக இருப்பதோடு ஆலய வழிபாட்டில் இடம் பெறும்



பழமாகவும் உள்ளது. அம்பாளுக்கு உகந்த மாலைகளில் தேசிக்காய் மாலையும் ஒன்று. பெரியோர்களைக் காணச்செல்லும் போது செல்லும் காரியம் பழமாக வேண்டும் (வெற்றியளிக்கவேண்டும்) என்ற எண்ணத்துடன் தேசிப்பழத்தைக் கொண்டு சென்று கொடுத்து வணங்குவதும் தமிழர் வழங்கிலுண்டு.

தேசிச்செடி நன்றாகக் கிளைத்து வளரும். கூட்டிலை சிற்றிலைகள் முட்டை வடிவானவை. கக்க வரும்புகள் முள்ளாகத் திரிவடைந்திருக்கும். பூக்கள் வெள்ளை நிறம். நறுமணமுடையவை.

இதன் இலை, காய், பழம் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

தேசியிலை, நாரத்தம் இலை, கொய்யா இலை என்பவற்றைச் சுடுநீரில் போட்டு அதிலிருந்து வெளிவரும் ஆவியை வேதுபிடிக்க தடிமன், மூக்கடைப்பு, நீர்க்கோவை என்பன குணமாகும்.

பழச்சாற்றுக்குச் சீனி அல்லது சர்க்கரை சேர்த்துப் போதியளவு நீரும் சேர்த்துப் பருகி வரத் தாகம், பித்த மயக்கம், நீர்வேட்கை என்பன தீரும்.

தேசிப்புளிச்சாறு, 1 பங்குக்கு 3 பங்கு சீனி சேர்த்து நன்கு கலக்கி அதில் சிறிது சிறிதாக நாக்கிலிட்டு உமிஞ்சுவர ஓங்காளம், வாந்தி என்பன நீங்கும். கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் காலை வாந்திக்கு இது மிகவும் நல்லது.

தலைப்பொடுகு, தலை அவியலுக்கு எலுமிச்சங்காய், இலுப்பை அரைப்பு என்பவற்றை நீர்விட்டு நன்கு அவித்தெடுத்து தலையில் தேய்த்து முழுகிவர மாறும்.

தேசிப்புளிக்குச் சீனியும் நீரும் விட்டுக் கரைத்து சிறிது உப்பும் சேர்த்துக் கொடுக்க வயிற்றோட்டம், வயிற்றுப்பொருமல், தாகம் என்பன தணிவடையும். வயிற்றோட்டத்தினால் ஏற்படும் நீரிழிப்பைத் தடுக்கவும் இது உதவும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

தேசிப்புளியில் உயிர்ச்சத்து சி அதிகளவில் உண்டு. எனவே தோல் வியாதிகள், சுவாச நோய்களை நீக்குவதிலும் இதன் சாறு உதவும்.

தேசிக்காயை ஊறுகாய் செய்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர வயிற்றுப்பொருமல், அஜீரணம், மலச்சிக்கல் என்பன நீங்கும்.

**நாரத்தை**
**வேறு பெயர்: நாரங்கம்**
**தாவரவியற் பெயர்:** Citrus Medica
(சிற்றஸ் மெடிக்கா)
**குடும்பம்:** Rutaceae (ருற்றேசியே)
**சிங்களப் பெயர் : நஸ்நாரம்**
**சமஸ்கிருதப் பெயர்: நாரங்க**
**ஆங்கிலப் பெயர்:** Citron

இது பெருஞ் செடி வகுப்புக்குரியதாகவும் அல்லது சிறு செடி வகுப்புக்குரியதாகவும் இருக்கும். இதுவும்



தேசிக்காய்க்கு ஒப்பானது. ஆனால் முள்கள் தடித்தும் நீண்டும் இருக்கும். காய் பெரிதாகவும் அழுத்தமற்றும் காணப்படும்.

இதன் இலையை தேசியிலை, கொய்யா இலை என்பவற்றுடன் சேர்த்து வேதுபிடிக்க மூக்கடைப்பு மண்டைப்பீனிசம் என்பன தணிவடையும்.

பழத்தோலை உலர்த்தி பொடித்துத் தணலில் இட்டு வரும் புகையையும் வேதுபிடிக்கலாம்.

தேசிக்காயைப் போலவே இதனையும் பிழிந்து சாறெடுத்து அத்துடன் சீனி அல்லது சர்க்கரை, நீர் என்பன சேர்த்துப் பருகி வரத் தாகம், நீர்வேட்கை, உடற்சூடு, வாந்தி, பித்தக் கிறுகிறுப்பு என்பன நீங்கும்.

காயை ஊறுகாய் செய்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர பசியின்மை வயிற் றுப்பிசம், அஜீரணம், சோகை, உடற்சூடு, மந்தம் என்பன நீங்கும்.

இதன் ஊறுகாயை வாயிலிட்டு மென்று வர நாச்சுவையின்மை நீங்கும்.



*(தொடரும்...)*

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 158

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | 4 | 5 | 6 | |
| 7 | | 8 | ■ | 9 | | | ■ |
| ■ | 10 | | 11 | | | ■ | 12 |
| 13 | ■ | 14 | | | ■ | 15 | |
| 16 | 17 | | ■ | 18 | | | |
| 19 | | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | 23 | | ■ | 24 | | |
| | ■ | 25 | | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:...............................................

விலாசம்:...............................................

...............................................

கையொப்பம்:...............................................

### இடமிருந்து வலம்

1.சபை
3.வலுத் தருவது இது. ஆட்சிக்கும் அவசியம்.
7.காயையும் இலையையும் தாங்கி நிற்பது.
9.ஓர் ஒழுங்கு முறையான இயக்கம்.
10.நூல்.
14. உலோகத்தை மெல்லிய படையாகத் தட்டி எடுக்கும் போது கிடைப்பது.
15.தேசம்
16.எமது நாட்டின் ஆதிக்குடிகள் இவர்கள் என்பர்.
18.தபால்
19.பெருக்கற்குறி
20.தமது
21.மங்களகரமானது
22.அறுவைக் கருவி
24.நட்சத்திரங்களில் ஒன்று
25.செழிப்பு

### மேலிருந்து கீழ்

1.உடன் சேர்ந்தவன்
2.சர்ப்பம்
4.சுக்கு,மிளகு, திப்பிலி
5.நாலு கூப்பிடு தூரம்
6. குடிவகை ஒன்றின் பெயர்
8.பரிநிர்வாணம் பெற்ற ஞானி.
11.தகுதியான
12.இது நல்லது எனில் பல்கலைக்கழகமாகிவிடும்.
13.ஆதரவு அற்ற நிலை
15.குழல் வாத்தியக் கருவி
17.கை
20.இளையவனை இப்படி அழைப்பார்கள்.
23.வீட்டு மிருகம்
24.தடவ

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 156 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)அனுபவம் (5)சாவி (7)கனிதல். (8)உதடு (9)விலகு. (11) கதி. (12)கைது. (14)வடிவம் (16)யமன். (19) சரடு. (20)சம்மதி. (22)கம்மாலை (23) புதிய. (24)விரியம்.

### மேலிருந்து கீழ்

(1) அகலிகை. (2)நுனி. (3)பதவி. (4)வல்லவன் (5)சாதகம். (6)விடுதி (10)குடி. (13)துயரம் (15)வலம்புரி (17)மடுமாதா (18)நிதியம் (19)சகதி (21)மதிய

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 156 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **மேரி பசுபதி,** அண்ணா கோப்பி விடு, பாலிநகர், வவுனிக்குளம்.

2 ஆம் பரிசு — **சு.திருப்பரங்கிரிநாதன்,** இமையாணன், உடுப்பிட்டி.

3 ஆம் பரிசு — **ர.பிரிதா,** பா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

4 ஆம் பரிசு — **உ.சசிகலா,** நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

5 ஆம் பரிசு — **பா.நிருபன்,** வீமன்புலம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

### பாராட்டுப் பெறுவோர்

**யோ.ஜெறோஷன்,**
சென்.கென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

**செல்வி.பொ.சிவகாமி,**
இலக்குமிபதி,
சங்கானை.

**ச.இராதாலட்சுமி,**
வில்வம் தோட்டம்,
வதிரி, கரவெட்டி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 158**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 27.04.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 158 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 01.05.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# அறிந்தும்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது அவர்கள் அதிகமாக மது அருந்தியிருந்தனர். விமல் போதையின் ஊக்கத்தில் இருந்தபடியால் அபர்ணாவுக்கு முன் சென்று அவளின் கையைப் பிடித்து இழுத்தான்.

அபர்ணா சற்றும் எதிர்பாராதவிதமாக விமலின் கன்னத்தில் அறைந்து விட்டு. பிரிந்தனைப் பார்த்து "நீயும் ஒரு மனுசனா? தெருநாயை விடக் கேவலமான செயலில் ஈடுபடுகிறாயே? உன்னையும் ஒரு பெண் தானே பெற்றவள்" என்று காறித் துப்பி விட்டுச் சென்று கொண்டிருந்தவளை பிரிந்தன் கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் விமல் பிரிந்தனை அழைத்துச் செல்வதற்கு அவனுடைய வீட்டுக்கு வந்திருந்தபொழுது பிரிந்தனோ அவனுடன் வெளியே செல்வதற்கு விருப்பம் இல்லாமல் இருந்தான்.

"மச்சான் இனிமேல் பெண்களுடன் சேட்டை விடுதல் மற்றும் ஆள் கடத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதை நிறுத்தலாம் என்று நினைத்து இருக்கின்றேன். ஏனென்றால், நேற்று என்னை அப்பெண் கேட்ட கேள்வி என் இதயத்தை பிடுங்கி எறிவது போல இருக்குதடா" என்று கூறினான். நண்பனின் முகத்தைக் கூர்ந்து நோக்கிய விமல், அவன் முகத்தில் கண்ட வேதனையைக் கண்டு பேசாமல் தனது வீடு நோக்கிச் சென்றான்.

அபர்ணா தனது மோட்டார் சைக்கிளில் வேலைக்குச் செல்வதற்கு வெளியே வந்து கொண்டிருந்தாள். அவள் வருகைக்காகக் காத்திருந்தமை போல பிரிந்தன் தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். பிரிந்தனைக் கண்ட அபர்ணா அமைதியாக நகர்ந்து சென்றாள். அவளின் அமைதி அவனுள் வேதனையை ஏற்படுத்தியது. நான் எவ்வளவு தவறுகள் செய்துவிட்டேன் என்று மனதில் வெதும்பியவனாக அபர்ணாவுடன் வலியச் சென்று கதைக்கத் தொடங்கினான். ஆனால், அவள் காது கேளாதவள் போல தனது முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு சென்றுவிட்டாள்.

அபர்ணாவை முருகன் கோயிலில் கண்ட பிரிந்தன் அவளிடம் சென்று "என்னை மன்னித்து விடு" என்று கூறிப் பார்த்தான். ஆனால், அவளோ அவனைக் கோபமாக முறைத்துப் பார்த்தாள். ஆனால், பிரிந்தனோ அவளின் கோபம் தாங்க முடியாமல் தவித்தான். அபர்ணா எவ்வளவு அலட்சிமாக அவனை நடத்தினாலும் அவன் அவளுடன் தினமும் வலியச் சென்று கதைப்பான்.

"அபர்ணா இங்கே ஓடிவா, உன் அண்ணன் என்னுடன் ரெலிபோனில் கதைத்துக் கொண்டு இருக்கிறான்" என்று தாய் பாக்கியம் சொன்னதுதான் ஆர்த்தி ரெலிபோனுக்கு அருகில் செல்வதைக் கண்டு தான் முந்திச் சென்று ரெலிபோனைப் பறித்தாள் அபர்ணா.

மறு முனையில் ஆகாஸ், "என்ன அபர்ணா பிரிந்தன் எப்படி இருக்கின்றான்? இப்பவும் கோஸ்டி மோதல் என்று ஊர் சுற்றுகிறானா?" என்று கேட்டான். அண்ணா இப்ப பிரிந்தன் திருந்திவாற மாதிரித் தெரிகிறது. ஏனென்றால் காலையில் வேலைக்குப் போய் மாலையில் வீடு வருவதால் தனது நண்பர்களுடன் செல்வதைக் குறைத்து வருகிறான். இப்ப எல்லாம் விமல் மட்டுந்தான் அவருடன் கூட்டாகத் திரிகிறான். சென்ற வெள்ளிக்கிழமை நானும் ஆர்த்தியும் கோயிலுக்குச் சென்றிருந்தோம். அவர் அமைதியாக வந்து சாமி கும்பிட்டு விட்டுத் திரும்பி வீடு செல்வதைக் கண்டு கோயிலில் நின்றவர்கள் கூட ஆச்சரியப்பட்டனர்" என்று தான் கண்டதை அண்ணனுக்கு அவள் தெரிவித்தாள்.

"அப்ப நீ நினைத்தபடி பிரிந்தனைத் திருமணம் செய்ய நான் சம்மதம் தெரிவிக்கின்றேன். ஆனால், விட்டுப் பிடி அப்பதான் அவனின் நல்ல குணம் உனக்குத் தெரியும். இனி ஆர்த்தியிடம் ரெலிபோனைக் கொடு" ஆர்த்தியிடம் ரெலிபோனைக் கொடுத்து விட்டு அபர்ணா யன்னலின் ஊடாகப் பிரிந்தனின் வீட்டை நோக்கினாள். அங்கு பிரிந்தன் அவளின் முகத்தைப் பார்த்த வண்ணமிருந்தான். பிரிந்தனின் பார்வை அபர்ணாவை என்னவோ செய்வது போல இருந்தது.

இவ்வாறு நாள்கள் நகர்ந்து கொண்டிருந்த வேளையில் அபர்ணாவைப் பெண்கேட்டுச் சில குடும்பத்தினர் வந்திருந்தனர். அந்தச் செய்தியைக் கேட்ட பிரிந்தன் உள்ளம் பதறியவாறு தனது தந்தையிடம் சென்று "அப்பா எங்களுடைய வீட்டிற்கு முன்னால் குடியிருக்கும் அபர்ணாவைத் திருமணம் செய்ய விருப்பமாக இருக்கின்றது" என்று கூறினான். மகனின் நடத்தையில் மாற்றத்தைக் கண்ட சிவநாதன், நல்லநாள்ப் பார்த்து அபர்ணாவைப் பெண் கேட்டுத் தனது குடும்பத்தினருடன் சென்றார். அபர்ணா வீட்டினரும் பிரிந்தனை மாப்பிளையாக ஏற்க விருப்பம் தெரிவித்தனர்.

தங்கையின் திருமணத்துக்காகக் கொழும்பில் இருந்து வந்த ஆகாஸ், பிரிந்தனிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்தினான். "எங்கள் குடும்பத்தினர் இந்த ஊருக்குக் குடியிருக்க வருவதற்கு முக்கிய காரணம் உங்களை என் தங்கைக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகத் தான்" என்று கூறினான். ஆகாஸ் கூறியதைக் கேட்ட பிரிந்தன் வியப்பாக ஆகாஸை கேள்வியாக நோக்கினான்.

பிரிந்தனின் முகத்தில் காணப்பட்ட சந்தேகத்தைக் கண்டு முகம் சிரித்தவனான ஆகாஸ் " நான் உங்களுக்குக் கூறுவது குழப்பமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயம் அடைந்தேன். அப்பொழுது எனக்கு இரத்தம் அதிகம் வெளியேறியதால் அவசரமாக இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆனால், எனது குறூப் இரத்தம் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக உங்களுடைய இரத்தம் பொருந்தியது. அதனால் உயிர் பிழைத்தேன்" என்று கூறி முடித்தான். அப்பொழுதுதான் பிரிந்தனுக்குத் தனது கம்பனியின் ஆண்டு நிறைவு விழாவின்பொழுது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கியது ஞாபகத்துக்கு வந்தது.

பிரிந்தன் நான் உயிர் பிழைக்க உதவிய உங்களைப் பற்றி அறிந்து என் தங்கையை இந்த ஊருக்கு அனுப்பி உங்களைத் திருத்தித் அவருடையவனாக்க வேண்டும் என்று விரும்பினேன். இதனால் எங்கள் குடும்பம் உங்கள் வீட்டிற்கு எதிரே குடியிருக்க வந்தது" என்று கூறி முடித்தான். ஆகாஸ் கூறியதைக் கேட்ட பிரிந்தனுக்குத் தனது செயலில் அறிந்தும் அறியாமலும்செய்த நன்மையை நினைத்து வியப்பில் ஆழ்ந்தான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 15

# கிரமமான மருந்துப் பாவனை (Drug Compliance)

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மருந்துகளைப் பாவிப்பது கடினமான விடயம் என்றால் பிழையாகாது. அது எவ்வளவு கடினமானதோ அவ்வளவு முக்கியமானதும்கூட.

சலரோகம், உயர்குருதி அமுக்கம், வலிப்பு, நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களுக்கு நீண்ட காலம் மருந்து பாவிக்க வேண்டி இருக்கின்றது. ஆனால் கணிசமான எண்ணிக்கையான நோயாளிகள் மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பதில் கவனக் குறைவாக இருக்கின்றனர். இதற்கான முக்கிய காரணங்களாவன.

1. மருந்துகளின் அவசியத்தை உணராமை.

2.நோயாளியின் குடும்ப உறுப்பினர்கள் கவனயீனமாக இருத்தல்.

3.மருந்து பாவிக்கும் முறை பற்றியும் அதன் அவ்சியம் பற்றி உரிய விளக்கம் அளிக்கப்படாமை.

4. வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வேண்டும் பொழுது அதிக செலவாகின்றமை.

5. பெண்களுக்கு குடும்பச்சுமை அதிகமாக இருத்தல்.

மருந்துகளை ஒழுங்காகப் பாவிக்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூர மானவையாகும். உதாரணமாக சலரோகத்துக்குப் பாவிக்க வேண்டிய மருந்து ஒன்றைப் பாவிக்காமல் விடுவதால் சலரோகம் கட்டுப்பாட்டுக்கு வருவதில்லை. நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வைத்தியர் மருந்துகளின் அளவைக் கூட்ட நேரிடுகிறது. இதனால் நோய் குணமடையாமல் விடுவதோடு மருந்துகளின் பக்கவிளைவுகளினால் நோயாளி பாதிக்கப்படுகின்றார்.

இதைத் தடுப்பதானது நம் அனைவரினதும் கரங்களிலேயே உள்ளது. இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்.

* பாவிக்கும் மருந்துகளின் அவசியத்தையும் அவை ஒவ்வொன்றையும் என்ன அளவுகளில் பாவிக்க வேண்டும் என்பதையும் வைத்தியரிடம் இருந்து அறிந்து கொள்ளவேண்டும்.
* நோயாளி தானாக இவற்றைச் செய்ய முடியாதவராயின் நோயாளியின் குடும்பத்தினரோ அல்லது உறவினரோ இவற்றைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவகையான மருந்துகளையும் தனித் தனியே சிறிய போத்தல்களில் போட்டு போத்தலில் மருந்தின் பெயரையும் பாவிக்கும் அளவையும் குறித்து வைக்கவேண்டும். அடுத்த தடவை மருந்தாளிடம் போத்தல்களைக் கொடுத்து மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

* வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில்வேண்டும்போது விலை அதிகமாக இருப்பின் ஒரே தடவையில் நீண்ட காலத்துக்கு மருந்துகளை வேண்டாமல் குறுகிய இடைவெளியில் மருந்துகளை வேண்டலாம்.
* ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்துக்கு மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.
* குறித்த ஒரு நோய்க்குப் பல இடங்களில் வைத்தியம் செய்வதைத் தவிர்த்தல் அவசியமானது.

மருந்துகளினால் பக்கவிளைவுகள் உருவாகுமிடத்து தன்னிச்சையாக மருந்துகளை பாவிக்காமல் விடு வதைவிட வைத்தியருடன் கலந்தாலோசித்து வேறு மாற்று மருந்துகளைப் பாவிக்கலாம்.

மேற்சொன்னவிடயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் மருந்துகள் ஒழுங்கீனமாகப் பாவிப்பதைத் தவிர்க்கலாம். ஒரு நோயாளி மருந்துகளை ஒழுங் காகப் பாவிப்பது நோயாளி, வைத்தியர், மருந்தாளர், தாதியர் முக்கியமாக குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரிலும் தங்கியுள்ளது.

மருந்துகளை ஒழுங்காகப் பாவித்து நோயற்ற வாழ்வை அனுபவிப்போம்.

''மருந்து கால் மதிமுக்கால்''

Dr.S.Varunprasanth
விடுதி வைத்தியர்
யாழ்.போதனா வைத்தியசாலை

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிர்சுரமாகும்.*

# எடை காத்து நலத்தைப் பேணுங்கள்

''மிகினும் குறையினும் நோய் செய்யும்'' உடலில் உள்ள மூலப் பொருள்களில் எப்பொருள் மிகுந்தாலும் அல்லது எப்பொருள் குறைந்தாலும் உடலுக்கு ஊறு ஏற்படும் என்பதனை வள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார்.

எனவே உடலுக்குத் தேவையான சத்தான சரிவிகிதமான உணவுகளை எந்த அளவுக்கு உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியமோ அந்த அளவுக்கு வேளா வேளைக்கு சரியான இடைவெளியில் சாப்பிடுதல் முக்கியம்.

உங்களை உயிர்ப்புடையவராக் வைத்திருப்பதற்கும் உங்களின் வாழ்க்கையை நிர்ணயிப்பதற்கும், உங்களுக்கும் இவ்வுலகுக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கும் உணவு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

பாரம்பரிய உணவுப்பழக்கங்கள் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும், அவரவர் தரத்துக்கும் உடன் திறனுக்கும், வேலை முறைகளுக்கும் ஏற்ப ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக உணவு உள் எடுக்கப்படுகின்ற அளவு மாறுபடும். ஆகவே உணவின் அளவுப் பிரமாண ஆலோசனைகள் ஒருவருக்கு சொல்லுவது மற்றவருக்கு பொருந்தாது. ஒருவருக்கு ஏற்படுகின்ற நோய்கள் அவருடைய உணவுப்பழக்கம், வாழ்க்கைப் பழக்கம், மனப்பழக்கம் போன்றவற்றிலும் தங்கியுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது.

1996 ஆம் ஆண்டு அமெரிக்க மருத்துவக் கழக அறிக்கையின்படி ஒருவரின் அதிகரித்த உடல் நிறையில் 5-10 % வீதம் குறையும்போதே அவருக்கு மாரடைப்பு வருவதற்கான அடிப்படை காரணிகளான குருதியில் குளுக்கோசின் அளவு, கொழுப்புகளின் அளவு மற்றும் குருதிஅமுக்கம்போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்படுவதாக அறிவித்துள்ளது. ஒருவர் பருமன் ஆவதற்குப் பல காரணங்கள் இருப்பினும் முக்கியமானவை.

1. தாய் தந்தையர் பருமன் ஆனவர்களாக இருப்பின் அவர்களின் நிறமூர்த்தத்தின் பரம்பரை அலகு.

2. உணவில் இருந்து பெறும் நாளாந்த கலோரியின் அளவு அதிகமாக இருப்பின், மேலதிகமானவை கொழுப்பாக சேமிக்கப்படல்.

3. உடல் உழைப்புக் குறைவு

4. உடல் எடை அதிகரிக்க அதிகரிக்க உடல் உழைப்பில் ஈடுபடமுடியாத நிலை ஏற்படும். அதிகரித்த உடல் நிறை அதனால் ஏற்படும் களைப்பு போன்றவற்றால் ஒருவரின் உடல் உழைப்பு மட்டுப்படுத்தப்பட்டு. ஒருவரின் எடை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

5. ஒருவரின் உடல் அமைப்பில் கூடுதலான கொழுப்புக் கலங்கள் காணப்படல். இதனால் கூடுதல் கொழுப்பு சேமிப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஒருவர் சிறுவயதில் இருந்து அதிக கொழுப்பு உணவு உண்டு வருபவராயின் எதிர்காலத்தில் அவருடைய கொழுப்புக் கலங்கள் அதீத பருமன் அடைவதாக அறியப்பட்டுள்ளது.

6. இளமையில் இருந்த உணவுப்பழக்க வழக்கங்களை வயது சென்றபின்பும் அதாவது நடுத்தர வயது, முதுமை நிலையிலும் மாற்றாமல் இருப்பது.

7. உடலில் சுரக்கப்படும் ஓமோன்களின், சுரப்பிகளின் அளவு மாறுபாடு போன்றவை ஒருவர் பருமன் ஆவதற்குக் காரணிகளாக இருக்கின்றன.

ஒருவரின் எடையை அவரின் வயது, உயரம், எலும்புகளின் அமைப்பு, அவரில் சேகரிக்கப்பட்டுள்ள கொழுப்பு, தசைப் பகுதிகளின் அமைப்பு என்பன தீர்மானிக்கின்றன. எனினும் ஒருவரின் உடல் எடை மேலும் மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கு பொதுவாகக் கடைப்பிடிக்க வேண்டியவை உணவு முறை மாற்றம், உடற்பயிற்சி, வாழ்க்கை முறை மாற்றம் போன்றவையாகும்.

ச.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை

# விலகிச் செல்வோம் விரைந்து செல்வோம்

**யாழ். போதனா வைத்தியசாலையின்
பார்வையாளர் நேரம்.....
புயல்போலப் பார்வையாளர்கள்
புகுந்துவிடுகிறார்கள்......**

பொத்தி வைத்திருக்கின்ற அவர்களின் பொறுமையெல்லாம் வைத்தியசாலை வளைவுகளில் ஏனோ பீறிட்டுப் பாய்கின்றது.

எதைப் பற்றிக் கூறுகிறோம் என்பது இன்னும் தெளிவாகவில்லையா? ஆம், நமது மக்கள் விதிமுறைகளையும் நடைமுறைகளையும் வாசிப்பதுடன் விட்டு விடுகிறார்கள். பலர் வாசிக்காமலேயே போய்விடுகிறார்கள்.

ஆஸ்பத்திரி வளாகத்தில் பாதையெங்கும் 'வலது பக்கமாகப் போகவும்' எனத் தெளிவாக எழுதி ஒட்டப்பட்டுள்ளது. இருந்தும் மக்கள் தேர்த்திருவிழாவில் சுவாமி தரிசனம் செய்பவர்கள் போல முண்டியடித்து முன்னேறுகிறார்கள். சிலர் பல நாள் சந்திக்காத தம் உறவினரை நட்டநடு வழியில் குசலம் விசாரிக்கிறார்கள்.

யாரும் எதையும் தெரிந்து கொண்டே பிழையாகச் செய்வதில்லை. எனவே எமது மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டியது யாதெனில்,

1.திருத்தவேலை காரணமாக வைத்தியசாலை யின் விடுதிகளுக்குச் செல்வதற்கு ஒரே ஒரு பாதை அதுவும் பல இடங்களில் ஒடுக்கமாக உள்ளது.

2. அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்தும், சத்திர சிகிச்சைக் கூடத்திலிருந்தும் நோயாளிகளை விடுதிக்கு மாற்றும்பொழுது இந்தப் பாதையால் பல இடையூறுகள், தாமதங்கள் ஏற்படுகின்றன.

3.சிற்றூழியர்கள் வேகமாகச் செயற்படமுடியாது மக்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுகிறார்கள். வயதானவர்கள் நீண்டபாதையில் சீராக நடக்க முடியாது தளர்ச்சியடைகிறார்கள். நாம் சில கேள்விகளை எம்மையே கேட்டுக் கொள்வோம்.

1. ஏன் நம்மால் ஒரு சிறிய ஒரு கட்டளையையோ/ வேண்டுகோளையோ கடைப்பிடிக்க முடியாமலிருக்கிறது?

2. [illegible] வேகமாக நடக்கமுடியாதுள்ளது?(நோயாளிகளையும் வயதானவர்களையும் தவிர்த்து)

3. நடக்கும் பொழுது இரு தனி நபர்களிற்கு இடையில் மிகவும் சிறிய இடைவெளியாவது இருக்குமாறு பார்த்துக் கொள்வதில் சிரமம் ஏற்படுகிறதா?

4.ஏன் வேறொருவர் மீது முட்டாமலோ, தள்ளாமலோ நடக்க முடியாதுள்ளது?

கர்ப்பிணிப் பெண்களுக்கும், வயதானவர்களுக்கும் வழிவிட்டுநடப்பதில் சிரமம் ஏற்படுகிறதா?

5. சிறு பிள்ளைகளைப் பார்வையாளர்களாகக் கூட்டி வருவதைத் தவிர்க்க முடியாதா?

இது வைத்தியசாலை வளாகத்தில் மட்டுமல்ல வீதிகளிலும் கடைகளிலும் வேறு ஸ்தாபனங்களிலும் எமது மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

பானு. தில்லையம்பலம்
மருத்துவப் பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்தல் 6 ஒரு கண்ணோட்டம்

**கண்களும் வாசிப்பும்**

வாசித்தல் செயற்பாட்டுக்கு கண்களே பிரதான முதற் கருவியாக அமைந்து செயற்படுகின்றன. கண்களால் பார்த்து மனதால் வாசிப்பதே சிறந்த வாசிப்பு முறையென மேலே கண்டோம். உரத்து வாசித்தல், உதடுகளை அசைத்து வாசித்தல் என்பன சாமர்த்தியமற்ற வாசிப்பு முறைமை என்பதை இங்கே ஞாபகத்தில் கொள்ளுங்கள். எனவே கண்களே வாசிப்பின் பிரதான கருவி என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

கண்கள் எவ்வாறு வாசிப்பின் போது தொழிற்படுகின்றன? எவ்வாறு வாசிப்பினை ஊக்குவித்து உதுவுகின்றன? என்பவற்றை அறிந்து கொள்ளவேண்டும். வாசிப்பதற்காக நூலை எடுத்தவுடன் கண்கள் தொழிற்பட ஆரம்பித்துவிடும். கண்கள் பார்த்த பின்னர்தான் விடயங்கள் மூளைக்கு அனுப்பப்படும். எனவே வாசிப்பின் பிரதான முதற்கருவி கண்கள் என்பதால் வாசிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் அவற்றை ஆயத்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும். பின் இரவுவரை நித்திரை விழித்து வேறு வேலைகள் பார்த்துவிட்டு அல்லது நீண்ட நேரத்தினைத் தொலைக்காட்சி அல்லது கணினியுடன் செலவழித்துவிட்டு வாசிக்க ஆரம்பித்தால் அந்த வாசிப்புக்குக் கண்கள் ஒத்துழைப்புத் தர மறுக்கலாம். இவற்றைத் தவிர்த்து அல்லது மட்டுப்படுத்தி கண்களை வாசிப்பதற்கேற்ற ஆயத்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

கண்களுக்குத் தினசரி இலகுவான பயிற்சியளித்தல் வாசிப்பினை இலகுவாக்கும் வழிமுறைகளில் மேலும் ஒன்றாகும். கண்களை மேலும் கீழும் அசைத்தல் பக்கவாட்டுக்கு மாறி மாறி ஓடவிடல் ஆகியவற்றை சில நிமிட நேரங்கள் செய்து கொள்வது நல்ல இலகு பயிற்சிகளாக அமையும். இவை கண்களின் செயற்பாட்டுக்கு உதவி வாசிப்பினைச் சுமையின்றிச் சுவையாக்க உதவும்.

**மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் மேம்பட வேண்டும்**

**கண்களின் அசைவு**

நாம் வாசிக்கும்போது இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் நோக்கி நகர்ந்து செல்கின்றன. அவ்வாறு நகரும்போது எமது கண்களும் அசைந்து செல்கின்றனவா? கண்கள் இமைகளின் அசைவை இங்கு கருதவில்லை. கண்கள் வாசிக்கும் திசைநோக்கி அசைகின்றனவா? அல்லது ஒரே பார்வையில் கண்களை அசைக்காது நூல் வரிகளை வாசித்துக் கொள்கின்றோமா? இங்கு பார்வை என்ற அம்சத்தினை மையப்படுத்தி சிந்தித்துப் பாருங்கள். விடை, 'வாசிக்கும்போது எமது கண்கள் விரைவாக அசைந்து கொள்கின்றன'' என்பது உண்மையே. புவியின் சுழற்சியையும் அதன் அசைவையும் பூமியில் வாழும் எம்மால் எவ்வாறு உணர்ந்து கொள்ளமுடியாதுள்ளதோ அதேபோன்று வாசித்தல் செயற்பாடு நடைபெறும்போது எங்கள் கண்கள் அசைந்து கொள்வதையும் எம்மால் உணர்ந்து கொள்ள முடியாதுள்ளது. வாசிப்பின்போது அதில் கூடிய கவனமெடுத்துக் கொள்வதால் கண் அசைவினை அவதானிக்க முடியாதவர்களாகவுள்ளோம். ஆனால் வாசிப்பின்போது கண்கள் விரைவாக அசைவுக்குள்ளாகின்றன என்பது ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளன.

கண்களின் அந்த அசைவினை "சக்காடஸ்" என்று பெயரிட்டுள்ளனர். அது மிக வேகமானது. கண்களால் பார்த்து அறிந்தவை 'சக்காடஸ்' இயக்கத்தின் மூலம் உடனடியாக மூளைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

நூலில் ஒருவரியினை வாசிக்கும்போது கண்கள் மிக இலகுவாக அசைவுக்குள்ளாகின்றன. இரண்டு கண்களும் ஒத்தியங்கும் இயல்பும் கொண்டன. ஒரு கண் ஒருதிசையிலும் மறுகண் எதிர்த் திசையிலும் இயங்குவதில்லை. இவற்றைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பினால் பின்வரும் இரண்டு வழிகளைப் பின்பற்றலாம்.

**வழி ஒன்று :** உங்கள் நண்பர் ஒருவரை வாசிக்க வைத்து நீங்கள் அவரருகில் இருந்து அவர் கண்களை உன்னிப்பாக அவதானித்து அசைவினை அறிந்து கொள்ளுங்கள். இது தவறின் இரண்டாவது வழியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**வழி இரண்டு:** நண்பரை வாசிக்க வைத்து அவரருகில் அமர்ந்து இருந்து ஒரு சிறிய கைக் கண்ணாடி மூலம் அவர் கண்களை அவதானித்துப் பாருங்கள். தெளிவாக அவர் கண்களின் அசைவினைக் கண்டுகொள்ள முடியும்.

சிலவேளைகளில் இவையிரண்டுமே கண் அசைவினைக் கண்டு கொள்வதில் கஷ்டமானதாகவிருக்கலாம். ஏனெனில் அந்த அசைவு நுணுக்கமானதும் வேகமானதுமாகும். அத்துடன் அந்த வேகம் வரிக்கு வரி வேறுபடக்கூடியது. வாசிப்புக்குள்ளாகும் விடயத்தின் இயல்பு, வசனங்களின் அளவு மற்றும் எழுத்துக்களின் அசைவு வாசிக்கும் திறன் என்பவற்றைப் பொறுத்தே அது மாற்ற மடையக்கூடியது.

கண்களின் அசைவில் மற்றுமோர் இயல்பினை இங்கு தெரிந்து கொள்ளல் வேண்டும். அது கண்களின் பின்நோக்கிய அசைவு அல்லது பின்நோக்கியே நகர்வு என்பதாகும். நாம் ஒவ்வொருவரும் வாசிக்கும்போது எமது கண்கள் அடிக்கடி பின்நோக்கி அசையும் செயற்பாட்டுடன் உள்ளன. ஒரு வரி வாசித்து முடித்து மறுவரிக்குச் செல்லும்போது அல்லது வாசித்த வரியில் உள்ளவற்றில் சிலவற்றை விளங்கிக் கொள்ள முடியாதிருக்கும்போது கண்கள் பின்நோக்கி அசைந்து கொள்கின்றன. மந்தநிலை வாசிப்பாளர்கள் மற்றவர்களை விட அதிக தடவைகள் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள்.

வாசிக்கும்போதான இந்தவகைக் கண் அசைவுகள் யாவும் தானியங்கித் தன்மை கொண்டவை. கண்களுக்கு ஓய்வு கொடுத்து ஒரு மாணவர் வாசிக்க ஆரம்பித்தால் அவரால் ஒரு நிமிடத்துக்கு 200-300 சொற்களை இலகுவில் வாசித்துக் கொள்ள முடியும். இந்த அளவினை வாசிப்புப் பயிற்சியைத் தொடரும்போது அதிகரித்துக் கொள்ள வாய்ப்புண்டு என்று கூறுகின்றார்கள்.

எனவே வாசிப்புக்கெனக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அந்த நேரத்தை இறுக்க மாகத் தவறாது கடைப்பிடித்து வாசித்தல் மூலம் அறிவினைப் பெருக்கிக் கல்வியில் வெற்றிப்பாதை நோக்கிச் செல்வோம்.



கலாநிதி **தி.கமலநாதன்,**
முன்னாள் பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

# யுத்தம் செய்

## விமர்சனம்




அப்பாவிகளைப் பலிக்கடா ஆக்கும் கும்பலை ஒரு சாதாரண மனிதன் எப்படி எதிர்த்து யுத்தம் செய்கின்றான் என்பதுதான் இந்தப் படத்தின் கதை. சென்னையில் ஒரு முக்கிய பகுதியில் தொடர்ந்து மனிதக் கைகள், ஓர் அட்டைப் பெட்டியில் போடப்பட்டிருக்க ஏற்கனவே காணாமல்போன தனது தங்கையை கண்டுபிடிக்க முடியாமல் விரக்தியின் உச்சத்திலிருக்கும் ஜே.கே எனும் சி.பி.சி.ஐ.டியினால் சாதாரண மனிதரான சேரனிடம் இந்த கேஸ் கொடுக்கப்படுகிறது.

இந்தக் கேஸைக் கண்டுபிடித்தால் அவரது தங்கையின் கேஸை மீண்டும் விசாரிக்க அனுமதி தருவதாய் சொல்கிறார். சி.பி.சி.ஐ.டி. எஸ்.பி கொஞ்சம் கொஞ்சமாய் கிடைத்த மனிதக் கைகளை வைத்துத் தன் விசாரணையை ஆரம்பிக்க அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தகவல் கிடைக்கிறது.

கொலையாளிகள் யார்? எதற்காகக் கொலை செய்யப்படுகிறார்கள்? கொல்ல செய்யப்படும்ஆள்களின் பின்னணி என்ன என்பது விறுவிறுக்க வைக்கும் இறுதிக்காட்சி. காதல் கதையை எந்த அளவுக்கு அழகியல் ரசனையோடு சொல்ல முடியுமோ அந்தளவுக்கு மென்மையாகச் சொன்னதற்காகவே இயக்குநர் மிஷ்கின் பாராட்டுக்குரியவர் ஆகிறார்.

முக்கிய இடங்களில் மட்டும் பின்னணி இசை. அந்த இசையிலும் காட்சி நகருபவை மனதை லயிக்க வைக்கிறது. அழவும் வைக்கிறது. உயிரோட்டமாக வயலினும் பியானோவும் கலந்து எம்மை படத்துக்குள் தள்ளி விடுகின்றன. மென்மையான கதாநாயகன் என்று பெயர் எடுத்த யதார்த்த நாயகன் இயக்குநர் சேரன் இதுவரையில் நடித்த படங்களில் சிறந்தபடம் இதுவாகும்.

அவர் தானே நடித்து இயக்கிய திரைப்படங்களில் வெளிக்கொணர்ந்த விடயம் என்ன என்று பார்த்தால், தமிழ் சினிமாவின் ரசிகர்களைச் சமாதானப்படுத்த அவர் செய்துகொண்ட சமரசமான ஒரு நடுத்தரவர்க்க அடையாளம்தான் தெரிந்திருந்தது. ஆனால் இதில் சேரன் மட்டுமே ஓய்.ஜி. மகேந்திரனுக்கு வித்தியாசமானறோல் இந்தப் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

சேரனின் உதவியாளராக வரும் தீபாஷாவும் சிறப்பாக நடித்திருக்கிறார்.ஹீரோ இருக்கிறார். ஹீரோயின் இல்லை. கொமடியன் இல்லை. ஆனால் வில்லன்களுக்குப் பஞ்சமில்லை. இதில் யார் நிஜவில்லன்? யார் நிஜமில்லாத வில்லன்? என்பதை படத்தில் முக்கால்பாகம் வரையில் வெளிக்காட்டாமல் இருப்பதுதான் படத்தின் பலலே போஸ்ட்மாட்டம் அறையை இவ்வளவு துல்லியமாக அலசியது இந்தத் தமிழ்ப்படமாகத்தான் இருக்கும்.

கைகள் துண்டாடப்படுவது மிசினில் துளையிடுவது, விதவிதமாகக் கத்திகளைக் காண்பிப்பது என்று அடிவயிற்றில் புளியைக் கரைக்கிறது. ஏ சான்றிதழ் கொடுத்தது சரியானதுதான். அதேசமயம் மனச்சாட்சிப்படி ஏ சான்றிதழை நீக்க சமரசம் செய்து கொள்ளாமல் அதனைப் பெற்றுக்கொண்டு படத்தை வெளியிட்டிருப்பது இயக்குநர் மிஷ்கினையும், தயாரிப்பாளரையும் பாராட்டலாம். சிறிய குழந்தைகள் நிச்சயமாக இந்தப் படத்தினைப் பார்க்கக் கூடாது. மிகவும் பயங்கரமாக இருக்கும். பல காட்சிகள் பெரியவர்களையே பயமுறுத்துகின்றன. ஒய்.ஜி. எம்.மின் மகள் ரோட்டோரமாக அமர்ந்திருக்கும் காட்சி மனைவி நிற்கின்ற காட்சி, கார் அசுர வேகத்தில் வந்து போவது, இறுதிக்காட்சியில் கடத்தப்பட்டவர்களைக் காட்டுவது என்று தொழில் நுட்பத்தில் குறைசொல்ல முடியாத அளவுக்கு பயம் காட்டுதல் தொடர்ந்திருக்கிறது. இரவுக்காட்சிகளில் நிழல் பிடித்தாற்போன்று காட்சியிருப்பதுவும் கமெரா எங்கு திரும்பினாலும் ஆள் நடமாட்டம் அதிகமில்லாத சூழல்களும், இருப்பிடத்தை இப்படியும் காட்டமுடியுமா என்றுயோசிக்க வைக்கும் கோணங்களுமாக புதிய ஒளிப்பதிவாளர் சத்யாவின் பங்களிப்பு இந்தத் திரைப்படத்துக்கு இன்னொரு பலம்.

திருவல்லிக்கேணித் தெருவில் சேரனும் அவனது குழுவினரும் ஒடுகின்ற காட்சியிலும் இன்ஸ்பெக்டரைத் தூக்க வந்த குவாலிஸ் காரை சேரனின் கார் துரத்துகின்ற காட்சிகளிலும் பின்னணி இசையை பிரமாதப்படுத்தியிருக்கிறார் இசையமைப்பாளர் கே.படத்தில் தேவையான காட்சிகளுக்கு மட்டும் இசையினைக் கொடுத்து இருக்கிறார். அதிலும் சோகம் ததும்பும் இசைக் குறியீடுகள் பல இடங்களில் மௌனம்தான்.

எத்தனை எத்தனை கதைகளைச் சொல்லுகிற இந்தத் திரைப்படத்தில் புத்திஜீவிகளில் யார் ஜெயித்தார்கள்? யார் தோற்றார்கள் என்பது விசயமல்ல. ஒரு சாதாரண மனிதன் இவர்களை எதிர்த்து யுத்தம் செய்தான் என்பதுதான் வருங்காலத்துக்குத் தரப்பட்டிருக்கும் செய்தி. அதைத்தான் இந்தத் திரைப் படத்தில் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் மிஷ்கின்

- குமார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னதான் முடிவு? யார்தான் பொறுப்பு?

*உயிருக்கும் விலை உண்டு என்பதைக்*
*கொலையுண்ட போதுதான் புரிந்து*
*கொண்டேன் - இதை*
*இந்தக் கலாசார சீர்கொண்ட*
*யாழ். மண்ணில்......*

ஆண்டு ஒன்று ஆகியும் ஆறுதல் தீரவில்லையே.... சென்ற வருடம் மார்ச் 14ஆம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் கப்பம் கேட்டுக் கடத்திக் கொலை செய்த அப்பாவி மாணவன் தி.கபில்நாத் எம்மை விட்டுச் சென்று இன்றுடன் ஒரு வருடம் கடந்த நிலையில் நாம் ஜடமாக வாழ்கின்ற போதிலும் அவர் உடல் நம்மை விட்டுச் சென்றாலும் அவரது சுட்டிச் செயல்களும் ஞாபகங்களும் என்றுமே அழிக்க முடியாதவாறு ஆத்மார்த்தமாக மனதில் பதிந்து காணப்படுகின்றன.

ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ்.மக்கள் மத்தியில் பத்திரிகை பார்ப்பதற்கோ அல்லது செய்தி கேட்பதற்கோ நேரம் போதாமல் இருக்கின்றது. காது வழியாக வந்த செய்தி காது வழியாகவே போய் விடுகின்றது. பின்னர் எவ்வாறு ஒற்றுமையாகச் செயற்படமுடியும்? எப்படி நீதி கிடைக்கும்? சத்தியம் எப்போதோ செத்துப் போய்விட்டது. தர்மம் நிலைகுலைந்து விட்டது.

அன்றைய தினம் 14.03.2010 அன்று சாவகச்சேரி மக்களையே கலங்கவைத்த அந்தச் சம்பவம்.... மூன்று கோடிக்கு எத்தனை பூச்சியம் இருக்கின்றது எனத் தெரியாத அந்த அரசியல் செல்வாக்குடையோரின் அட்டூழியச் செயலினால் ஓர் அப்பாவியான நஞ்சறியா பிஞ்சின் உயிரைப் போக்கிய சம்பவம் நெஞ்சை விட்டகலாத காவியமாகும்.

*''நட்பென்று பழகி...*
*அவன் மூச்சில் வாழ்ந்து...*
*அவன் மூச்சையே மூட வைத்த*
*அந்த மூடர்கள்*
*பணத்துக்காக உயிரை விலைபேசி*
*நட்பைக் கொன்று புதைத்த*
*அந்த ஜடங்கள்....''*

இவ்வுலகில் நாய் செத்தால் கூட ஆழக் கிடங்கு தோண்டி வெள்ளைத் துணி விரித்து வால் மடியாமல் தலை மடியாமல் புதைக்கும் எங்கள் இனமரபில் கொன்ற பின்னும் இவன் மூன்றடிக் கிடங்கில் முடக்கி வைத்தபடி இருந்தானே..... ஆ! என்ன கொடுமை! மனிதம் மரணித்து விட்டதோ, இவ்வுலகில் நாம் எங்கே செல்கின்றோம். இந்த வக்கிரம் எங்கிருந்து எமக்குள் புகுந்தது. இதற்கு மீள்ச்சியே இல்லையா? ஏன் முடியாது. நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே திருத்திக் கொண்டால் அது முடியும்.

நீங்கள் நினைக்கலாம் இந்தச் சம்பவம் நடந்து தற்போது ஒரு வருடம் கடந்துவிட்டதுதானே, அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் எத்தனை கடத்தல்கள், கொலைகள், கற்பழிப்புகள், பாலியல் துஷ்பிரயோகம் இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். இதற்கெல்லாம் என்ன காரணம்? அன்றைய தினம் அந்த அப்பாவி மாணவன் கபில்நாத்தின் படுகொலைக்குக் காரணமாக இருந்த கொலைகாரர்கள், சூத்திரதாரிகள், அரசியல் பிரமுகர்கள் இவர்களுக்கெல்லாம் தண்டனை கிடைத்திருந்தால் ஏன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நிகழப்போகின்றன?

அன்றைய நாள்களில் தேர்தல் பிரசாரத்துக்காக எப்படியோ எல்லாம் குரல் கொடுத்தார்கள்.

''இன்று அப்பாவி மாணவன் கபில்நாத்..... நாளை யாரோ? அரசியல் பலம் கொண்டவர் பின்னணியில் உள்ளாரா?'' இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர். ''கபில்நாத் படுகொலை சம்பந்தப்பட்டவர் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும்'' இவ்வாறு கூறினார் ஆனந்தசங்கரி. ''மாணவன் படுகொலை வன்முறைக் கலாசாரத்தை நோக்கி யாழ்.குடாநாட்டைத் திசை திருப்பும் செயலாகும்''

இவ்வாறெல்லாம் அன்றைய நாள்களில் குரல் கொடுத்தார்கள் அரசியல்வாதிகள்.

இவ்வாறு அன் றைக்கு நீதியை எதிர்க்க முற்பட்டவர்கள் எதற்காக இன்றைய தினங்களில் பின்வாங்குகின்றனர்?.....

இன்றுடன் ஒருவருடம் ஆகியும் இன்னமும் முக்கிய கொலையாளியைப் பிடிக்கவில்லை. கொலைச் சந்தேகநபரும் முக்கிய சாட்சியும் தற்போது பிணை என்ற பேரின் போர்வையில் உலா வருகின்றனர்.

இவ்வாறான கொடிய சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் இலங்கை பூராகவும் நடைபெறுகின்றன. ஓர் அநீதியான செயலுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால் எதற்கு இலங்கையில் நீதிமன்றங்களும் காவல் நிலையங்களும். இழுத்து மூடவேண்டியதுதானே? எதற்கு வழக்கு என்ற பெயரில் ஏற்கனவே துயரில் ஆழ்ந்திருக்கும் மக்களை அலைய விடுகின்றனர்? நீதிபதி வராவிட்டால் வழக்குத் தள்ளுபடி, கொலை சம்பந்தப்பட்ட விசேட பிரமுகர் யாராவது வராவிட்டால் வழக்குத் தள்ளுபடி இவ்வாறாக எத்தனை தள்ளுபடிகள்தான் தொடர்கின்றன.

**- றியாஸ் -**

நீதிக்காகப் போராடும் ஒருசில நல்லுள்ளம் கொண்ட நீதிபதிகளும், ஒரு சில பத்திரிகைகளும் இருக்கத்தான் செய்கின்றன. நியாயத்துக்காகப் போராடும் வேளையில் ஆயுததாரிகளின் கொலை அச்சுறுத்தல் காரணமாக அவர்களை இடம்மாற்றம் செய்கின்றனர். அல்லது பத்திரிகை நிறுவனங்களை அடித்துத் துவம்சம் செய்கின்றனர்.

தற்போதுதான் இலங்கையில் புலிகள் இல்லையே.... முன்னைய காலங்களில் இலங்கையில் எந்தக் கொடூரச் சம்பவங்கள் நடைபெற்றாலும் ஆயுததாரிகள் என விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டினர். தற்போது தான் பயங்கரவாதத்தை அழித்து நாடு மீள் சுதந்திரம் பெற்று விட்டது எனக் கூறுகின்றார்களே.

அவ்வாறு இருக்க, தற்போது எந்தக் கொலைச் சம்பவங்களும் ஆயுததாரிகளால்தானே செய்யப்படுகின்றன. அப்படியென்றால் யார் தான் ஆயுததாரிகள்? நான் முன்னர் குறிப்பிட்டது போல் மக்கள் சிந்திப்பதற்கு நேரமில்லை. ஒற்றுமையாகச் செயற்படத் தயங்குகின்றனர்? அப்படியென்றால் யாழில் நடைபெறும் சம்பவங்களுக்கு என்னதான் முடிவு? யார்தான் பொறுப்பு?

*''போர்க் களத்திலே நீதி சொன்ன*
*கண்ணன் எங்கே.....*
*நட்பென்று பேசி மந்தைக்குள் புகுந்து விட்ட*
*குள்ளநரிகளைப் பார்த்த பின்னுமா....*
*யேசு தோன்றவில்லை.......???*
*அல்லாவே உன் கண்கள் எங்கே....???*
*புத்தரே நீ பெற்ற ஞானம்*
*ஒரு துளியாவது கொடுத்திருக்கலாமே......?*

# கடல்கோளும் மனித நேயமும்

அகிலத்தின் இயக்கம் ஓம் என்ற இறை அதிர்வில் உள்ளது என ஓம் என்ற பிரணவ மந்திரம், கூறுகின்றது. நடராஜ சுவாமிகளது சிவ நடனமும் நாதமே அகிலத்தின் இயக்கம் என்பதை படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என ஐந் தொழில்களாக சிவ தத்துவம் எமக்கு உணர்த்துகின்றன.

அகிலத்தின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள் எமது பூமியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. இதனை எம்முன்னோர்கள் சிவதத்துவத்தின் மூலம் விளங்கினர். உலகில் ஒன்றுமே நிலையில்லாதது என்பது மெய்ப்பொருளே. ஆனால் நாம் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியுடன் மெய்ஞானத்தை விடுத்து எமது வேட்கைகளைத் தீர்க்கும் முயற்சிகளிலேயே ஈடுபட்டு வருகின்றோம்.

இந்திய வானியல் சாஸ்திரங்கள் கடல்கோள் எவ்வாறு வானில் உள்ள கிரகங்களின் அசைவிற்கு ஏற்ப ஏற்படுகின்றன என்பதனைக் கணித்து உள்ளன. வானில் உள்ள கோள்கள் பூமிக்கு நெருக்கமாக வரும் சந்தர்ப்பங்களில், புவியோட்டின் உள்ளே உள்ள கொதிநிலை உலோகங்களில் மின்காந்த சக்தியினால் கருப்பிளவு (Atomic fission) ஏற்பட்டு அச்சக்தியானது புவியோட்டின் நலி வான பகுதியின் ஊடாக வெளித்தள்ளப்பட புவியின் மேற்பரப்பில் அது பூகம்பமாகவோ, சுனாமியாகவோ, எரிமலையாகவோ மாறுகின்றது. இவற்றினை எதிர்கால விஞ்ஞானம் துல்லியமாகக் கணித்துக்கூறும்.

2004, 2011ஆம் ஆண்டு கடல்கோள்கள் ஈழத்தமிழர்ளுக்கும் ஜப்பானியர்களுக்கும் சில மனித நேயத் தொடர்புகளை வலியுறுத்துகின்றன. ஜப்பானியர்களுக்கும் தமிழர்களுக்கும் மொழியியல், வாழ்வியலில் பல ஒற்றுமைகள் உள்ளதெனப் பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஜப்பானிய மக்கள் தம்மீது அணுக்குண்டு போட்ட அமெரிக்காவை மன்னித்து எவ்வாறு தமது பொருளாதார வளத்தையும் உலகில் தமது இருப்பையும் கடின உழைப்பினால் உறுதிப்படுத்தினார்களோ அவ்வாறே ஈழத் தமிழரும் தம்மினத்தை அழித்த இலங்கை அரசை மன் னித்து தனது எதிர்கால இருப்புக்காக கடின உழைப்பில் ஈடுபடுகின்றனர்.

தற்போது ஜப்பானிய மக்கள் எதிர்கொண்ட அழிவுகளை விடப் பல மடங்கு அழிவுகளை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் கடல் கோளாலும் யுத்தத்தினாலும் எதிர்கொண்டனர். ஆனால் அதற்கு இன்று வரை நீதியான புனர்வாழ்வோ சமூக மீள்கட்டமைப்போ ஏற்படுத்தப்படவில்லை. இதனை வடமராட்சி கிழக்கு தொடக்கம் முல்லைத்தீவு வரை உள்ள பகுதிகளை பார்வையிட்டாலே புரிந்து கொள்ளலாம்.

ஆனால் இவற்றை ஜப்பானிய அரசு நன்கு அறிந்தும் இலங்கை அரசிடம் இருந்து தனது அணு உலைகளுக்குத் தேவையான யுரேனியம், கனிமம் உள்ள இல்மனைட்டுகளைக் கப்பல் கப்பலாக எடுப்பதற்காக கப்பல் கப்பலாக தமிழ் மக்கள் காயமடைந்தபோதும் மௌனமாக இருந்தது.

இலங்கையில் கடல்கோளால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படுவதையோ யுத்தத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்கு மனிதநேய உதவியும் நீதியும் கிடைப்பதையோ தடுப்பதில் இலங்கை அரசுடன் துணை நின்றது.

ஆனால் தமிழ் மக்களின் ஆத்மாக்களின் அதிர்வு (பொதுவாக ஒவ்வொரு மனித ஆத்மாவும் $40H_z$ அதிர்வில் செயற்படுவதாகக் கருதப்படுகின்றது) இறை அதிர்வாக மாற்றப்பட்டே இன்று ஜப்பானின் அணு உலைகள் சிதைந்து கிடக்கின்றன. 'அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்' என்பதனை தமிழ் மக்கள் சமகாலத்தில் காண் கின்றனர்.

இந்த நிலையில் ஜப்பானில் கடல் கோளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதநேயப் புனர்வாழ்வு அளிக்க முனையும் சர்வதேசம் இலங்கைத் தமிழ்மக்களுக்கு முற்றுப்பெறாத மனிதநேயப் பணியினை ஆற்றவேண்டிய கடமை உள்ளது. இலங்கையில் தமிழ்மக்களுக்கு உரிய மனிதநேயப் பணிகளில் முதன்மையானது தமிழ்மக்களுக்கென்ற அரசியல் அதிகாரங்களை ஏனைய சக்திகள் சுரண்டாது வழங்குவதாகும்.

**- டாக்டர் சி. யமுனாநந்தா.**

# ஐயந்தெளிதல்

''தவறான கற்றலுக்கான வழிகாட்டல்'' எனும் தலைப்பில் ந.பரமேஸ்வரன் 16.03.2011 புதன் கிழமை அன்று உதயன் பத்திரிகையின் நடுப்பக்கத்தில் எழுதியிருந்த கட்டுரை வரவேற்கத்தக்கது. கட்டுரையின் குறித்த இடத்தில் கட்டுரை ஆசிரியர் இவ்வாறு வினவியுள்ளார்.

''பக்கம் 101 இல் Is it a moon - அது ஒரு சந்திரனா? என்று உள்ளது. அப்படியானால் சந்திரன்கள் பல உள்ளனவா என்று ஒரு குழந்தை கேட்டால் சந்திரகுமார்தான் பதிலளிக்க வேண்டும்''

இதற்குரிய விளக்கத்தை நூலாசிரியர் சார்பாகவோ கட்டுரையாசிரியருக்கு எதிராகவோ அன்றி ஓர் அறிவியல்சார் விளக்கமாகத் தருகிறேன். சந்திரன்கள் பல உள்ளனவா? என்ற வினாவுக்கு ''ஆம்'' என்பதே பதில்.

moon என்றால் சந்திரன். சந்திரன் என்பது ஒரு கிரகத்தைச் சுற்றிவரும் உபகோள் என்பதே விளக்கம். இதனை ஆங்கில அகராதிகளையும் விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான விளக்கங்களையும் துணை கொண்டு இச்சாதாரண சந்தேகத்தை தெளிவுபடுத்தலாம்.

பொதுவாக சந்திரன் என்று பலரும் கருத்திற்கொள்வது பூமியினுடைய உபகோளைத்தான், ஆனால் சந்திரன் என்பது ஒரு கிரகத்தின் உபகோளையே குறிக்கும்.

உதாரணமாக-

'Universe Today Rssfeeds' என்பதை google இல் சென்று தேடுகையில் ஒவ்வொரு கிரகத்திற்குமுரிய சந்திரன்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| Mecury | - | 0 |
| Venus | - | 0 |
| Earth | - | 1 |
| mars | - | 2 |
| Jupiter | - | 63 |
| Saturn | - | 60 |
| Uranus | - | 27 |
| Neptune | - | 18 |

That totals 166 moons in the solar System எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை விட புளூட்டோவுக்கு 3 சந்திரன்கள் உள்ளன. மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைகள் வளர்ந்து வரும் ஆராய்ச்சிகள் மூலமாக மாறுபடலாம். ஆனால் சந்திரன்கள் பல உள்ளன என்பதே இதனூடாகத் தெளிவுபடுத்தப்படுகிறது. இதைவிட விஞ்ஞான பாடப் புத்தகங்களில் விண்வெளி தொடர்பான பாடப் பகுதியிலும் விளங்கிக்கொள்ளலாம்.

க.பிரதீஸ்வரன், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி மோனிக்கம்மா பிலிப்பையா



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மோனிக்கம்மா பிலிப்பையா (ராணி) (15.04.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை- ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிலோமினா, மரியானந்தராசா, சிங்கராசா மற்றும் தார்சியஸ் நவரத்தினம், நீற்றாஜெயமணி நீக்கிலாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிலிப்பையாவின் அன்பு மனைவியும் டொறின் சங்கீதா (லண்டன்), யூஜீன் நிவேதா (கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), எட்வின் நிகேதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சுகந்த ரூபனின் (லண்டன்) அன்பு மாமியும் ரெமோசன் (லண்டன்), ரொஸ்னி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.04.2011) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் வைத்துத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடகத்துக்காக மிருசுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மிருசுவில்.** தகவல்:
**0778013986.** (3213) (38-20-25) கணவர்- வி.பிலிப்பையா.


# விபத்தில் இருவர் காயம்

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை விபத்துக்குள்ளாகி இருவர் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

பாலாவிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சறுக்கி எஸ்.பார்த்தீபன் (வயது -16) எனும் மாணவன் படுகாயம் அடைந்தும், மீசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வேலுப்பிள்ளை இராசதுரை (வயது- 62) என்பவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (த-207)

# 41ஆம் நாளில் நீங்கா நினைவுகளுடன்

இன்ப வரவாய் 18 . 08 . 1952



துன்பப் பிரிவாய் 08 . 03 . 2011

## அமரர் லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

அன்புள்ள அப்பா!
ஒரு நொடியில் எங்கே ஓடி மறைந்தீர்கள்!
உங்கள் எல்லையற்ற பாசத்தில்
சிறகுகளால் அணைத்திட்ட பாதுகாப்பில் இன்னல் என்ற ஒன்று
இன்றுவரை எம்மை அணுகவில்லையே அப்பா!
ஏனென்றால் நீங்கள்தான் பாதுகாப்பு அரணாக நின்று
வருகின்ற துன்பத்தைப் பாதிவழியில் துரத்தி விட்டீர்களே!
ஆனால் இன்று...
உங்கள் இழப்பு என்ற இடி தந்த வேதனையில்
எம் எதிர்காலக் கனவெல்லாம் ஒரு நொடியில் சருகாகி
ஆறமுடியவில்லையே அப்பா! கடமைக்கு மீறிய உங்கள் கரிசனை
இயற்கைக்கு அப்பாற்பட்ட இரக்கம் இதெல்லாம் எமக்கு மட்டும் தானா!
உங்கள் பேர்த்தியும் பக்கத்தில் வந்து பார்த்திடும் வரை
பொறுத்திருக்கவில்லையே அப்பா!
பிஞ்சு முகத்தில் உங்கள் சாயல் நீங்கள் எங்கும் போய்விடவில்லை
எம்முடன், எம் நினைவில், எம் வாழ்க்கை விருட்சத்தின்
ஆணி வேராய் எப்போதும் இருப்பீர்கள் அப்பா!

S.Inkaran,
554 A, Mitcham Road, Croydon,
Cro 3AA, London, U.k.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மகள்- நீரா, மருமகன்- ஐங்கா,
பேர்த்தி- ராம்ஷி.

(3221) (18)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புரோயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/=) ஸ்பேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொடர்பு: 0212226944.

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம் 1973 இல் பிறந்த லண்டனில் P.R உள்ள அச்சுவினி 2 ஆம் பாதம் பாவம் 12½ உயரம் 5'-8'' வரை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0750394152
0214925887

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி, ஆகியவை சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 0786246895, 0770759874

## வீடு வாடகைக்கு

NO. 221, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். நிறுவனங்களுக்கு மிகவும் உகந்தது. வாகனத் தரிப்பிட வசதி, குடிதண்ணீர் வசதிகள் உண்டு. உடன் தொடர்புகளுக்கு T.P: 0212225431, 0112361749
To. 0774940523

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை வேதநாயகம்

### (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை)



வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.98, கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வேதநாயகம் 14.04.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சிவகாமி தம்பதியரின் இளைய புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகமணி- பவளம் தம்பதியரின் மூத்த மருமகனும் பரிமளகாந்தியின் அன்புக் கணவரும் தபேந்திரன் (சமூக சேவைகள் உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), இளங்கோவன் (சுவீடன்), திருமாறன் (சுவீடன்), வசந்தன் (சுவீடன்), காயத்திரி (சுவீடன்), அர்ச்சனா (A/L 2009 கலைப்பிரிவு மாணவி, யா/ திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் த.சற்குணேஸ்வரி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), இ.சுஜீவா (சுவீடன்), தி.சுபாஜினி (சுவீடன்) ஆகியோரின் அருமை மாமனும் த.இலக்கியன், த.இந்துயன், இ.ஆரங்கன் (சுவீடன்), இ.அபினாஷ் (சுவீடன்) ஆகியோரின் நேசமிகு பேரனும் காலஞ்சென்ற வே.கோவிந்தசாமி மற்றும் வே.பாலசண்முகம், காலஞ்சென்ற வே.மகேசன் J.P. (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் பிரியமிகு இளைய சகோதரரும் நா.தணிகாசலம், இ.கனகமலர், நா.அமிர்தநாயகம் (பிரான்ஸ்), நா.இராசநாயகம் (கணக்காளர், மாகாணத் திறைசேரி, வட மாகாணம்), நா.தர்மநாயகம் (லண்டன்), வி.யோகராணி (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்), நா.டெய்சிராணி (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை), காலஞ்சென்ற நா.நவநாயகம் மற்றும் நா.பிரபாகரன் (உரிமையாளர், நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.98, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 2228016.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி/577689) (38-20-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்துவரும் வீதி விபத்துக்களும் உயிரிழப்புகளும்!



ஒவ்வொரு நாளும் ஒன்றுக்கு மேற்பட்ட உயிரிழப்புகள் வீதி விபத்தின் மூலம் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. அத்துடன் பொருள் இழப்புகளும் நீண்டு கொண்டே செல்கின்றன.

வீதி விபத்து அபாயகரமானதும் பெரும் இழப்பீடுகளையும் ஒரு கணப் பொழுதில் ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. சொல்லப் போனால் இந்த விபத்துகள் எத்தனையோ கனவுகளுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் பொறுப்புக்களுடனும் வாழும் மனிதனுக்கு ஒரு கணப் பொழுதில் வாழ்க்கையையே தலைகீழாக மாற்றியமைக்கின்றது.

இவ்வாறு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற வீதி விபத்து ஏற்படுவதற்கான பின்னணி என்ன?

* கடுகதி வேகத்தில் வாகனம் செலுத்துதல், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற வீதிகளில் அதிவேகமாக வாகனம் செலுத்துதல், பொருத்தமற்ற வாகனங்களில் அதிவேகமாகப் பயணம் செய்தல்.

* தூக்கத்தில் வாகனம் செலுத்தல் -

பெரும்பாலும் இரவு வேளைகளில் வாகனம்செலுத்தும்போது தூக்கம் அவர்களை அறியாமலே ஏற்பட்டு அதிகவிபத்துக்கள் நடைபெறுகின்றன.

* மதுபோதையில் வாகனம் செலுத்தல் - சாரதி மது போதையில் வாகனம் செலுத்தும் சந்தர்ப்பங்களில் சாரதியின் புலன்கள் மாறுபட்ட துலங்கல்களை வழங்குவதனால் சாரதி தன்னை மெய் மறந்து வீதியில் வாகனம் செலுத்தும் போது வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

* தலைக் கவசத்தினுள் கையடக்கத் தொலைபேசியை வைத்து உரையாடிக் கொண்டே வீதியில் வாகனம் செலுத்தல் - இந்தக் கலாசாரத்தை இன்று பெரும்பாலான வீதிகளில் காணக்கூடியதாக உள்ளது. வீதியில் தனியே மோட்டார் சைக்கிளில் கதைத்துக்கொண்டே போகிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஏதேனும் மனநோயா என நான் ஆரம்பத்தில் சிந்தித்தேன். பின்னர் தெரியவந்தது தலைக் கவசத்தினுள் கையடக்கத் தொலைபேசி இருப்பது.

இவ்வாறு உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்தும்போது அவருடைய சிந்தனைகள் வேறு திசைகள் நோக்கிப் புறப்படலாம். இதனால், தான் வீதியில் பயணம் செய்கிறேன், வாகனம் செலுத்துகிறேன் என்ற உணர்வுகளிலிருந்து அவர் விடுபடவும் கூடும்.

* சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தல் - அரச மோட்டார், வாகன போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதோர் வீதியில் வாகனம் செலுத்துதல். இதனால் வீதி ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படுவது இல்லை. வீதி ஒழுங்குகள் தெரியாதவர்கள் வாகனம் ஓட்டும்போது விபத்துகள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

* வீதிகளில் எண்ணெய், கிறிஸ் போன்றன வாகனங்களில் இருந்து சிந்துதல் - வீதியில் வருகின்ற வாகனங்கள் எண்ணெய், கிறிஸ், நீர் போன்றவற்றுடன் உராய்வுண்டு தமது பாதையிலிருந்து விலகி விபத்துகளை ஏற்படுத்துகின்றன. வீதிகளில் காணப்படும் எண்ணெய்ப் படிவுகள் வாகனங்கள், பாதசாரிகள் என்போரை விபத்துக்குள்ளாக்கி வருகின்றது. அண்மையில் நாவற்குழிப் பாலத்தில் ஏற்பட்ட விபத்துக்கு அதிகரித்த வேகமும் பாலத்தில் காணப்பட்ட பனிப் பொழிவுமே காரணமாயிருந்தன.

* வீதியின் இருமருங்கிலும் சில இடங்களில் வியாபாரங்கள் இடம்பெறும் போது அங்கு மக்கள் கூடுவர். இந்தச் சந்தர்ப்பங்கள் நிறைய வீதி விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றன.

* பொருத்தமற்ற வீதியில் பொருத்தமற்ற வாகனங்களை செலுத்துதல்- சிறிய வீதிகளின் கனரக வாகனங்கள் செலுத்தப்படுவதால் ஏற்படும் நெருக்கடியால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பொருத்தமற்ற வீதி அமைப்பு முறை. அதாவது பெரும்பாலான கிராமப்புறங்களில் வீதிகள் ஒரு நேரானதாக அமையாமல் வளைவுகள் அதிகம் காணப்படுவதும் வீதி விபத்துகள் இடம்பெறக் காரணமாகின்றன.

* வீதிகள் சீரின்மை - வீதிகள் 30-40 வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளமையும் விபத்துகளுக்கு வாய்ப்பளிக்கின்றன.

சில வீதிகள் கிரவல் மண்ணால் அமைக்கப்பட்டுக் காணப்படுவதால் செந்நிற தூசி படலத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வீதியில் விரைவாக செல்கின்ற வாகனங்களுக்கு எதிரே வருகின்ற வாகனத்தை இனம்காண முடியாது அவஸ்தை ஏற்படுகிறது. இதுவும் ஒரு காரணம்.

* பாதுகாப்பான பாதசாரிக் கடவைகள் இன்மை - குறிப்பாக பல வீதிகளில் பாதுகாப்பான பாதசாரி கடவைகள், நடைபாதைகள் என்பன இல்லை. இவை அதிக வீதி விபத்துகள் ஏற்பட வாய்ப்பு அமைகின்றது.

* வீதிகளில் கால்நடைகள் குறுக்கிடல் - வீதிகளில் வாகனங்கள் பயணிக்கும் போது திடீரென ஊடுருவும் கால்நடைகள் விபத்தை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன.

* பிரதான நகரங்களின் சந்திகளில் சமிக்ஞை விளக்குகள்பொருத்தப்படாமை- பாடசாலை, அலுவலகங்கள் ஆரம்பிக்கும் நேரங்கள், முடிவடையும் நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதிக விபத்து இதனால் ஏற்படுகின்றன.

### கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான வழிமுறைகள்

இவ்வாறு நாளுக்குநாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தி தேவையற்ற உயிர், உடைமை இழப்புக்களைத் தவிர்க்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

இதற்காக வீதிவிபத்து தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டவியலாளர்கள், பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வீதியால் எவ்வாறு செல்ல வேண்டும், என்னென்ன விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதனை சனசமூக நிலையங்கள், கிராமசேவகர் காரியாலயங்கள், சமூக அமைப்புக்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மிக முக்கியமானதாகும்.

சட்டத்துக்கு முரணான வகையில் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்தி வாகன அனுமதிப் பத்திரம் எடுத்தலைக் கட்டுப்படுத்தல். அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவரைச் சட்டத்தின் முன்னால் கொண்டுவரல்.

சட்டத்தை மீறுவோர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். வீதி குறியீடுகளைப் பின்பற்றாமல் வாகனம் செலுத்துவோர், போதையில் வாகனம் செலுத்துவோர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எவராக இருந்தாலும் தவறிழைப்பவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும். இதன் மூலம் தான் விபத்துக்கள் அதிகரிப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

வீதி விபத்துக்கள் தொடர்பான பதாகைகளை பிரதான வீதிகளில் விளம்பரப்படுத்த வேண்டும். மிகமோசமான கொடூரமான விதத்தில் நடைபெற்ற வீதிவிபத்துக்களைச் சித்திரிக்கின்ற படங்களை பிரதான வீதிகளில் விளம்பரப்படுத்துவதன் மூலம் வீதியால் பயணம் செய்பவர்கள், வாகனம் செலுத்துபவர்கள் அந்த காட்சியைக் கண்டவுடன் அவர்கள் உளவியல் ரீதியாக வீதிவிபத்தின் அபாயம் பற்றி சிந்திக்கத் தொடங்குவார்கள். அச்ச உணர்வு ஏற்பட்டு அவர்கள் வீதியால் நிதானமாக வாகனம் செலுத்துவார்கள். இதன் மூலம் வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்தலாம்.

வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டு முறைகளை அமுல்படுத்தி வீதிகளின் தன்மை, மக்களின் பயன்பாடு என்பனவற்றைப் பொறுத்து வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகளை வீதியில் அமைத்தல் வேண்டும். அத்துடன் வீதிக் குறியீடுகளையும் அமுல்படுத்தி உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தலாம்.

நகரங்களின் பிரதான சந்திகளில் தானியங்கு சமிக்ஞை விளக்குகளைப் பொருத்துதல் மூலம் சந்திகளில் ஏற்படும் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும். அத்துடன் போக்குவரத்து நெரிசலையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஏற்கனவே உள்ள வீதிகளைப் புனரமைப்பதன் மூலம் அல்லது வீதிகளை விஸ்தரிப்பதன் மூலமும் வீதியின் அகலம் அதிகரிக்கும் போது வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தலாம்.

நகர போக்குவரத்துத் திட்டமிடல் உத்திகளைக் கையாளல், குறிப்பாக வேகமாக பயணம் செய்தல், இலகுவாகப் பயணம் செய்தல், பாதுகாப்பாகப் பயணம் செய்தல் போன்ற காரணங்களையும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த நகரப் போக்குவரத்துத் திட்டமிடல் அமுல்படுத்த வேண்டும்.

வீதிகள் அமைக்கின்ற போது நேரானதாகவும் உரிய மூலப் பொருள்களை உரிய அளவுப் பிரமாணங்களில் அமைத்தல். அதாவது இயன்றளவு வளைவுகள், நெழிவுகளைக் குறைத்தல் போன்றவற்றின் மூலமும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தலாம்.

வீதிகளில் குறுக்கிடும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

**எஸ்.கஜேந்திரன்**
திட்டமிடல், இறுதிவருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

அதாவது வீதிகளில் கட்டாக்காலியாக நிற்கின்ற நாய்களைக் கட்டுப்படுத்தல், வீதிகளில் நிற்கும் கட்டாக்காலி கால்நடைகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற செயற்பாடுகள் உரிய அதிகாரிகளால் அவசியம் மேற்கொள்ளப்படவேண்டும்.

பிரதான வீதியோரங்களில் வாகனம் நிறுத்துவோர் மற்றும் வர்த்தகங்களில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தலும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்குத் கையாள வேண்டிய நடைமுறைகளாகும்.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த புதிய அரசியல் கொள்கைகளை உருவாக்குவதுடன் அவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

அத்துடன் பொதுமக்களுக்கும் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நகர திட்டமிடலாளர்கள், வீதி திட்டமிடலாளர்கள், சமூக ஆர்வலர்கள் இந்த விடயம் தொடர்பாகக் கூடுதல் கரிசனை காட்ட வேண்டும்.

அவ்வாறு யாரும் அக்கறை காட்டாவிடின் உயிரிழப்புக்கள் தொடரும். விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்ற விழிப்புடன் இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



புராண வித்தகமாமணி

**செல்லையா செகராசசேகரம்**

(யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, குடாரப்பு, செம்பியன்பற்று வாசரும், வைத்தியர், புராணிகர், சோதிடர், பூசகர், மாந்திரீக வல்லுநரும், உயர்சைவ குல திலகரும்)

தோற்றம்: 01.02.1936 மறைவு:28.04.2010

இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அணிஞ்சிலடி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
(39)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## மத்தியஸ்தர் சபை இன்று கூடமாட்டாது

கெருடாவில்,ஏப்.17

வடமராட்சி வடக்கு 249 ஆம் இலக்க மத்தியஸ்தர் சபை சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இன்று கூட விருந்த மத்தியஸ்தர் சபை ஒத்திவைக் கப்பட்டுள்ளது என்று அதன் தவிசாளர் வடிவேலு அறிவித்துள்ளார். எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ம-253)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தசாமி சிவகுமார் (குமார்)



தோற்றம்:
29.06.1960

மறைவு:
17.04.2010

ஆறாத் துயரில் மூழ்கவிட்டு மீளாத்துயில் கொண்ட -எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

மனைவி
ரோசனாதேவி.

## வாடகைக்கு

யாழ். நகருக்கு அருகில் அமைதியான சூழலில் விசாலமான மாடிவீடு வாடகைக்கு உண்டு. கீழ்ப் பகுதி மட்டும் அல்லது முழுவதுமாகக் கொடுக்கப்படும். நிறுவனங்கள், காரியாலயங் களுக்கு உகந்தது. தொடர்பு:
021 2229928, 0779229041

## மரண அறிவித்தல்

**திருமதி இரஞ்சிதமலர் இராசரத்தினம்**



யாழ்ப்பாணம், திருநெல் வேலியைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 32, மாரியம்மன் வீதி யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதமலர் இராசரத் தினம் 16.04.2011 சனிக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சபாபதிப்பிள்ளை - வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வி.இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், ரஜினி, ஜீவராஜா, குமுதா, கீதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருள்மோகன், நளாயினி, விசாகன் ஆகியோரின் மாமியாரும் மதியாபரணம், காலஞ்சென்ற தனபாலன் மற்றும் பரிமளகாந்தி, சற்குணபாலராசா, விமலகாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (18.04.2011) திங்கட்கிழமை நோர்வேயில் நடைபெறும். அன்றைய தினம் இருபாலை இல்லத்தில் துக்க அனுஷ்டிப்பு நடைபெறும்.

0773144636
V.H. ஒழுங்கை, இருபாலை.

தகவல்:
தனபாலன் பால்ஸ்ரீ
(மருமகன்)

## Mitasu

Bicycle and Bicycle Spare Parts




சாதாரண விலையில் உத்தரவாதத்துடன் கிடைக்கும்



**ROMA CYCLE**
No: 111/A, New Moor Street, Colombo 12.
Tel: 011- 5841124

FLEX Graphic

## விற்பனை முகவர் தேவை

பிரபல மென்பான உற்பத்தி நிறுவனத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றனர். புதிய தொழில் நுட்பத்தில் பிளாஸ்டிக் (Pet)போத்தல்களில் அடைக்கப்பட்ட ஷா - கோலா(Shaa Cola) மற்றும் Sogo தண்ணீர்ப்போத்தல்களை யாழ். மாவட்டத்தில் விநியோகம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

தகைமைகள்:

உத்தரவாதம்: பத்து லட்சம் ரூபா

களஞ்சிய வசதி

வாகன வசதி

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Meguway Marketing & Services (Pvt) Ltd.**
Moragahena, Millawa, Horana
T.P: 0718693669/ 0776288542
Office: 034 2254054
Fax: 0342254696

## ஓராண்டில் ஈரவிழிகளுடன்

அன்னை மடியில்
23.01.1981

ஆண்டவன் அடியில்
28.04.2010






செல்வி

**வீமராசா மாதுமையாள்** B.Sc. (agri)

திதி:சித்திரை பூரணை

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்தாயம்மா
இன்று நீ நிழலாய் ஆனாயம்மா
கடைசிவரை உம்முடன் வாழ்வோம் என்று இருந்தோமம்மா
மூச்சுவரை உம் நினைவுடன் வாழ இறைவன் வைத்தானம்மா
மறைந்து இன்று ஓர் ஆண்டு ஆனதம்மா
மறக்க முடியுமா உம்மை எத்தனை ஆண்டானாலுமம்மா.....

463/1 K.K.S வீதி,
யாழ்ப்பாணம். (49,21,25)

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறையில் பிரதான வீதிக்கு அண்மையில் (வேலாயுதம் மகா வித்தியாலயத்துக்கும் உதவி அரச அதிபர் பணிமனைக்கும் இடையில்) மூன்று அறை இரண்டு Hall, குளியலறை, வாகனத் தரிப்பிடத்துடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
உடன் தொடர்புக்கு: 0773866250

## பணிப்பெண் தேவை

கொழும்பில் ஆசிரியர் குடும்பம் ஒன்றுடன் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.
T.P : 0779255382

## நீங்களும் ஒரு இளமாணி/ முதுமாணி பட்டதாரியாகலாம்

External Degree-ALAGAPPA UNIVERSITY (INDIA)

**BA, BBA, B.COM, BSc.,MSc.,MA,MCom,MBA**

தமிழ், ஆங்கிலமொழி மூலம் வெளிவாரி பட்டப்படிப்பை நாம் முழுவதும் நடாத்தி முடிக்கலாம். நேரடியாகவும் தொ.ர ஓர் அரிய சந்தர்ப்பம்

தகைமை : A/L 3 சாதாரண சித்திகள் இப்பட்டப்படிப்பை தொடர்வதற்கு பதிவுகளையும், பாடகுறிப்புக்களையும் எமது கல்வியகத்தினூடாக மேற்கொள்ள முடியும்

Registered and Approved Study Centre
**GENIUS ACADEMY**
Colombo, Kandy, Puttalam, Vavuniya, Jaffna, Trincomalee
Tel : 077 9914260, 011 3134067

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில்.
தொடர்புக்கு : 0777111400

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல வர்த்தக நிலையமொன்றுக்கு பில் கிளார்க், சேல்ஸ்மன் தேவை. அனுபவமுள்ள, ஆர்வமுள்ள வேலையாள்கள் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:0754639743

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை பிரதான வீதியில் (மெத்த கட சந்தி) உள்ள கடை வாடகைக் குண்டு. தொடர்பு கொள்ளவும்:
(3235) 0773866250

## வீடு வாடகைக்கு

இல.9, மருதடி வீதி (செட்டித்தெருவுடன் சேர்ந்தது) நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு. வங்கி மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள், நிறுவனங்களுக்கு முன்னுரிமை.
தொலைபேசி: 0777478147

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். குற்றமற்ற புனர் பூச நட்சத்திரமும் சுவிஸ் (PR) உடையவரும் 1973இல் பிறந்தவருமாகிய மணமகனுக்கு அழ கிய மணமகள் தேவை. உள்ளூர் மணமகள் விரும் பத்தக்கது.
தொடர்பு:
0778552990, 0714552585.

## எமது சிகிச்சைகள் இனி இல்லை நெஞ்சு வலி

புற்று நோய் தணிப்பு
தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள்,
மஞ்சள் காமாலை,
மூட்டுவலி,முதுகுவலி,
ஒற்றைத் தலைவலி,
சுவாசப்பை கோளாறுகள்,
படுக்கைபுண் - நீரிழிவுப் புண்..
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு
நீக்குதல் பக்க விளைவுகள்
இல்லை. சிக்கனமான மூலிகை
மருத்துவம்




இருதய நோயாளர் எதிர்காலத்தில் நெஞ்சு வலி இன்றி சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மருந்தினால் இரத்த ஓட்டம் சீர்பெரும் வலியிலிருந்து உடல் நிம்தி பெருவீர்கள்.

HOTLINE
0777 08310, 011 555 8442

A BOI APPROVED & ISO 9001-2008 QMS CERTIFIED COMPANY

**FAIR PHARMA (PVT) LTD**
Level5/ East Tower, 1 C, World Trade Centre, Col - 01
Phone - +94 11 5 517 807, 5 551 879, 5 558 442
E-mail - fairpharmasrilanka@yahoo.com,
Web - fairpharmasrilanka.com

இலவச மருத்துவ ஆலோசனைகள்

| பருத்தித்துறை | யாழ்ப்பாணம் |
| --- | --- |
| 18.04.2011 | 19.04.2011 |
| ரோயல் விடுதி, வியாபாரி மூலை, செட்டி தெரு | கமலா டிஸ்பென்சரி, 1207 K.K.S வீதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளின் பிரசவம்

**இலங்கையின் போர்க் குற்றங்கள் தனது சொந்த நாட்டு மக்களை வதைத்த கதையையே சொல்பவை. உலகின் மிகவும் முக்கியமான சக்தியான ஐ.நாவே எழுத்து ரீதியில். அறிக்கை வடிவில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் குற்றங்களைப் பகிரங்கப்படுத்தியுள்ளதால் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிரான அழுத்தங்களும் புலம் பெயரிகளின் போராட்டங்களும் அதிகரிக்கக் கூடும்.**

ஏதோ ஒரு சந்தோசத்தைக் கொண்டாடுவதற்காக அறம்புறமான வகையில் 'பார்ட்டி' ஒன்று நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் 20 வயதுக்குட்பட்டவர்கள் தான். 'தண்ணியைக்' கண்ட புளுகத்தில் எல்லோரும் காய்ந்த மாடுகளாகக் கம்பிலே விழுந்தார்கள். வெறி உச்சந்தலை வரை ஏறியது. 'பார்ட்டி' முடிந்து விட்டது. இனித்தான் சிக்கல். ஓசியில் கிடைத்ததால் மூக்கு முட்டக் குடித்தவர்கள் 'எப்படி வீட்டுக்குப் போவது?' என்று குப்புறப்படுத்தபடி யோசிக்கத்தொடங்கி விட்டார்கள்.

''வீட்டில நான் குடிக்கிறதெண்டு தெரிஞ்சால் அவ்வளவுதான்! அப்பா கட்டி வைச்சுத்தான் நொருக்குவார்'' சொல்லியபடி ஒருவன் அழத்தொடங்கி விட்டான்.

மற்றவர்களுக்கும் வீட்டுப் பயத்தில் ஏறியதில் அரைவாசி இறங்கிவிட்டது. வெறிப்பது தெரியாவிட்டாலும் 'மணம்' காட்டிக் கொடுத்து விடுமே? ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு 'நடப்பது நடக்கட்டும்' என்று புறப்படத் தொடங்கினார்கள்.

அதில் ஒருவன் வலுசுழியன். வீட்டில் மாட்டுப்படக்கூடாது என்ற எண்ணத்தில் ஒரு கடையில் நாலைந்து 'பபுள்கம்' வாங்கி வாய்க்குள் தள்ளினான். பிறகு உள்ளங்கையை வாய்க்கு நேரே வைத்து ஊதிப்பார்த்தான்.

குடிபோதை மணம் காணாமல் போயிருந்தது. இயன்றவரை தள்ளாட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு உற்சாகத்தோடு வீட்டுக்கு போனான். ஆனால் வீட்டில் அவன் காலடி எடுத்து வைத்ததுமே தாயின் கூச்சல் மேலெழுந்தது.

''எடேய்! இந்த வயதில குடிக்கிறியோ? குடிச்சாலும் அதை ஏனடா ஊருக்கெல்லாம் காட்டி மானத்தை வாங்கிறாய்?''.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் ஊதிப்பார்த்தான். சாராயநெடி அறவேயில்லை.

'பிறகெப்படி அம்மாவுக்குத்தெரியும்? ஆரும் கண்டிட்டு வந்து சொல்லியிருப்பினமோ'? அவன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் தாய் ஒரு சாரத்தோடு வெளியே வந்து-

''இதைக் கட்டடா''! என்று கோபத்தோடு எறிந்துவிட்டுப் போனாள். அதற்குப் பிறகுதான் அவன் கீழே பார்த்தான். இவ்வளவு நேரமும் சாரம் இல்லாமல் ஊர்வலம் வந்திருப்பது புரிந்தது.

இப்படி என்னதான் திருகு தாளங்கள் செய்தாலும் உண்மைகள் எப்படியாவது பிரசவிக்கவே தீரும். ஆயிரம் கரங்கள் கொண்டு மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை.

2009 இல் வன்னியில் எவருக்குமே தெரியவராது என்ற நினைப்பில் நடந்த ஊழிக் கூத்தின் இருண்ட பக்கங்கள் வெளிக் கிளம்பத் தொடங்கிவிட்டன.

அந்தப் பேரவலத்தை உலகின் கண் முன்னால் மறைப்பதற்கும், தாங்கள் எவ்வித மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் இலங்கை அரசு பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை விடவும், யுத்தக் குற்றங்களைத் தாம் புரிந்திருக்கவில்லை என்பதை 'எண்பிப்பதற்கே' மஹிந்த வாதிகள் கடுமையாகப் போராடவேண்டியிருந்தது.

அதற்காக இலங்கையின் சகல வளங்களும் ஒன்று குவிக்கப்பட்டு, பெருமளவில் பணம் வாரியிறைக்கப்பட்டு, வெவ்வேறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

-நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம்

-வெளிநாடுகளில் அதிவேகப் பிரசாரங்கள்

-முன்னாள் புலி உறுப்பினர்களை வைத்து ''புலிகளே யுத்தக்குற்றத்தில் ஈடுபட்டார்கள். படையினர்தான் மக்களைக் காத்தார்கள்'' என்கிற ரீதியிலான வாக்குமூலங்களைப் பெற்று அதை உலகின் முன் காட்சிப்படுத்தல்.

- இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமென புலம்பெயர் நாடுகளில் தீவிரமாக இயங்கும் அமைப்புகளைச் சீர்குலைப்பதற்கான தந்திரோபாய முன்னெடுப்புகள்.

-புலம்பெயர் அமைப்புகளை புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான கே.பியின் துணையுடன் இயன்றவரை தன் சார்பான நிலைக்கு மாற்றுதல் என்பன அத்தகைய நடவடிக்கைகளில் ஒரு சில.

அரசின் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சர்வதேசமும், ஐ.நா. அமைப்பும் திருப்திப்பட்டதைப் போல காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் அவை இலங்கை அரசின் செயற்பாடுகள் மீது ஐயமே கொண்டிருந்தன.

அதனால்தான் இலங்கை அரசின் மிகக்கடுமையான எதிர்ப்பையும் மீறி, இறுதிக் கட்டப்போரின் போது நிகழ்ந்தேறிய கொடூரங்கள் பற்றி அறிவதற்காக நிபுணர் குழுவொன்றை அமைப்பதில் ஐ.நா. செயலர் பான்கீமூன் ஒற்றைக் காலில் நின்றார்.

எனினும் போர் நிகழ்ந்த சமயத்தில் என்னென்ன நடந்தன என்பதை அறிவதற்காக நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதால் ஐ.நா. நிபுணர் குழு தேவையற்றதொரு விடயம் என இலங்கை விடாக்கண்டனாக நின்றும் பயனேதுமில்லை. இலங்கையின் மிகக் கடுந்தொனியிலான எதிர்ப்புகளையெல்லாம் ஒருபுறத்தில் ஒதுக்கிவிட்டு தன் பாட்டில் காரியத்தில் இறங்கிவிட்டது ஐ.நா. நிபுணர் குழு.

புலம்பெயர் தமிழர் நலன்சார் அமைப்புகள் தாம் சேகரித்த போர்க் குற்ற ஆதாரங்களை ஐ.நாவுக்கு அடுக்கடுக்காக அனுப்பிவைத்தன. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரசபடைகளின் தாக்குதலில் சிதிலமான மக்களின் உடலங்கள், உடைமைகள் என்பவற்றை அப்பட்டமாக சொல்லி நிற்கும் புகைப்படங்கள், சரணடைந்த போராளிகள், புலிகளின் தளபதிகள் என்போரை போர் நியதிகளுக்கு அப்பாற்பட்ட முறையில் சித்திரவதை செய்து, (பெண் போராளிகளை -இசைப்பிரியா போன்றோரை- பாலியல் பலாத்காரத்தின் பின்னர்) படுகொலை செய்த காட்சிகள் அடங்கிய வீடியோக்களும் இந்த ஆதாரங்களுள் அடக்கம்.

அதற்கிடையில் ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கும் வந்து, விசாரணைகளை மேற்கொள்ள இருப்பதாகவும், நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றி அந்த ஆணைக்குழுவைச் சந்தித்துக் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய[illegible] பல மஹிந்த சிந்தனாவாதிகள் 'உரு' வந்தவர்கள் போல ஆடினார்கள். குறிப்பாக எதற்கெடுத்தாலும் மேற்குலகின் மீது நெருப்பெடுக்கும் விமல் வீரவன்ஸ அதீத சன்னதம் கொண்டவராக ஐ.நா. சபையை எப்படியெல்லாம் திட்டமுடியுமோ அப்படியெல்லாம் திட்டித்தீர்த்தார். அரசும் உத்தியோகபூர்வ ரீதியில் தன் எதிர்ப்பைக் காட்டினாலும் ஐ.நா. நிபுணர் குழு வர அனுமதியளிக்கப்படும் என ஈனஸ்வரத்தில் முனகியது.

இல்லாவிட்டால் இன்னும் கடுமையான அழுத்தங்களை சர்வதேசத்திடம் இருந்து சந்திக்கவேண்டியிருக்கும் என்பது அதற்குத் தெரிந்தேயிருந்தது.

அதன் பின்னர் எந்த அசுமாத்தமும் இரு தரப்பிலும் இல்லை. அதெல்லாம் பழங்கஞ்சியான கதைகளாக மாறிவிட்டதாக எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த தருணத்தில் இலங்கை அரசின் வயிற்றில் புளியைக்கரைப்பது போல ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் 'ரைம்ஸ்' பத்திரிகையின் கருத்துக்கணிப்பில் உலகின் சக்திமிக்க தலைவர்கள் பட்டியலில் அமெரிக்க அதிபர் ஒபாமாவையே பின்னகர்த்திவிட்ட பெருமிதத்தில் இருந்த ஜனாதிபதிக்கு (அதற்கும் கூட கோடிக்கணக்கில் பணம் கைமாறியதாகக் கதை!) புதுவருடப்பரிசாக ஐ.நா. தன் நிபுணர்குழு அறிக்கையை அனுப்பி வைத்தது. உலகக் கிண்ண கிரிக்கெட் தோல்வியை விடவும் அதிக இடியை அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு கொடுத்தது.

ஏற்கனவே ஒருசில ஆதாரங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள புலம்பெயரிகள் அங்கு ஜனாதிபதி சென்ற சமயத்தில் அவரைக் கைது செய்யும் உத்தரவைப் பெற முனைந்திருந்தனர்.

தப்பினோம் பிழைத்தோம் என ஓடி வந்த ஜனாதிபதி அதற்குப் பிறகு அமெரிக்காவுக்குச் சென்றபோது மிக இரகசியமாகவே தன் பயண ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். ''நான் சுதந்திரமாக வெளிநாடுகளுக்குச் சென்றுவர புலம்பெயரிகள் விடுகிறார்களில்லை'' என்று ஜனாதிபதி புலம்பியதாகவும் தகவல்.

இந்த நிலையில் ஐ.நா. அறிக்கையும் பகிரங்கமாக இலங்கை அரச படைகள் வன்னியில் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என்பதை பட்டவர்த்தனமாக்கியுள்ளது. ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையில் புலிகள், படையினர் புரிந்த மனித உரிமை மீறல்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

-பொதுமக்களை மனித கவசங்களாக பயன்படுத்தியது.

-தமது பிடியில் இருந்து தப்பிச்செல்ல முயன்ற பொதுமக்களைக் கொன்றமை.

- பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகளில் இருந்து படைக் கருவிகளை இயக்கியமை.

-சிறுவர்களைக் கட்டாயமாக படைகளில் சேர்த்தமை.

- பொதுமக்களிடம் கட்டாயமாக வேலை வாங்கியமை.

- போர் நடைபெறாத பகுதிகளில் தற்கொலைத் தாக்குதல்களின் மூலம் பொது மக்களைக் கொன்றமை.

போன்ற குற்றங்களைச் சுமத்தியுள்ள இந்த அறிக்கை படையினரின் குற்றங்[illegible]மாறு வகைப்படுத்[illegible]

-பரந்தளவிலான பீரங்கித் தாக்குதல்கள் மூலம் பொது மக்களைப் படுகொலை செய்தமை.

- மனிதாபிமான இலக்குகள், மருத்துவமனைகள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்தியமை.

-பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை தடுத்தமை.

-போரில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பொதுமக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் சந்தேகநபர்களின் மனித உரிமைகளை மீறியமை.

- ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சிப்பவர்கள் மீதும், போர் நடைபெற்ற பகுதிகளுக்கு வெளியே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை.

புலிகளை விடவும் படையினரின் குற்றங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதும் அந்த ஐந்தும் மிகவும் பாரதூரமானவை.

தன் சொந்த நாட்டு மக்களையே வதைத்த கதையைச் சொல்பவை. அதுவும் உலகின் மிக முக்கியமான சக்தியான ஐ.நாவே எழுத்து ரீதியில் - அறிக்கை வடிவில்- இலங்கை அரசின் மனித உரிமைகளை மீறும் குற்றங்களை பகிரங்கப் படுத்தியுள்ளதால் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிரான அழுத்தங்களும், புலம்பெயரிகளின் போராட்டங்களும் அதிகரிக்கக்கூடும். மேலும் இந்த அறிக்கையில் சில பரிந்துரைகளும் வழங்கப் பட்டுள்ளன.

அவற்றில் இலங்கை தொடர்பில் ஐ.நா. உடனடியாக சுதந்திரமான அனைத்துலக பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுவும், போர்குற்றங்களுக்கான பொறுப்புக் கூறும் வகையில் இலங்கை நீண்டகாலநோக்கில் செயற்படவேண்டும் என்பதுவும் முக்கியமானவை.

இலங்கை அரசின் இரும்புக் கரங்களையும் மீறி வெளிச்சென்ற ஆதாரங்களே ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் உருவாக்கத்துக்கு வலுச்சேர்த்திருக்கின்றன. அடுத்த வாரம் உத்தியோக பூர்வமாக ஐ.நா நிபுணர் குழு அறிக்கை வெளிவந்த பின்னர் நிலைமை மோசமாகக் கூடும். பழைய பாணியிலேயே இலங்கை இந்த அறிக்கை தொடர்பில் விட்டேத்தித்தனமாக இருக்குமேயானால் அது எதிர்மறையான விளைவுகளைப் பரிசளித்து விடும்.

அப்படியில்லாமல் சர்வதேசத்தின் ஆணைப்படி போர்குற்றங்களை உண்மையாகவே விசாரணை செய்ய முற்பட்டால் அது இன்னும் மோசமான நாற்றமடிக்கும் இலங்கையரசின் கரங்களைக் காட்டிக் கொடுத்துவிடும். இரு புறமும் அடி வாங்கும் மத்தளத்தின் நிலை. என்ன செய்யப்போகிறது அரசு?

**ஔண்யன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் கத்தரிக்காய் தற்போது சந்தையில்

தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கத்தரிக்காய் சந்தைக்கு வந்துள்ளது. இந்த கத்தரியினம் மட்டுவில் பகுதியில் காலபோக நெல் அறுவடைக்கு பின்னர் வயல்களில் பயிரிடப்படும்.

மட்டுவில் கத்தரிக்காய் சிலுவில் அம்பலந்துறை, முதலியார் வயல், மட்டுவில் மேற்குவெளி ஆகிய வயல் நிலங்களில் பெருமளவு பயிரிடப்பட்டுள்ளது. இப் பகுதியில் ஆகக் கூடிய விளைச்சலைத்தரும் கத்தரி தற்பொழுது அதிகளவாக பயன் பெறுமளவுக்கு காய்க்கத் தொடங்கியுள்ளது.

இதேவேளை தற்பொழுது மாலை வேளைகளில் மட்டுவில் பன்றித் தலைச்சிஃண்ணகை அம்மன் கோயில் மேற்கு வீதியில் தற்காலிக மாலைச் சந்தையாக வியாபாரிகள் கூடுகின்றனர். அங்கு மூடை மூடையாக வியாபாரிகளால் கத்தரிக்காய் எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 55 ரூபா தொடக்கம் 65 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (ஓ-131)

## ஒன்பதாம் ஆண்டு நினைவுகளில்...



**அமரர் வைரவி சுபாஸ்**

அன்னை மடியில்
24.10.1950

அநியாய அழிப்பில்
26.05.2002

திதி- சித்திராபௌர்ணமி
(17.04.2011)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்!

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(3244) குடும்பத்தினர்.

## கோப்பாய் கோட்ட அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.17

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் என கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (த-14-72)

## சித்தியடைந்த எம் கிராம மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### தம்பாட்டி, ஊர்காவற்றுறை.



செல்வன் அன்னராசா துஸ்யந்தன்
(2A,3B,2C,S)



செல்வி யோகேஸ்வரன் சுரேக்கா
(2A, 2B,3C,2S)



செல்வி டக்ளஸ் தாரணி
(2A,2B,4C)



செல்வி ஜெயக்குமார் பிரேமினா
(2A,3C,S)



செல்வி மதனமோகன் பிரதீபா
(2A,B,2C,4S)



செல்வி தங்கராசா கேஜலா
(2A, 3C, 3S)



செல்வி பரமேஸ்வரன் பானுஷா
(2A, 5C, S)



செல்வி சுதாதேவன் சுமனா
(2A, 3B,2C,S)



செல்வி கலைச்செல்வன் கலைமதி
(2A,B,5C)



செல்வி விஜயகுமாரன் விஜிதா
(A,B,5C,S)



செல்வி கந்தசாமி கங்கா
(A,B,2C,4S)

2010ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரக் கல்வியைத் தொடரும் எம் கிராம பிள்ளைகளை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களுக்குக் கற்பித்து வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எம் பிள்ளைகள் கல்வியில் மேலும் சிறந்து விளங்கி மேன்மை பெற எம் தெய்வம் தம்பாட்டி, நுனிபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மாளின் பேரருளை வேண்டி நிற்கின்றோம்.

இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு தம்பாட்டி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தம்பாட்டி- பிரான்ஸ் கல்வி அபிவிருத்திக் குழு, தம்பாட்டி.**

# மரண அறிவித்தல்கள்

## ஈஸ்வரியம்மா துரசிங்கம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரசித்த நொத்தாரிஸ் கிருஷ்ணபிள்ளை துரசிங்கம் அவர்களின் அன்பு மனைவி ஈஸ்வரியம்மா கடந்த 13.04.2011 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-பூரணம் தம்பதியரின் மூத்த அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரசிங்கத்தின் அன்பு மனைவியும் இரவீந்திரன், மகேந்திரன் (கனடா), மாலதி (இலங்கை), சுரேந்திரன் (கனடா), ரேவதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் அருட்செல்வம், ஹேமமாலினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களேஸ்வரி, ஆனந்தி (கீதா-கனடா), ராதாமனோகரன், கொன்சிற்றா, அர்னோபிற் (கொன்சி- கனடா), Dr.ஜெயச்சந்திரன் (ஆஸ்திரேலியா), அகிலன் ஆகியோரின் அன்பு மாமியும் வஜிதரா, மதுமிதா (வேணி), பிரசன்னா, ரமணா, சயந்தன், சோபனா, சுபாங்கி, கிஷானி, தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற வசந்தமல்லிகா மற்றும் பத்மாவதி, ஜெயபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 68, சட்டநாதர் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(3151) (34)

தகவல் :
ராதாமனோகரன் (மருமகன்)

## சிறிகாந்தன் நிமலன்



(தரம் 9 ஆம் ஆண்டு மாணவன், யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

நீர்வேலி மேற்கு, கரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறிகாந்தன் நிமலன் நேற்றுமுன்தினம் (15.04.2011) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிறிகாந்தன் - தீராவதி தம்பதியரின் அன்பு மகனும் கிரிதரன், கல்பனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன்,
நீர்வேலி மேற்கு. 0778445133

(3249)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவில் இரு விழிகள்



மலர்வு 06 ★ 05 ★ 1984

உதிர்வு 08 ★ 05 ★ 2009



மலர்வு 01 ★ 02 ★ 1982

**நல்லதம்பிரூபகரன்**
(புன்னை நீராவி, விசுவமடு)

**சுதாகரன் தர்சினி**
கேவில், முள்ளியான்

மறைந்ததோ ஈராண்டுகள்
மறக்கவும் முடியுமா- உங்களை
எங்கள் தம்பியே! எங்கள் அண்ணியே
எங்களைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
மீண்டும் வரமாட்டீர்களா? எங்கள்
உறவுகளாக!
இருவரின் ஆத்மா சாந்தியடைய இந்த நாளில்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
சி.சுகிர்திரா (விசுவமடு)

(40)(சி/577702)

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

யாழ் மாணவர்களுக்கு ..... வேலை வாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு!!!

ISLES International University -UK & MALAYSIA ஆனது யாழ் மண்ணில்
கணினித் துறையில் சர்வதேச தரமுள்ள B.Sc., M.Sc., பட்டப்படிப்புக்களை
வேலைவாய்ப்புடன் ஆரம்பிக்கவுள்ளது.

படித்துக்கொண்டே உழைக்கும் அரிய வாய்ப்பு!

இச் சமூகம் முதல் 30 மாணவர்களுக்கு மட்டும்..

மேலதிக விபரங்களுக்கு:- NORTH LANKA IIT,
#113, NAVALAR ROAD, JAFFNA
WEB: www.iiuedu.org

மேற்படி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசிய கல்வியியற் கல்லூரி 'ராகிங்' விவகாரம்:

# முகில்நிலை ஆசிரியர்களின் விசாரணை அறிக்கை; நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் 'ராகிங்'கில் ஈடுபட்ட முகிழ்நிலை ஆசிரியர்களிடம் உள்ளக விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா உத்தரவிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் நாளை திங்கட்கிழமை விசாரணைகள் நடைபெறும் என்று கல்வியியற் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த மாதம் கல்வியியற் கல்லூரியில் கனிஷ்ட மாணவர்கள் மீது 'ராகிங்'கில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து 15 முகிழ்நிலை ஆசிரியர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன் 3 ஆம் கட்ட விசாரணைகள் கடந்த 6 ஆம் திகதி யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் நடைபெற்றன.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

அதற்கிடையில், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுப் பிரிவினர் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கைகளை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

'ராகிங்'கில் ஈடுபட்ட முகிழ்நிலை ஆசிரியர்கள், தனித்தனியாக விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர் எனவும் கல்லூரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-9)

**காணி தேவை**

மருதனார்மடம் சந்திக்கும் கொக்குவில் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில், கே.கே.எஸ். வீதியில் 4 பரப்புக்கும் மேற்பட்ட அளவில் காணி தேவைப் படுகின்றது.

தொடர்புகளுக்கு: 0773979388
0773557945
(577704) 0773024293

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி கிழக்கில், 03 படுக்கை அறை,சமையலறை, குளியலறையும் பயன்தரு மரங்களுடனும் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:0777207260 ,0750406396
(3246)

**காணி விற்பனைக்கு**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் கச்சேரி-நல்லூர் வீதியில் நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் கூடிய 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:0728952951(3246)

# கேரதீவுக் கடலில் காணாமற்போன மாணவனின் சடலம் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப்.17

கேரதீவு - சங்குப்பிட்டியை இணைக்கும் கடற்பகுதியில் நீராடியவேளை காணாமற்போன உரும்பிராய் மாணவனின் சடலம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் மீட்கப்பட்டது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் கல்விச் சுற்றுலா சென்றிருந்தவேளை மாணவர்களில் ஒருவர் கடலில் இறங்கிய சமயம் காணாமற்போயிருந்தார். இந்தப் பகுதியை மாணவர்கள் ஒளிப்படம் எடுக்க ஆயத்தமானபோது ஒருவர் பின் ஒருவராக மூன்று மாணவர்கள் கடலில் மூழ்கியுள்ளனர்.

அந்தவேளை அவர்கள் மூவரும் அவலக்குரல் எழுப்பியுள்ளனர். அவர்களை அந்தப் பிரதேசத்தில் கடமையில் இருந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் மீட்க முயற்சித்துள்ளனர். தீவிர போராட்டத்தின் பின்னர் இரண்டு மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். சிறிகாந்தன் நிமலன் (வயது 14) என்ற மாணவனைக் காப்பாற்ற முடியவில்லை.

நேற்று அதிகாலையில் இருந்து மீண்டும் அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், கடற்படையினர், பொதுமக்கள் எனப் பலரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த மாணவன் கேரதீவுக் கடலில்சிக்குண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ். கணபதிப்பிள்ளை நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இதன் பின்னர் நீதிவானின் உத்தரவுப்படி சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-15-72)

மஹா கும்பாபிஷேக பெருவிழா

இங்கிலாந்தின் ஸ்கொட்லாண்ட் மாநிலத்தில் கிளாஸ்கே பகுதியில் விற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ மங்கல விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நன்னாளில் மஹா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழா இடம்பெற இறையருள் கைகூடியுள்ளது.

சிவஸ்ரீ நா.சர்வேஸ்வர சிவாச்சாரியாரின் ஆசியுடன் தண்ணீருற்று சிவஸ்ரீ. பத்மகுமார குருக்கள் மற்றும் வல்வெட்டித்துறை சிவஸ்ரீ ம.பராபரக்குருக்கள் ஆகியோரின் தலைமையில் ஏனைய குருமார்களும் இணைந்து மஹா கும்பாபிஷேக சாந்திப் பெருவிழாவை நடத்தி வைப்பார்கள்.

பக்த அடியார்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் இறையருள் கிடைப்பதாகுக!

ஓம் சாந்தி!

கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
**பிரம்மஸ்ரீ**
**ப.மனோகரக் குருக்கள்**
பிரதம குரு
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.

## நீர்வேலியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கோப்பாய் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டது. நீர்வேலி, சிறுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த சோமரத்தினம் கண்ணன் (வயது-44) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. கழுத்தில் துணியால் சுருக்கிடப்பட்டு தொங்கிய நிலையில் இவரது சடலம் காணப்பட்ட [illegible] (ஒ-14-4)

### பிரதேச செயலர் தாக்கப்பட்ட சம்பவம்:

# மன்னாரில் அரச பணியாளர்கள் நாளை பணிப்பகிஷ்கரிப்புப் போர்

மன்னார், ஏப்.17

மன்னார் செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த புதுவருடதினத்தில் இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஏற்பட்ட சச்சரவின்போது மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தாக்கப்பட்டமையைக் கண்டித்து மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த சகல அரச பணியாளர்களும் நாளை திங்கட்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

சைக்கிள் ஓட்டப்போட்டியின் போது எழுந்த சர்ச்சையை அடுத்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வரும் நோக்கத்தில் சம்பவ இடத்துக்குச் சென்ற வேளையிலேயே பிரதேச செயலர் தாக்கப்பட்டார் என்பது தெரிந்ததே.

(ஒ-323)

**முதலாம் ஆண்டு நினைவுகளில்**

**நாகேந்திரன் கிஷாளன்**

கண்குளிர
09.09.2003

கண்ணீர் சொரிய
17.04.2010



கண் இமைக்கும் கணப்பொழுதில்
கண்ணீருடன் கழிந்ததடா ஓராண்டு
உன் பிரிவால் நாம் படும் வேதனை
நரக வேதனையிலும் அதிகமடா
ஓராண்டு ஓராயிரம் ஆண்டானாலும்
உன் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது..

புலவனார் வீதி,
கல்வியங்காடு. (41,23,24)

என்றுமே காயாத
கண்ணீருடன்... உன்
அம்மா, அப்பா, உறவுகள்

## மரண அறிவித்தல்்கள்

### *பியதாஸ் இராஜேஸ்வரி*

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், முத்துஐயன்கட்டு, வலதுகரை, 2ஆம் கண்டத்தை வதிவிடமாகவும் கொண்ட பியதாஸ் இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (15.04.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் -இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், பியதாஸின் அன்பு மனைவியும், வியயெரட்ணம் (வவுனியா), வியயெஸ்வரி(வவுனியா), திருச்செல்வம்(வவுனியா), அசோகன் (கிராம சேவகர், துணுக்காய் பிரதேச செயலகம்), ஜெயரட்ணம்(பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி(முத்துஐயன்கட்டு) ஆகியோரின் அன்புத் தாயும், அரசராணி, சிறி, றாணி, தெய்வா, கலா, அப்பன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முத்துஐயன்கட்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோயில் வீதி,
2ஆம் கண்டம், வலதுகரை, முத்துஐயன்கட்டு. (3253)

தகவல்:
குடும்பத்தினர்.

### *சுப்பிரமணியம் கதிரமலை*



கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கதிரமலை நேற்று (16.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சரவணை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, சிவக்கொழுந்து, ராசம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சற்குணசிங்கத்தின் சகலனும் அன்னம்மா, காலஞ்சென்றவர்களான கந்தையா, மாணிக்கர், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தேவராசா, கதிர்காமநாதன், தேவராணி, புஸ்பராணி ஆகியோரின் சிறிய தந்தையும் இரவீந்திரன், சிவகுமார், பிறேமலதா, பாலகுமாரன், தயாபரன், காலஞ்சென்றவர்களான தசகுமாரன், சுசிகுமாரன், கௌசினி ஆகியோரின் பெரிய தந்தையும் காலஞ்சென்ற திலகவதி மற்றும் அப்புத்துரை, தருமராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.04.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்; நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம். (சி-57778)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

# இறுதிப் போரில் மக்களின் பேரிழப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் உயிரிழப்புக்களை ஏற்படுத்திய வண்ணம் பெரும் எடுப்பிலும் பரந்தளவிலுமான எறிகணைத் தாக்குதலைப் பயன்படுத்தியவாறு, செப்ரெம்பர் 2008 இற்கும் 19 மே 2009 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை இராணுவம் வன்னிக்குள் முன்னேறியது. இந்த நடவடிக்கை வன்னியில் வாழ்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்களைப் பெரும் துன்பத்தில் ஆழ்த்தியது.

330,000 பொதுமக்கள், தொடர்ந்து குறைந்து கொண்டே வந்த பகுதிக்குள் சிக்கிக் கொண்டார்கள். எறிகணை வீச்சுக்குத் தப்பி ஓடினார்கள். ஆனால் அவர்கள் புலிகளால் பணயக் கைதிகளாக்கப்பட்டார்கள்.

ஊடகங்களை அமைதியாக்கவும் போரை விமர்சித்த ஏனையவர்களை அரசு பலவந்தமாக மிரட்டியும் பணிய வைத்தது. அதற்காக கடத்தல் மற்றும் காணாமற் போதல்களைச் செய்வதற்காக வெள்ளை வான்களைப் பயன்படுத்தியது உட்பட பலவித அச்சுறுத்தல்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

### சூனியப் பிரதேசங்கள் மீது கண்மூடித்தனமான எறிகணை வீச்சு

மக்களைச் சென்று ஒன்றுகூடுமாறு தானே வழிப்படுத்திய யுத்த சூனியப் பிரதேசங்களின் மீது இலங்கை அரசே பெருமெடுப்பில் எறிகணை வீச்சை நடத்தியது. கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டதாக வெளியே கூறியதன் பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகப் பகுதி, உணவு விநியோக வழிகள், காயப்பட்டவர்களையும் அவர்களது உறவினர்களையும் ஏற்றிச்செல்ல கரைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல்களின் அருகில் இருந்த இடங்கள் என்பவற்றின் மீதும் அரசு எறிகணைகளைப் பொழிந்தது.

எறிகணை வீச்சால் ஏற்படப்போகும் சேதங்கள் பற்றித் தெரியாமல் இலங்கை அரசு இந்தத் தாக்குதலை நடத்தவில்லை. இழப்புக்கள் குறித்து அரசின் சொந்த புலனாய்வு அமைப்புக்கள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஐ.நா. மற்றும் ஏனைய அமைப்புக்கள் சுட்டிக்காட்டிய போதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இறுதிப் போரின் போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் பாதிப்பில் மிக அதிகமானவை அரச படைகளின் எறிகணைத் தாக்குதலாலேயே ஏறபட்டது.

### வைத்தியசாலைகள் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்

முன்னரங்குகளில் இருந்த வைத்தியசாலைகள் மீது அரசு திட்டமிட்டமுறையில் எறிகணைத் தாக்குதல் நடத்தியது. வன்னியின் அனைத்து வைத்தியசாலைகளும் மோட்டார் மற்றும் ஆட்லறி எறிகணைகளால் தாக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டன. அவை அந்த இடத்தில் இருக்கின்றன என்பது நன்கு தெரிந்தே தாக்குதல் நடத்தப்பட்டது.

போர் நடைபெற்ற இடத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவேண்டிய மனிதாபிமான உதவிகளையும் அரசு நன்கு திட்டமிட்டுப் பிடுங்கிக் கொண்டது. உணவுப் பொருள்களும் மருத்துவ உபகரணங்களும் குறிப்பாக சத்திர சிகிச்சைக்கான சாதனங்களும் தடுக்கப்பட்டதால் மக்களின் பாதிப்பு மேலும் மேலும் அதிகரித்தது.

மறுபக்கத்தில், போர்ப் பகுதிக்குள் சிக்கிக் கொண்டிருந்த மக்களின் எண்ணிக்கையை வேண்டும் என்றே குறைத்து மதிப்பிட்டது.

### எண்ணற்ற மனிதப் படுகொலைகள்

2009 ஜனவரி முதல் மே மாதம் வரையிலான காலத்தில் ஆயிரம் ஆயிரம் பொதுமக்கள் (10,000 முதல் ஒரு லட்சத்துக்கு இடைப்பட்டதான எண்ணிக்கை) கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோர், இறுதி சில நாள்களில் மட்டும் எங்கு, எப்போது என்று சொல்லமுடியாது இடம்பெற்ற மனிதப் படுகொலைகளிலேயே இறந்தனர்.

போர்ப் பகுதிகளில் இருந்து வெளியேறிய பின்னரும் தப்பிப் பிழைத்தவர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் மேலும் துன்பத்துக்கும் இழப்புக்களுக்கும் உள்ளாக்கியது அரசு. விடுதலைப் புலிகள் அமைப்புப் போராளிகளைத் தேடியறியும் நடவடிக்கைகள் எந்தவித வெளிப்படைத்தன்மையோ வெளியாள்களின் பிரசன்னமோ இன்றி நடந்தது.

பிரித்தெடுக்கப்பட்ட சிலர் கிட்டத்தட்ட மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவ்வாறே பிரித்தெடுக்கப்பட்ட பெண்கள் சிலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும் பலர் காணாமற் போயிருக்கிறார்கள். அது பற்றி அவர்களது மனைவிமார்கள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

### மூடப்பட்ட முகாம்களுக்குள் முடக்கம்

இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் மூடப்பட்ட முகாம்களுக்குள் முடக்கப்பட்டனர். அளவில்லாத கூட்ட நெரிசலால் ஏற்பட்ட மிக மோசமான நிலைமை, தடுத்து வைக்கப்பட்டவர்களின் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார உரிமைகளைத் தகர்த்து எறிந்தது. இதனால் அங்கும் பல உயிர்கள் தேவையற்ற வகையில் இழக்கப்பட்டன.

முகாம்களில் இருந்த சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். புலிகள் இயக்கத்தினர் என்ற சந்தேகத்துக்குட்பட்டோருக்கு ஏனைய வசதிகள் அகற்றப்பட்டன. அவர்கள் வெளி உலகத் தொடர்பில் இருந்து துண்டிக்கப்பட்டனர். இந்தக் கையறு நிலையால் அவர்கள் மேலும் முறைகேடுகளுக்கு உள்ளாக்கப்படுவதற்கான ஏதுநிலையைத் தோற்றுவித்தது.

### புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்

போர்ப் பகுதிகளில் மிகப் பெரும் ஆபத்துக்கள் நிலவிய போதும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி மறுத்தனர். மக்களை அவர்கள் மனிதக் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தினர். முன்னேறி வரும் இலங்கை இராணுவத்தினருக்கும் தமக்கும் இடையிலான மனிதக் கேடயங்களாகவும் அச்சமயத்தில் புலிகள் மக்களைப் பயன்படுத்தினர்.

போர் நடைபெற்ற காலம் முழுவதும் கட்டாய ஆள்சேர்ப்பு என்ற கொள்கையைப் புலிகள் நடைமுறைப்படுத்தினர். போரின் இறுதிக் கட்டத்தில் தமது கட்டாய ஆள்சேர்ப்பை இயக்கம் தீவிரப்படுத்தியது. 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் உள்ளிட்ட அனைத்து வயதினரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

தமது பாதுகாப்புக்காக பொது மக்களை பதுங்குகுழிகள் தோண்டுமாறு புலிகள் நிர்ப்பந்தித்தனர். இதனால் பொதுமக்கள் யார் ஆயுததாரிகள் யார், என்று பிரித்தறிய முடியாத நிலைமை ஏற்பட்டது. இதுவும் பொதுமக்களின் மேலதிக இழப்புக்களுக்குக் காரணமானது.

தெளிவான தோல்வி அடைந்த ஒரு போரைத் துரத்திச் செல்வதற்காக இவை அனைத்தும் செய்யப்பட்டன. தமது மூத்த தலைவர்களைக் காப்பாற்ற புலிகள் எடுத்த நடவடிக்கைகளால் பல பொதுமக்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

2009 பெப்ரவரி மாதம் முதல், போர்ப் பகுதிகளில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற பொதுமக்களை மிகமிகக் குறுகிய தூரத்தில் இருந்து சுட்டுக் கொல்லத் தொடங்கியது புலிகள் இயக்கம். இது இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரித்தது.

பெருமளவு பொதுமக்கள் தங்கியிருந்த பகுதிகளில் இருந்து புலிகள் ஆட்லறித் தாக்குதல்களை நடத்தினார்கள். அல்லது பொது மக்கள் பகுதிகளுக்குள்ளும் வைத்தியசாலைகளின் அருகிலும் ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்தினார்கள். இறுதிப் போர் நடைபெற்ற காலம் முழுவதும் போர்ப் பகுதிகளுக்கு வெளியே தற்கொலைத் தாக்குதலை நடத்தும் தமது கொள்கையை புலிகள் தொடர்ந்தார்கள்.

முன்னரைப் போன்று சேதங்களை ஏற்படுத்தக் கூடிய வினைத் திறனை இழந்திருந்தாலும் கூட பொது மக்கள் இலக்குகள் மீது அவர்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தினார்கள்.

இறுதியாக, நம்பத் தகுந்த குற்றச்சாட்டுக்களில் ஐந்து பிரிவுகளில் அரசு கடும் மீறல்களில் ஈடுபட்டதாக நிபுணர் குழு முடிவு செய்துள்ளது.

1. பரவலான எறிகணைத் தாக்குதல் மூலம் பொதுமக்களை அரசு கொன்றது, 2. வைத்தியசாலைகள் மற்றும் மனிதார்ந்த நிலைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தியது, 3. மனிதாபிமான உதவிகளை மறுத்தது, 4. போரால் பாதிக்கப்பட்டவர்களதும் தப்பிப் பிழைத்தவர்களதும் (இடம்பெயர்ந்தோர் மற்றும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் உள்ளிட்ட) மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன, 5. அரசை விமர்சித்தோர் மற்றும் ஊடகங்களுக்கு எதிரானவை உள்ளிட்ட, போர்ப் பகுதிகளுக்கு வெளியே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை.

அதேபோன்று விடுலைப் புலிகளும் 6 வகையான பிரிவுகளில் மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். 1. மனிதக் கேடயங்களாகப் பொதுமக்களைப் பாவித்தது, 2. புலிகளின் பகுதிகளில் இருந்து தப்பிச் செல்ல முயன்றவர்களைச் சுட்டுக் கொன்றது, 3. பொதுமக்களின் இடங்களுக்குள் வைத்து இராணுவ உபகரணங்களைக் கையாண்டமை, 4. சிறுவர்களைக் கட்டாயப்படுத்திப் படைகளில் சேர்த்தமை, 5. கட்டாயப்படுத்தி வேலை வாங்கியமை, 6. தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றமை.

அனைத்துலக மனிதார்ந்த சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மீறுவதற்குப் பொறுப்புக் கூறுவது என்பது வெறுமனே கொள்கையோ தெரிவோ அல்ல; அனைத்துலக மற்றும் உள்ளூர் சட்டங்களின் கீழ் அது ஒரு கடமை.

இந்தப் பாரதூரமான சட்ட மீறல்கள், இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிவதற்காக காத்திரமான விசாரணைகள் மற்றும் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நிற்கின்றன. சந்தேகமற இது நிரூபிக்கப்பட்டால், சர்வதேசக் குற்றங்களுக்குக் முக்கிய காரணமான - இலங்கை இராணுவத் தளபதிகள், மூத்த அரச தலைவர்கள், இராணுவம், புலிகளின் தலைவர்கள் உள்ளிட்ட - அனைவரும் குற்றவாளிகளாக்கப்பட வேண்டும்.

அதேசமயம், மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதல் விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாலும் செல்ல வேண்டும். கடந்த காலங்களில் மனித உரிமைகளையும் மனித மதிப்பையும் அத்துமீறுவதற்குக் காரணமாக அமைந்த அமைப்புக்கள், தனிநபர்களுக்கு அப்பால் •அதற்குத் துணை நின்ற அரசியல் மற்றும் சட்ட ரீதியான காரணங்கள் குறித்தும் பரந்தளவில் அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

பொறுப்புக் கூறுதல் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் உண்மையும் அடைவதற்கானதாக இருக்க வேண்டும்.

அவ்வாறே தனது குடிமக்களின் உரிமைகளை மீறிய விடயத்தில் தனது பொறுப்பு மற்றும் பங்கு குறித்த உத்தியோகபூர்வமான அறிக்கையிடலை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதையும் பொறுக்கூறுதல் வேண்டி நிற்கின்றது.

ஐ.நாவின் கொள்கைக்கு ஏற்ப எந்தவொரு பொறுப்புச் சொல்லும் பொறிமுறையையும் நிபுணர் குழு பரிந்துரை செய்யவில்லை. அதேசமயம் தேசிய கணிப்பீடுகள் மற்றும் மக்களின் அபிலாஷைகளைப் உள்ளடக்கியதாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

எப்படி இருந்த போதும் எந்த ஒரு தேசிய முயற்சியும் அனைத்துலக தராதரத்தை பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்.

நீதியை நிலைநாட்டுவதற்கு நடுநிலையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசுக்குக் கூறப்படவேண்டும்.

### நல்லிணக்க ஆணைக்குழு அனைத்துலக தரத்துக்கு அமைவானதல்ல

இலங்கை அரசு நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு அனைத்துலக தரத்துக்கு அமைவானதல்ல. அதில் ஆழமான குறைபாடுகள் உள்ளன.

இலங்கை ஜனாதிபதியும் ஐ.நா. பொதுச்செயலரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைக்கு ஏற்ப அது திருப்திகரமானதாக இல்லை.

போரின் இறுதிநாள்களில் ஐ.நாவின் அரசியல் அங்கங்களோ அல்லது அமைப்புகளோ வன்னியில் பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறியுள்ளன.

பரிந்துரை: 1

அ. ஆயுதப்போரின் போது இருதரப்பினாலும் மீறப்பட்ட அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்கள் தொடர்பான நீதியான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஆ. இலங்கை தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர் உடனடியாக சுதந்திரமான அனைத்துலக பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரிந்துரை: 2

கீழ் குறிப்பிடும் விடயங்கள் குறித்து இலங்கை அரசு குறுகிய கால (உடனடி) நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (துணைப்படைகளின் களைவு, போரால் பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்த்தல், இறந்த/ காணாமற்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கல், போரில் தப்பிப் பிழைத்தவர்களுக்கு உள சமூக ஆதரவு வழங்குதல், அனைத்து இடம்பெயர்ந்தவர்களையும் விடுவித்து மீள்குடியமர்த்துதல், இயல்பு வாழ்வுக்குத் திரும்பும் வரைக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குதல் ஆகியவை)

பரிந்துரை: 3

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையிலான நீண்டகால நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பரிந்துரை: 4

இலங்கை தொடர்பாக 2009ல் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை திரும்பக் கொண்டுவருவது குறித்து ஐ.நா. மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரைகளில் ஐ.நாவும் இலங்கையும் செய்ய வேண்டியவை தொடர்பாக விரிவான விளக்கக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் வீட்டுத் திட்டப் பணிகள் அடுத்த மாதம் வடக்கில் ஆரம்பம்

## வீடமைப்பு அதிகார சபை ஏற்பாட்டில்

சண்டிலிப்பாய், ஏப்.17

மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ள அரசு, 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கவிருக்கிறது.

இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவிருக்கும் பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபா மானியமாகவும் இரண்டு லட்சம் ரூபா வட்டியில்லாக் கடனாகவும் மூன்று லட்சம் ரூபாவை வழங்கவிருக்கிறது.

அடுத்த மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் இந்த வீட்டுத் திட்டத்துக்கான சகல ஒழுங்குகளையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொடிய யுத்தம் காரணமாகப் பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வீடுகளை இழந்த நிலையில் மீள் குடியமர்த்தப்பட்டு வருகின்றன. வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படாததினால் அநேகமான குடும்பங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறத் தயங்குகின்றன.

இவர்களின் நிலைப்பாட்டை உணர்ந்த அரசு, 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் மீள்குடியேறியவர்களுக்கு ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதுவரை பொது ஸ்தாபனங்களிடமிருந்து வீட்டுத் திட்டத்துக்கான உதவிகளைப் பெறாதவர்கள் மட்டும் கிராம உத்தியோகத்தரின் சிபாரிசுடன் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படுவார்கள். தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு வீடுகளை அமைப்பதற்கு மானியமாக ஒரு லட்சம் ரூபாவும் வட்டியில்லாக் கடனாக இரண்டு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது. (த-115)

# 1.5 மில்லியன் லீற்றர் பெற்றோல் மாதாந்தம் குடாநாட்டில் விற்பனை

## எரிபொருள் நுகர்வு வெகுவாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ். மாவட்டத்தில் தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1.5 மில்லியன் லீற்றர் பெற்றோர் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுவதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட அலுவலக அதிகாரி ஒருவர் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது 50 வீதத்தால் அதிகரித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் பெற்றோல் நுகர்வு அதிகரித்துச் செல்கிறது. பெற்றோல் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புகளைத் தொடர்ந்தும், பெற்றோல் நுகர்வு குறையாமல் அதிகரித்த வண்ண முள்ளது.

அதேபோல் மாதாந்தம் சராசரியாக ஐந்து மில்லியன் லீற்றல் டீசல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. யாழ். மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் இயங்க ஆரம்பிப்பதும் டீசல் நுகர்வின் அதிகரிப்புக்கான காரணமாகும்.

ஒரு மில்லியன் லீற்றர் மண்ணெண்ணெய் மாதாந்தம் சராசரியாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது - என்றார் அவர். (த-14)

# விடுமுறையில் வந்த பல்கலை. மாணவன் சடலமாக மீட்பு!

பல்கலைக்கழக மாணவர் ஒருவனின் சடலம் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தியில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்றது. சம்பவத்தில் தங்கராசா நிரஞ்சன் (வயது-23) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். கொழும்பு பல்கலைக் கழகத்தின் வணிக பீட முதலாம் வருட மாணவரான இவர், அண்மையிலே விடுமுறையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்.

நேற்றைய தினம் கோயில் திருவிழா செல்வதற்காகக் குடும்பத்தினருடன் சென்ற இவர், தான் சற்றுத் தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார். கோயிலுக்கு அவர் வராதமையால் வீடு வந்து பார்த்த போது தூக்கில் தொங்கியபடி சடலம் காணப்பட்டது.

பின்னர் யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் உடலியற் கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டார். மேலதிக விசாரனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-4)

# மோ. சைக்கிள் ஓட்டிக்கு முறிந்தது கால்

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் எதிரே நின்ற டிராக்டர் பெட்டியுடன் மோதி வீழ்ந்தார். இதில் அவரது கால் முறிந்தது. இரு கைகளிலும் காயங்கள். யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நீர்வேலியில் நேற்று மு.ப. 11.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் யாழ்ப்பாணம் சோனகத்தெருவைச் சேர்ந்த எம்.எம்.மிஸ்சான் (வயது 49) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஒ-4)

# வல்லைவெளியில் நேற்றும் விபத்து: இருவர் படுகாயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டர் பெட்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணம் செய்த இருவரில் ஒருவருக்குக் கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. மற்றைய இளைஞருக்குக் கால் முறிவு ஏற்பட்டது.

இவர்கள் இருவரும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் வடமராட்சி வல்லைவெளிப் பகுதியில் நேற்றிரவு 7.15 மணியளவில் இடம்பெற்றது.

இந்த விபத்துச் சம்பவத்தில் ஓட்டோச் சாரதியான யாழ். வண்ணார்பண்ணையைச் சேர்ந்த அன்பழகன் கேதீஸ்வரன் (வயது 29) மற்றும் அதில் பயணித்த யாழ். நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த நவநீதன் கஜன் (வயது 26) ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

எதிர்பாராத விதமாக அவ் வழியே வந்த அம்புலன்ஸ் மூலம் குறித்த இருவரும் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இவர்கள் பயணம் செய்த ஓட்டோ பெரும் சேதத்துக்குள்ளாகியது.

நேற்றுமுன்தினம் வல்லை வெளியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணமானதும் மற்றவர் படுகாயமுற்றதும் தெரிந்ததே. (ஒ-4)



# சந்தியடிச் சோமு

## முதுகெலும்பில்லாதவரின் நரித்தனம்

காணுறவங்கள் எல்லாம் ''என்ன சோமண்ணைய ரெண்டு கிழமையாக் காணேல்லை? பயத்தில ஒழிச்சிட்டாரோ?'' எண்டு நக்கலாக் குடையிறாங்கள். போதாக்குறைக்கு செல்பேசி, கேபிள்பேசி, ஈமெயில்களிலயும் அக்கறையா பலர் விசாரிச்சவையாமென்று பேப்பர்காரப் பெடியன் சொன்னான். கேட்கச் சந்தோசமாதான் இருக்கு பாருங்கோ. ஏதோ என்னாலனத நானும் சனத்துக்குச் சொல்லி இருக்கிறன், அவைக்காக நானும் ஏதோ செய்தன் எண்டு அவையள் நினைச்சிருக்கினம் எண்டதுதானே இதுக்கு அர்த்தம்.

இயந்திரக்கோளாறில பேப்பர் வாறது கொஞ்சம் சிரமப்பட்டுப் போனதாலதான் உங்களச் சந்திக்க முடியேல்ல. வேறயொரு காரணமும் இல்லை.

இந்தத் தள்ளாத வயதில எனக்கென்ன பயம்? நான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லுறதில்லைத்தானே! பிறகேன் பயப்பிடவேணும்? எல்லாம் சரிவரும்; ஒண்டுக்கும் பயம் வேண்டாம். என்னை எப்பவும் என்ர ஈமெயிலில (santhiyadisomug@mail.com) தொடர்பு கொள்ளலாம்.

புதுவருஷம் பிறந்திருக்கு, நல்லதெல்லாம் நடக்குமென்று சொல்லுறாங்கள். உந்த பான் கீ மூனி 'அப்பொயின்ட்' பண்ணின நிபுணர் குழு அறிக்கைய சமர்ப்பிச்சுப் போட்டினமாம் எண்டத யோசிச்சுக் கொண்டு சந்திக்கு வந்தால் அங்கயும் அதுதான் கதை. ''அறிக்கையால ஏதும் நன்மை புட்டுக்கொண்டு வருமோ?'' இது சைக்கிளச்சாத்திக்கொண்டு சந்திக் குந்தில குந்தின நடேசண்ணையின்ர வழக்கமான நக்கல் கேள்வி.

''உந்த முதுகெலும்பில்லாத பான் கீ மூன் எல்லாரின்ர தலையிலையும் மிளகாய் அரைப்பார் இருந்து பாருங்கோவன். என்ன கோதாரிக்கு, தான் பாக்க முதலே எங்கடயாக்களிட்ட குடுத்தவராம்? முதலில தான் நியமிச்ச குழு என்ன சொல்லுது என்டதைத் தான் படிச்சுப்பார்த்த பிறகெல்லோ மற்றாக்களுக்குக் குடுக்க வேணும். மூன் என்னென்டா, தான் படிக்க முதலே ஒரு பிரதிய கொழும்புக்காரரிட்டக் கொடுத்தவையாம். அவங்கள் இப்ப அதையும் வெளியில விட்டுப் போட்டாங்கள். இவரென்ன வெளியில விடுறது நாங்களே விடுறம்; முடிஞ்சதச் செய்து பாருங்கோ! எண்ட மாதிரி இருக்குது கொழும்(ப்)புகாரரின்ர செயல்'' எண்டு மளமளவெண்டு கதிரண்ணை குமுறினார்.

உந்த செய்தியள பேப்பர்களில படிச்சு இப்ப பேப்பர் பார்க்கவே மனமில்லை எண்டு சொல்லிக்கொண்டு பாணுக்கு வந்தார் கம்பஸ் வாத்தியார். ''உந்த ஐ.நாக்காரன் எங்களுக்கு ஒண்டும் செய்ய மாட்டான். எங்கள வைச்சுக்கொண்டு தன்ர பிழைப்பத்தான் நடத்துவான் பாருங்கோ. லிபயாவில உடனடி நடவடிக்கை எடுக்கிறவங்கள், எங்கட சனங்கள் ஆயிரக்கணக்கில் சாகேக்க வேடிக்கைதானே பார்த்துக் கொண்டிருந்தவங்கள். போன கிழமை ஒரு ஐ.நா. கொழும்பு அலுவலகத்தில வேலை செய்யிற என்ர சினேகிதத்தை சந்திச்சனான். அவன் சொன்னான் உந்த எல்லாரையும் நம்ப வைச்சு அறுத்த அறுவான் நம்பியார் பானகீ மூனுக்கு கலியாண பந்தத்தால ஒரு வகையான உறவு முறையாம்.அதுதான் எங்கட பக்கத்து வீட்டு பெரியண்ணையின்ர திட்டம் அப்படியே கன கச்சிதமா நடந்து முடிச்சுதாம்.'' இது கதிரண்ணையின் வாதம்.

போதாக்குறைக்கு பெஞ்சனியரும் வந்து சேர சந்தி நேற்று களைகட்டிச்சுப் பாருங்கோ. உந்த யு.என்காரங்கள் என்னுமொரு கொஞ்சக்காலம் அறிக்கை அது இதெண்டு இழுத்தடிச்சுப் போட்டு பிறகு நடுநிலைமை அது இது என்று ஒன்றும் செய்ய மாட்டாங்கள். இவங்கள் எங்கட பேரால காசுகளைச்சேர்த்துப்போட்டு வெள்ளக்காரங்களைக்கொண்டு வந்து அவங்களுக்கு சம்பளம் கிம்பளமென்று அதை திருப்பிக்கொண்டு போகத்தான் உந்தப் பம்பாத்தெல்லாம்'' எண்டு தன்பங்குக்குக் களத்தை சூடேத்தினார் பெஞ்சனியர். ''சரி சரி ஏதோ எங்கட பேரால கொஞ்சப்பேரெண்டாலும் பிழைச்சுக் கொண்டு போகட்டும் விடுங்கோவன்'' எண்டு நடேசண்ணை ஞானியப்போல சொல்ல, மெல்ல பான் கீ மூனை விட்டுட்டு சந்தி வேற கதைக்கு வந்திச்சு.

நான் போன்கிழமை கனகராயன் குளப் பக்கம் சொந்தங்களைப் பார்ப்பமெண்டு போன கதையத் தொடங்கினன். உடன கதிரண்ணை சொன்னார், வன்னி மக்கள் வருஷம் கொண்டாடுற மனநிலையில இல்லையெண்டு பேப்பரெல்லாம் பறையுது உண்மையோ சோமு எண்டு.

''ஓம், சனம் சந்தோசப்படுகிறதுக்கு என்ன கிடக்கு? வருமானங்கள் வீடு வாசல்லெல்லாம் சீரில்லாம கிடக்கேக்க கொண்டாட்ட மனநிலை என்னண்டு வரும்? ஆனா சனத்தப் பற்றி யாருக்கு என்ன கவலை? சந்து பொந்தெல்லாம் இருக்கிற ஆமிகாம்புகளில ஒரே கொண்டாட்டமாம். பிரிகேட் எல்லாம் பெருமெடுப்பில கொண்டாட்டங்களை றோட்டு நெடுகிலும் ஒழுங்கு செய்து நடத்தினவையாம். சனம்தான் பாவம். சனத்தின்ர பெயரால கொண்டாட்டங்கள் நடக்குது. ஆனால் சனத்துக்குக் கொண்டாட்டம் கிடையாது. அதைவிட ஒரு விஷயம் தெரியுமே? மாங்குளத்திலயும் புத்தருக்குப் புதிசா ஒரு குடியிருப்பு கட்டி முடியுது. இனி வரும் காலத்தில முறிகண்டி மாதிரி அதிலயும் வாகனங்கள் நிறுத்த வேணுமெண்ட கட்டளைகளும் பிறப்பிக்கப்படலாம். எல்லாம் பான் கீ மூனுக்கே வெளிச்சம்'' எண்டு போட்டு நான் வெளிக்கிட்டிட்டன்.

இந்தக் கிழமை வேற ஒரு விசயத்தப் பற்றித்தான் உங்களுக்குச் சொல்ல வேணும் எண்டு நினைச்சனான். முந்தியே ஒருக்கா உங்களுக்குச் சொல்லி இருக்கிறன் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்த நேரம், வடையையும் கொண்டு பலாலிக்கே போன ஒரு (பே)ராசியரியரப் பற்றி. அவர் இப்ப நேரடியாக அலரி மாளிகைக்கே பெடிபெட்டையளையும் கூட்டிக்கொண்டு போய் வந்திருக்கிறார். அதில பெரிய கசமுசா எல்லாம் இருக்காம். விசாரிச்சுக் கொண்டு இருக்கிறன். இன்னும் கொஞ்சம் விஷயம் கிடைச்சோன உங்களிட்ட வந்திடுவன்; கவலைப்படாதேங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

**வேலையாள்கள் தேவை**
சுன்னாகத்தில் இயங்கும் அழகுசாதனப் பொருள்கள், இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் மொத்த, சில்லறை வியாபார நிலையத்துக்குப் பணியாளர்கள் (பெண்கள்) தேவை. தொடர்புகளுக்கு: 0772396810

சுலபமாக நீங்கள்
**ரூபா 50,000/- க்கு**
மேல் மாத வருமானம் பெற
இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிறீம் இயந்திரம்**




கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா soya / வெனிலா venila / சொக்கலேட் chocolate
- சுயமாகவே தயாரிக்கும் திறன். • இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
**Hotlines: 077 391 8870, 077 385 0089**

# தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றி தடுத்து வைத்திருப்பது சரியானது அல்ல

சிறைகளில் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறித்து பிரதம நீதியரசர் அசோக டி சில்வா பிபிஸிக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

போதுமான சாட்சியங்கள் இல்லாவிட்டால் எவரையும் நீண்டகாலம் தடுத்து வைத்திருக்க முடியாது எனவும், பிணையிலாவது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்றுதான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அடுத்த மாதப்பகுதியில் தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்ற இலங்கையின் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா பிரதம நீதியரசர் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் பல ஆண்டுகளாகவே பெரும் பிரச்சினையாகவே இருந்துவருகின்றது. பலர் பல ஆண்டு காலமாக எவ்வித வழக்கு விசாரணைகளும் இன்றி சிறைகளில் வாடுவதாக சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்தும் சுட்டிக் காட்டி வருகின்றனர்.

சிறைக் கைதிகளும் தம்மீது வழக்கு தொடர்ந்து விசாரணை நடத்துங்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் இல்லாவிட்டால் விடுதலை செய்யுங்கள் என்று பல்வேறு வகையான போராட்டங்களும் நடத்தியுள்ளனர். அவர்களின் குடும்ப உறவினர்களும் இவர்களின் விடுதலைக்கு ஆவண செய்யப்படவேண்டுமென அதிகாரிகளிடம் மன்றாடி வருகின்றனர்.

வழக்கு விசாரணைகள் இன்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டதாகவும் அவர் கூறினார்.

**O/L Maths**
கணிதத்தில் A சித்திபெறும் வகையில் வீட்டுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0775088026

**தமிழில் உயர் கல்வி**
பெறுபேற்றுக்கு ஒரே வழி
பிரபல தமிழாசிரியரின் விசேட வகுப்பு
O/L, A/L குழுவாகவும் தனியாகவும் கற்கலாம்.
அழையுங்கள்: 021 7900 668
0774669841
0779385817

*புதிய பிரிவுகள் ஆரம்பம்*
Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes
CHARLES BABBAGE COMPUTER ACADEMY CBCA SRILANKA
கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

# ஆயுதப் புரட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைப்பிரஸ் நாட்டிலிருந்து ஆயுதத் தயாரிப்பு நிறுவனம் ஒன்று ஜோர்தான் ஊடாக அனுப்பி உள்ள மர்மப் பார்ஷல் ஒன்று குறித்த விவரங்கள் வெளியாகியமையைத் தொடர்ந்தே மேற்படி சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் வலுவடைந்துள்ளதாம்.

சிறையில் இருக்கும் அவர், அதற்குள் இருந்தபடியே ஜனாதிபதிக்கு எதிரான ஆயுதப் புரட்சிக்கான சாத்தி யப்பாடுகள் குறித்துத் தனக்கு நம்பிக்கையானவர்களுடன் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டு வருகிறார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே பொன்சேகா ஆயுதப் புரட்சி குறித்த சிந்தனையைக் கொண்டிருந்தார். அத்துடன், உலகின் பல நாடுகளில் இருந்தும் இராணுவத் தளபாடங்களை இரகசியமாகக் கொள்வனவு செய்யும் முயற்சிகளையும் அவர் மேற் கொண்டு வருகிறார் எனவும் தகவல்கள் வெளியாகி உள் ளன என அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-231)

e.com Computer Learning Center
**One Week Training........**
ஒரு வார பயிற்சி......
ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்...
**Diploma in PC Technician**
Free! Software DVD & Tool Kit



**Certificate Courses**
Internet & E-Mail
e-Typing
O/L மாணவர்களுக்கான ICT மீட்டல் வகுப்புக்கள்
Call : 021-7429005, 021-7200902
Head Office : 95A Temple Road, Nallur, Jaffna
Branch : K.K.S Road, Kondavil, Jaffna

கைத்தொலைபேசி **இலவசம்** Antivirus



**PC House PLC**
1 K, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4920572, 0777555855
u_shukoor@pch.lk, jaffna@pch.lk
PC House PLC நிறுவனத்தில் கொள்வனவு செய்யும் Desktop Computer மற்றும் Laptop Computer உடன் Karbonn K.316 கைத்தொலைபேசி மற்றும் Antivirus இனை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துகள்...!
**YOGI'S BEAUTY**
(The Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)
☆ அழகுக்கலை (Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course Advanced Cosmetology (Diploma Course)
☆ நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make Up- Hair Styles) 10 வகையான சாறி கட்டும் முறைகள்.
☆ கேக், ஐசிங், மாச்சீனி மலர்கள் (Birthday Cakes, fondant Structure & Sugar Flowers) பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
எமது நிறுவனத்தில் அளிக்கப்படும் Advanced Facial சிகிச்சைகள் உங்கள் முகத்தில் அம்மைத் தழும்புகள், பள்ளங்கள், கரும்புள்ளிகள் இவைகளுக்கு எமது நவீன Dermabrasion Treatment மூலம் புதுமையான முறையில் சிகிச்சைகள்.
இப்படிப் பல நவீன சேவைகளுடன் மணப்பெண் அலங்காரம் எமது சிறப்பம்சமாகும்.



*Mrs.Yogini Shanmuganathan*
Diploma in Aesthetics & Advanced Cosmetology (INDIA)
Diploma in Advanced Bridal Make - up & Character Make - Up(INDIA)
Diploma in Home Economics (india & Srilanka)
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Phone No: 0212222796, 0213210077, 0777164923, 0718788814.
yogisbeauty@gmail.com

**யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**
**மணவாளக் கோல சகஸ்ர (1008) சங்காபிஷேக விஞ்ஞாபனம்**
**இன்று 17.04.2011 ஞாயிற்றுக்கிழமை**
காலை 7 மணிக்கு கர்மாரம்பம்
காலை 7.30 மணிக்கு யாக பூசை ஆரம்பம்
முற்பகல் 10 மணிக்கு விஷேட திரவிய ஹோமம்
முற்பகல் 10.30 மணிக்கு சங்கு அபிஷேகம்
நண்பகல் 12 மணிக்கு மூலஸ்தான பூஜை
மாலை 5 மணிக்கு விசேட நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்.
மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப்பூசை தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதியுலா வருவார்.
குறிப்பு: ஈழ நல்லூர் உதயசங்கர் குழுவினரும் இணுவையூர் N.R. சின்னராசாவின் புதல்வர்கள் ரவி, சுதா அவர்களும் இணைந்து வழங்கும் நாதஸ்வர, தவில் இசைக்கச்சேரியும் இடம்பெறும்.
உபயகாரர்கள்
S.R.T.சண்முகநாதன்

Quick Learning Course
**Spoken English with Grammar**
Duration 1 Month Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
**18-04-2011**
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES** BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

**Deutsch, Dutch, French, Italian**
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடை பெறுகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
குறிப்பு I:- யூன் மாத ஜேர்மன் எம்பசி பரீட்சைகளுக்கான ஜேர்மன், Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
குறிப்பு II:- நெதர்லாந்து டச், ஜேர்மன் டொச் புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

**காலத்தின் தேவையில் மாபெரும் கண்காட்சி நிகழ்வு**
மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நடத்தும் கண்காட்சி நிகழ்வும் விளையாட்டு விழாவும்
இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 20.04.2011, 21.04.2011 (புதன்கிழமை, வியாழக்கிழமை)
நேரம்: காலை 9 – பி.ப. 5 மணி
➡ பிராந்திய மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகச் செயற்பாடுகளும் விளக்கங்களும்
➡ இலங்கை இராணுவப் பொறியியல் பிரிவினரின் கண்ணிவெடி அகற்றல் உபகரணங்களும் செய்முறை விளக்கமும்
➡ மிதிவெடி விழிப்புணர்வு நிறுவனங்களின் கண்காட்சி உபகரணங்கள்
**அனைவரையும் அணிதிரண்டு வந்து கண்காட்சியைக் கண்டு களிக்க அன்புடன் அழைக்கின்றோம்.**
விழா ஏற்பாட்டாளர்கள், பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், வடக்கு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறுப்புகளை இழந்தால் மீண்டும் வளரச் செய்யலாம்

பாலூட்டிகளில் இழந்து போன கை, கால் உறுப்புகளை மீண்டும் வளரச் செய்ய முடியும் என ஆய்வாளர்களின் புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

பாலூட்டும் இனங்களில் எலி தனது இழந்த உறுப்புகளை வளரச் செய்து கொள்ளும் திறன் கொண்டது என்பது முன்பே ஆய்வாளர்களால் நிரூபக்கப்பட்டு இருந்தது.

தற்போது ஆய்வாளர்கள் டேரன் ஆர் வில்லியம்ஸ் மற்றும் டாவூன் ஜங் தங்களது புதிய ஆய்வில் பாலூட்டிகளின் உறுப்புகள் மீண்டும் வளர்ச்சி பெறுவதற்கான ஆய்வில் வெற்றி கண்டுள்ளனர்.

நீரிலும், நிலத்திலும் வாழும் நீண்ட வால் உள்ள விலங்கை பயன்படுத்தி அவர்கள் தங்களது ஆய்வினை நிரூபத்து உள்ளனர். பாலூட்டிகளின் இழந்த உறுப்புகளுக்கு மீண்டும் வளர்ச்சி பெற எலிகளின் செல்களில் உறுப்புகள் வளர்ச்சி பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முறைக்கு முற்றிலும் மாறாக புதிய முறையை விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்தனர்.

இந்த ஆய்வில் எளிய இரசாயனக் கலவையை மேற்கொண்டு பாலூட்டிகளின் இழந்த உறுப்புகளில் வளர்ச்சி காணலாம் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள புதிய ரசாயனக் கலவை காயம் அடைந்த விலங்குகளின் உறுப்புகளில் விரைவாக குணம் அடையச் செய்கிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட உடல் பகுதியில் தொற்று ஏற்படுவதற்கு முன்னரோ அல்லது காயப் பகுதி மூடப்படுவதற்கு முன்பாக புதிய செல்கள் செலுத்தப்படுகின்றன. இந்த முறையில் சேதமடைந்த உடல் உறுப்பு பகுதிகள் முழுவளர்ச்சி அடைகின்றன என ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

உடல் உறுப்பு வளர்வதற்கு பாலூட்டிகளின் தசைப் பொருள்கள் உயிரியல் மூலப் பொருளாக பயன்படும் என்கிற இந்த விஞ்ஞானிகள் ஆய்வு ஏ.சி.எஸ் கெமிக்கல் பயாலஜி இதழில் வெளியாகியுள்ளது

# மூளை ஸ்கேன் மூலம் அல்சீமர் நோயை முன்கூட்டியே அறியலாம்

அல்சீமர் என்கிற நினைவு தடுமாற்ற நோய் தோன்றுவதற்கு முன்பாகவே, மூளையை ஸ்கேன் செய்து அந்நோயை முன்கூட்டியே அறியலாம் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அல்சீமர் நோய் தாக்கம் வாழ்வின் நடுத்தர வயதுக் காலத்திலேயே ஆரம்பிக்கிறது. இதற்கான வலுவான ஆதாரங்கள் இருப்பதை பிரிட்டன் அல்சீமர் ஆராய்ச்சி அமைப்பு சுட்டிக்காட்டி உள்ளது. அல்சீமர் தீவிரமாக பாதிக்கப்படுவதற்கு முன்பாகவே துவக்கக் கட்டத்திலேயே சிகிச்சை அளித்தால் நோய் பாதிப்பைக் குறைக்க முடியும். இதில் 65 நோயாளிகளின் மூளை செயற்பாடு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது எம்.ஆர்.ஐ ஸ்கேன்களும், மூளையின் அடர்த்திப் பகுதிகளும் அளவிடப்பட்டன. இந்த சோதனையின் போது மூளையின் சராசரி அடர்த்தியில் உள்ள 20 சதவீத நோயாளிகள் அல்சீமர் நோய் தாக்கத்திற்கு ஆளாகி இருந்தது தெரியவந்தது. மூளைப் பகுதி மிக அதிக அடர்த்தியுடன் இருந்த நபர்கள் அல்சீமர் நோய்த் தாக்கம் இல்லாததும் தெரியவந்தது.

பிரிட்டனில் 65 வயதை கடந்த 14 பேரில் ஒருவருக்கு அல்சீமர் நோய் உள்ளது. மூளையை ஸ்கேன் செய்வதன் மூலம் நடுத்தர வயதிலேயே அல்சீமரை கட்டுப்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




# அழகான கூந்தலைப் பெறவேண்டுமா?



இன்றைய காலத்தில் சுத்தமான நீர் இல்லாததாலும், இயற்கை முறையில் தலைக்குக் குளிக்காமல் இரசாயனக் கலப்பு நிறைந்த ஷாம்பு, சோப்பு போன்றவற்றால் குளிப்பதாலும் இளம் வயதிலேயே தலை முடி கொட்டி விடுகிறது.

முடி எளிதாகக் கொட்டி விடுகிறது. ஆனால் அதனை மீண்டும் முளைக்க வைக்கவோ, மேலும் முடி கொட்டாமல் காப்பாற்றுவதோ இன்றைய மருத்துவத்தில் பெரும் சவாலாக உள்ளது.

வேப்பிலை ஒரு கையளவு எடுத்து அதனை தண்ணீர் போட்டு கொதிக்க வைத்து விட்டு மறுநாள் அந்தச் சாறு எடுத்து தலையைக் கழுவிக் கொள்ள வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்தால் முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

வெந்தயத்தை பொடி செய்து அதனை தேங்காய் எண்ணெயில் ஒரு வாரம் ஊற வைக்க வேண்டும். பிறகு தினமும் அதனைக் காலையில் தலையில் தேய்த்து வந்தாலும் முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

சிலருக்கு சிறு வயதிலேயே இளநரை தோன்றும். இவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் நெல்லிக்காயைத் தொடர்ந்து சாப்பட்டு வந்தாலே போதும் இளநரை மாயமாகிவிடும்.

சிலருக்கு முழுவதும் நரையாகிவிடும். இவர்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் தாமரைப் பூ கஷாயம் வைத்து தொடர்ந்து காலை, மாலை என குடித்து வரவேண்டும். முளைக்கீரையை வாரம் ஒரு முறை சாப்பட்டு வந்தால் நரை படிப்படியாகக் குறையும்.

கறிவேப்பிலையை நன்கு அரைத்து தேங்காய் எண்ணெயில் போட்டு காய்ச்சி தலையில் தேய்த்து வந்தால் முடி வளரும். இல்லையென்றால் கரட், எலுமிச்சம் பழச்சாறு கலந்து தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலையில் தேய்த்து வந்தாலும் முடி வளரும்.

# கணித பாடம் தொடர்பான வினாக்களுக்கு விடை தரும் இணையம்

கணித பாடம் தொடர்பாக எழுகின்ற சந்தேகங்கள் மற்றும் பிரச்சனைகளை சில நொடிப்பொழுதுகளில் மிக இலகுவாக தீர்த்து வைக்கிறது இந்த இணையம். மாணவர்களுக்கு இந்த இணையம் மிக பெரிய சேவையினை செய்கின்றது என்றால் அது மிகையாகாது.

இந்த இணையத்தில் கணித பாடம் தொடர்பான உங்களின் வினாக்களை பதிவு செய்து பின்னர் அதன் கீழே பாட அலகினை தெரிவு செய்து பின்னர் என்பதை அழுத்தியவுடன் விடை தோன்றும்.

மிக தெளிவான விளக்கத்துடன் விடையினை பெறும் வசதியும் உண்டு. கணித பாடத்தின் முழு பாட அலகினையும் கொண்டுள்ளமை இதன் மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும்.

அத்துடன் இந்த தளத்தில் உங்களை பதிவு செய்து உங்களின் வினாக்களையும் அதற்கான பதில்களையும் சேமிக்க முடியும். ஏற்கனவே தீர்க்கப்பட்ட பிரச்சனைகளையும் பார்க்கமுடியும்

# இதய நோய் ஆபத்தை மணிக்கட்டின் மூலம் அறிந்து கொள்ளலாம்

குழந்தைகளுக்கு இதய நோய் ஆபத்து உள்ளதை மணிக்கட்டுப் பகுதியின் மூலம் அறிந்து கொள்ளலாம் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். மணிக்கட்டு பெரிதாக உள்ள குழந்தைக்கு இதய நோய் தாக்க அபாயம் உள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உடல் பருமன் அதிகம் உள்ள 500 குழந்தைகளின் எம்.ஆர்.ஐ. ஸ்கேன்களை ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் பெரும் மணிக்கட்டு எலும்பு பகுதியில் இன்சுலின் தடுப்பு 20 சதவீதம் அதிகரித்து இருப்பதை காண முடிந்தது.

குழந்தைகளிடம் மணிக்கட்டு பெரிதாக உள்ள நிலை குறித்து இத்தாலியைச் சேர்ந்த ரோம் சாம்பயன்சா பல்கலைகழக ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர்.

ஆய்வாளர்களில் ஒருவரான டாக்டர் மார்கோ காபசி கூறியதாவது: மணிக்கட்டு அளவிற்கும் இன்சுலின் தடுப்புக்கும் உள்ள தொடர்பு குறித்து ஆரோக்கியமான எடை உள்ள குழந்தைகளிடம் அடுத்தகட்ட ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தார்.

மணிக்கட்டு அளவை வைத்து குழந்தைகளுக்கு ஏற்படும் இதய நோய் தாக்கத்தை அறிய இந்த ஆய்வு உதவியாக இருக்கும் என அமெரிக்க ஹார்ட் அசோசியேஷன் இதழில் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 17.04.2011 முதல் 23.04.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வழியில் செலவுகளை, சிரமங்களைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவை எதிர்கொள்ளலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம், பிள்ளைகள், மாமன், மைத்துனர்களின் கோரிக்கையை நிறைவேற்றுதல், வீடு பராமரிப்பு, கட்டடப் பணிகள், பொலிஸ் தொடர்பான வகையில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம்.வழக்குகள் விவகாரங்களில் அனுகூலம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பெண் பிள்ளைகளின் கோரிக்கைகளை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசுவோர் நீங்கள் கேட்ட உதவியைச் செய்வர். குழப்பங்கள், தடுமாற்றங்கள், உடல் உபாதைகள் போன்றவற்றைச் சந்திக்கலாம். பணவரவு உண்டு.

### இடபம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர் பயணம் செல்லலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உங்கள் நலனில் அக்கறை கொண்ட சிலரைச் சந்திப்பீர்கள். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். ஆசைப்பட்ட பொருள்களை வாங்குவீர்கள். எந்தக் காரியமும் தங்கு, தடையின்றி நடைபெறும். பிள்ளைகளின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். பூர்வீக சொத்துகளால் ஆதாயம் பெறலாம். மனைவி வழி உறவுகள் நீங்கள் கேட்ட உதவியைச் செய்யலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் அனுகூலம் உண்டு. நிலம், பூமி வாங்கப் போட்டத் திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. நெடுநாளைய சில பிரச்சினைகள் முடிவுக்கு வரும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். அடிக்கடி ஏதோ ஒரு விதமான கவலைகளை ஆள்கொள்ளும். இழப்புகளை, கடன் பிரச்சினைகளை நினைத்து கவலைப்படக் கூடிய நிலைமை உருவாகும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்ற வழிகளில் பணம் கரையும். அலைச்சல், திரிச்சல், தண்டச் செலவு நேரும். திடீர் பயணம் செல்லலாம்.

### மிதுனம்

மனதில் இனம் புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். கைமாத்தாக, கடனாக கொடுத்த பணம் திரும்பி வரும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். மன அமைதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். தொடர்ச்சியாக ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் சூழ்நிலை உருவாகும். தொழிலில் திருப்தியற்ற நிலைமை காணப்படும். கொடுக்கல் வாங்கல்களை சமாளிப்பது, பெரும் பிரச்சினையாக இருக்கும். பணிபுரிவோர் மற்றவர்கள் செய்த தவறுக்கு கூட, பொறுப்பேற்கும் சூழ்நிலை உருவாகலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் உண்டு. பணவரவுகளைப் பெறலாம். உற்சாகமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். வேலைப்பளு கூடும்.

### கடகம்

செலவு, அலைச்சல் உண்டு. பணவரவுகள் தொடர்பான முக்கிய செய்திகளைக் கேட்கலாம். குடும்ப உறுப்பினர்களிடம் கண்டிப்பாக நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். ஆன்மிக நாட்டம் உண்டாகும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பெண்கள் வழியில் உதவி கிடைக்கும். சில விடயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயற்படுவீர்கள். வெறுப்பு, விரக்தி விலகி தன்னம்பிக்கை அதிகரிக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சிலருக்கு தொழில் ரீதியான ஆதாயம் மூலம் பெரும் தொகை கிடைக்க வாய்ப்பு உண்டு. மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் இல்லாமல் நினைத்த காரியங்களை தைரியமாக சாதிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். சகோதரிகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். கலகலப்பான அனுபவங்களை அவ்வப்போது எதிர்கொள்ளலாம். சகோதரர்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையும். சில பிரச்சினைகளை நினைத்து குழம்புவீர்கள். பணவரவு உண்டு.

### சிங்கம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். மாற்று மொழி பேசும் நண்பர்கள் மூலம் சில உதவி கிடைக்கலாம். கனிவான பேச்சுக்களால் சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். செலவுகளைச் சந்திக்கலாம். பல நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். அரசியல்வாதிகளுக்கு செலவுகள் அதிகரிக்கும். தந்தை வழியில் மனக்கசப்பு வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். உடன் பிறப்புக்கள், பங்காளிகள் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு எரிச்சல் உண்டாக்குவர். பொலிஸ் தொடர்பான வகையில் தொல்லைகள் உண்டு. நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் தடை ஏற்படலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வரலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், சகோதரிகளின், பெண் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுதல், வாகனப் பராமரிப்பு போன்ற வகையில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். பெண்கள், குடும்ப உறுப்பினர்களிடம் கோபத்தை காட்டாமல் இருக்க வேண்டும். மனதில் சந்தோஷம் குடிகொள்ளும். அடுத்த சில நாள்களுக்குப் பின் வரவேண்டிய பணவரவு திடீரென வரலாம். வெளியூர் பயணம் செல்லலாம்

### கன்னி

திட்டமிட்டபடி சில காரியங்கள் நடக்கும். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். கடன் மிகுதிகள் வசூலாகும். பெரிய மனிதர்கள் சிலரின் உதவி கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். விருந்து, விசேஷங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழில் ரீதியாக எதிர்பார்த்த இடமாற்றங்கள் கிடைக்கும். பிள்ளைகள் உங்களின் எண்ணம் போல நடந்து பெருமை சேர்ப்பர். வளர்ந்த பிள்ளைகள் மூலம் வருமானம் பெறும் வாய்ப்பு உருவாகும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. இருந்தாலும், கணவன், மனைவியர் கடுமையான வார்த்தைகள் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். எந்தக் காரியத்தையும் ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். அதேநேரத்தில், திட்ட மிடாத வகையில் சில வேலைகளைச் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். அரசு தொடர்பான காரியங்கள் இழுத்தடிக்கலாம். உறவுப் பெண்கள், சகோதரிகள், பெண் பிள்ளைகள் வழியில் சில மனக்குறைகள் உருவாகலாம். திடீர் செலவுகளால் பணப்பற்றாக்குறை உருவாகும். பணவரவுகளைப் பெறலாம்

### துலாம்

செய்ய நினைத்த வேலைகளைச் சோம்பலால் மாற்றி அமைக்கலாம். ஆன்மிக விடயங்களில், ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சில காரியங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளும் வரலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சகோதரர்கள், சகலைகள், பங்காளிகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். விவசாயிகள் விளைபொருள்கள் விற்பனையால் கூடுதல் லாபம் பெறலாம். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். விருந்து, விசேஷங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பழைய வாகனங்களை மாற்றிப் புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். செலவுகள் அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கும். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். செலவு, அலைச்சல் உண்டு

### விருச்சிகம்

எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். கைமாத்தாக, கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போலத் தோன்றினாலும், இறுதியில் சாதகமாக நடக்கலாம். பல நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். தேவையான பணத்தை எந்த வகையிலாவது புரட்டிக் கொள்வீர்கள். நீண்ட தூரப் பயணங்கள், வெளிநாட்டுப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் நீங்கி, அவர்கள் மூலம் ஆதாயம், நிம்மதி பெறலாம். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்விற்கு வரும். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்களால் சிரமங்களைச் சந்திக்கலாம். அவர்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யாமல் கையை விரிக்கலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.

### தனுசு

சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். உங்களுக்காகவோ, குடும்ப உறுப்பினர்களுக்காகவோ சில பொருள்களை வாங்குவீர்கள். நண்பர் ஒருவருக்காக மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு போன்றவற்றை சந்திக்கலாம். பயணங்களின் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். வேலை நெருக்கடிகள் தொடரும். நீங்கள் நன்றாக வேலை செய்வீர்கள் எனக் கூறியே, மற்றவர்கள் உங்கள் தலையில் பணியை சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்வர். அதேநேரத்தில், உழைப்புக்கு ஏற்ற ஆதாயம் கிடைப்பது கடினமே. கணவன், மனைவி உறவில் அடிக்கடி மனஸ்தாபம் ஏற்படலாம். ஒருவரை ஒருவர் குறை சொல்லி விமர்சிப்பதும் தொடரும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பொறுமை, நிதானத்தை இழக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழலாம். சிலர் மீது கோபப்பட்டுப் பேசி விட்டு, பின்னர் வருத்தம் அடைவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். காரிய வெற்றி உண்டு.

### மகரம்

சிலரிடம் கைமாத்தாகவோ அல்லது கடனாகவோ கொடுத்த பணம் திரும்பி வரலாம். உறவினர் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். போட்டி, எதிர்ப்புகள் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கட்டளைகளை சரிவர நிறைவேற்றி பாராட்டுப் பெறுவர். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளை திருப்பிக் கொடுப்பீர்கள். பணப்பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வரவுகளை மீறிய செலவுகள் தொடரும். பிள்ளைகள் பொறுப்பில்லாமல் செயற்பட்டு, உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கலாம். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் உதவி கேட்டு நச்சரிக்கலாம். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவியின் , பெண் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும்.

### கும்பம்

பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகளை சந்திக்கலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலை கொள்வீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். சக ஊழியர்கள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். தந்திரமான செயற்பாடுகள் மூலம் ஆதாயம் பெறலாம். எந்த வேலையிலும் முத்திரை பதிக்க முற்படுவீர்கள். விலை உயர்ந்த ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும். இனிய பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வீட்டிற்காக பல நாள்களாக வாங்க நினைத்த பொருள் ஒன்றை வாங்குவீர்கள். அரசு காரியங்கள் தங்கு தடையின்றி அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தை வழியில் உதவி கிடைக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். சிரமங்கள் இருந்தாலும், திட்டமிட்டபடி சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். எதிலும் கவனம் அவசியம்.

### மீனம்

மற்றவர்கள் வேலைக்காக அவர்களுடன் சேர்ந்து நீங்களும் அலைய நேரிடலாம். உறவினர்கள் வருகையால் உங்களின் வழக்கமான பணிகளில் மாற்றங்களைச் செய்யலாம். உங்களுக்கு தெரிந்த ஒருவரை நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பிறரை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சில வேலைகளை செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். வீண் பயம் உண்டாகும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம். கோபம், வேகத்தை கட்டுப்படுத்த வேண்டும். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளால் அடிக்கடி, கோபம் எரிச்சல் அடையலாம். சகோதரர்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வகையில் உதவிகள் கிடைப்பதை விட, உபத்திரவங் களையே சந்திக்க நேரிடலாம். தந்தை வழியிலும் சிரமங்கள், இடர்பாடுகளை எதிர்கொள்ளலாம். பெண்கள், நீண்ட தூரப் பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், கேளிக்கை, கொண்டாட்டங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்ற வகைகளில் பணம் கரையும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் திருப்தி இருக்காது. பணவரவு உண்டு. ஊக்கம், உற்சாகம் கூடும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org